விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
(C-5128)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 24 வெள்ளிக்கிழமை (08.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 202

# பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையில் அமைவதே பொருத்தம்

## துறைசார்ந்தவர் கூடி நேற்று முடிவு

**(யாழ்ப்பாணம்)**

**வடக்கிற்கான பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதே பொருத்தமானது என துறைசார்ந்தவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி தமது கருத்தை முன்வைத்தனர். இந்த முடிவை தமிழ் மக்களின் நலன்கருதி தமிழ் அரசியல்வாதிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.**

(23ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த தலைமையில் 'நிழல்' அமைச்சரவை அமைப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொது எதிர்க்கட்சியினரின் 'நிழல்' அமைச்சரவை நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் வைத்து இந்த நிழல் அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது.

இதன்படி நிழல் எதிக்கட்சியின் அமைச்சரவையில் நிழல் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு பௌத்த சாசன மற்றும் பாதுகாப்பு அமைச்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

நிழல்பொருளாதாரதுறை அமைச்சராக தினேஷ் குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். நிழல் கல்வி அமைச்சராக டளஸ் அழகப்பெரும பெயரிடப்பட்டுள்ளார்.

நிழல் நிதியமைச்சராக பந்துல குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். நிழல் வெளியுறவு அமைச்சராக நாமல் ராஜபக்ஷவும், பெருந்தெருக்கள் துறை அமைச்சராக சமல் ராஜபக்ஷவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிழல் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சராக ரஞ்சித்

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு முதலமைச்சரிடம் ராஜித நலம் விசாரிப்பு

(யாழ்ப்பாணம்)

உடல் சுகவீனம் காரணமாக சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண முதலமைச்சரினை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தின நேற்றையதினம் நேரில் சென்று நலம் விசாரித்து சென்றுள்ளார்.

04ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் பொலிஸாருக்கு எதிராக 6 மாதத்தில் 15 முறைப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கடந்த 6 மாதங்களுக்குள் பொதுமக்களால் பொலிஸாருக்கு எதிராக 15 முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதில் 10 முறைப்பாடுகள் யாழ் மாவட்டத்தில் உள்ள பொலிஸாருககு எதிராகவே பொதுமக்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் கடந்த 6 மாதங்களுக்குள் பொதுமக்களால் பொலிஸாருக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகளில் பொலிஸார் விசாரணை நடவடிக்கைகளில் அசமந்த போக்கில் இருந்ததாக 10 முறைப்பாடுகளும் அதிகார துஷ்பிரயோகம் செய்த

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.போதனாவில் தாதியர்கள் இன்றிலிருந்து பணிப் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக்கூட பொறுப்புத் தாதி விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகம் பக்கச்சார்பாக நடந்துகொள்வதாக குற்றஞ்சாட்டியுள்ள யாழ்.அரச தாதி உத்தியோகத்தர் சங்கம் இன்று காலை 7 மணி தொடக்கம் தாதியர்கள் அனைவரும் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அரச தாதி உத்தியோகத்தர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு, யாழ் போதனா

23ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ வசமிருந்த வீதி விடுவிப்பு


(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு பகுதியில் உள்ள வல்லை - அராலி வீதியில் கட்டுவன் சந்திவரையிலான வீதி நேற்றையதினம் இராணுவத்தினரால் பொதுமக்களின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## "மீனவர் பிரச்சினையை தீர்க்க இந்தியாவுடன் போரிட முடியாது"

(கொழும்பு)



இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினையை தீர்ப்பதறகாக இந்தியாவுடன் போர் தொடுக்க முடியாது என்று தெரிவித்த பிரதமர் ரணில் வக்கிரமசிங்க, இந்த வருட இறுதிக்குள் இப்பிரச்சினைக்கு முடிவு எட்டப்படும் என்றும் உறுதியளித்தார்.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின

23ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
உயிரியல் பகுதி II
இணைந்த கணிதம் பகுதி I,II



உள்ளே...

## தம்பதியினருக்கு பிணை அனுமதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், சிவநகர் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகளான தம்பதியினருக்கு வவுனியா நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை வவுனியா நீதவான் நீதிமன்ற நீதிபதி

23ஆம் பக்கம் பார்க்க....

## சுதேச வைத்திய தலைநகராக கிளிநொச்சி உருவாக்கப்படும்

### வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுதேச மருத்துவத்தின் தலைநகராக கிளிநொச்சி மாவட்டத்தை உருவாக்குவதற்கான திட்டங்களை செயற்படுத்தவுள்ளதாக வட மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நச்சுத்தன்மையற்ற மருந்துகள் பற்றிய அரச பொறிமுறையினை அறிவூட்டும் மாவட்டவேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரட்ன தலைமையில் நேற்றையதினம் யாழ் மாவட்டச்

04ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்றங்களை ஆராய பொது எதிரணி எதிர்ப்பு.

(கொழும்பு)



நாட்டில் இறுதிக்கட்ட போரின் போது இடம்பெற்றதாக கூறப்படும் போர் குற்றங்கள் சம்பந்தமாக ஆராயவதற்கு உண்மை கண்டறியும் ஆணைக்குழுவொன்றை அமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை கண்டிப்பதாக கூட்டு எதிர்க்கட்சிகளின அமைப்பு சார்

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### விஞ்ஞானபீடம்

விஞ்ஞானத்தில் பொதுப் பட்டத் தேர்வு - 2015 நிலை 1G,2G,3G
கணனி விஞ்ஞான பட்டத் தேர்வு - 2015 நிலை 1S,2S,3S,4S
விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டத் தேர்வு - 2015 நிலை 3M,4M
பிரயோக விஞ்ஞான பட்டத் தேர்வு - 2015 நிலை 4X

### முதலாம் அரையாண்டு கற்கைநெறி இறுதித் தேர்வு

முதலாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வுகள் (End of Course Examination) ஆவணி 2016 இல் ஆரம்பமாகும்.

இவ்வலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப்படிவங்களை தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் 2016 ஆடி 15 ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

05.07.2016 (சி-5136) பதிவாளர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. சிவசம்பு மகேந்திரராசா
B.A, Spl. , Trd, P.G.D.E, M.A (Econo),S.L.P.S III

திரு. நாகேஸ்வரன் பிரியந்தன்
(முன்னைநாள் ஆசிரியர்)
Dip.in. IT, S.L.P.S III

எமது வித்தியாலய ஆசிரியர்கள் தரம் III அதிபர் தர போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் நியமனம் பெற்றுள்ள
திரு. **சிவசம்பு மகேந்திரராசா**
திரு. **நாகேஸ்வரன் பிரியந்தன்** (முன்னைநாள் ஆசிரியர்)
இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி ஒன்றியம்
கிளி/கிளிநொச்சி ம.வி

(சி-5132)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### வீட்டுபணிப்பெண் தேவை

கொழும்பில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை

தொடர்புகளுக்கு
**077 480 9019**


### யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

எமது பாடசாலையில் பொருட்கணக்கெடுப்பின் போது பழுதடைந்ததாக இனங்காணப்பட்ட பொருட்கள் 20.07.2016 அன்று ஏலத்தில் விற்கப்படவுள்ளன. விற்கப்படும் பொருட்கள் தொடர்பான தகவல் யாவும் பாடசாலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஏலவிற்பனையில் கலந்துகொள்ள விரும்புவோர் 18.07.2016 திங்கட்கிழமை 9.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை பொருட்களை பார்வையிடமுடியும் என அறியத்தருகின்றோம்.

— அதிபர்

(சி-5135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



94-வது சர்வதேச கூட்டுறவு தினவிழாவை முன்னிட்டு இலங்கை தேசிய கூட்டுறவுச்சபையும், கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து நடத்திய நிலையான மாவட்டக் கூட்டுறவுச் சபை தெரிவில் கூடுதலான புள்ளியைப் பெற்று தேசிய மட்டத்தில் முதலாவது நிலையான மாவட்டக் கூட்டுறவுச் சபையாக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபை தெரிவு செய்யப்பட்டு 2016-ம் ஆண்டு யூலை மாதம் 2-ம் திகதி தாமரைத் தடாகக் கலையரங்கில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு தினவிழாவில் கூட்டுறவு அமைச்சர் கௌரவ ரிசாத் பதியூதீன் அவர்களால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.


இச்சபையின் வெற்றிக்கு காரணமான தமது வாழ்நாளை அர்ப்பணித்த முன்னாள் கூட்டுறவாளர்களின் சேவைகளையும், தற்போது சபையின் வளர்ச்சிக்காக கருத்துடன் சேவையாற்றி வரும் கூட்டுறவாளர்களையும், அனைத்து அங்கத்துவ சங்கங்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பையும், இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் மனம் கொள்வதோடு இச்சபையை தோற்றுவித்த கூட்டுறவுப் பெரியார் அமரர் **வீரசிங்கம்** அவர்களின் ஆத்மா என்றென்றும் பலமாக இருந்து வழிகாட்ட பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

கூ.சபை ஊழியர் நலன்புரி சங்கம்,
கூ.சபை ஊழியர் சி.க.வ.கூ. சங்கம்.
யாழ்ப்பாணம்.

(சி-5137)

# மரண அறிவித்தல்

## கதிர்காமர் செல்லையா



வரணி நாவற்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமர் செல்லையா அவர்கள் 06.07.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர்-சின்னம்மா தம்பதியினரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற கிட்டினர்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பொன்னாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கந்தசாமி (முன்னாள் அரச நில அளவை உதவியாளர்), கதிர்காமசேகரம் (பிரான்ஸ்), கணேசலிங்கம் (பிரான்ஸ்), செல்வராணி, அகிலாவதி (சுவிஸ்), வசிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சிதபவானி (ஆசிரியை மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்), தர்மவதி (பிரான்ஸ்), இந்திராணி (பிரான்ஸ்), இராசேந்திரன், ஜெயக்குமார், ராதிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷ்யந்தன்-சுமங்கலி (சாரதி-நீர்பாசன திணைக்களம், திருகோணமலை), சுஜிந்தன் (சவுதி), பகிரூபன், சுஜிவா (பிரான்ஸ்), மிதுஜா (கிழக்குப் பல்கலைக் கழகம்), விதுஜா (பிரான்ஸ்), கவிகரன் (பிரான்ஸ்), செந்தூரன் (பிரான்ஸ்), துசிந்தன் (பிரான்ஸ்), சுகந்தன் (பிரான்ஸ்), சுகிர்தன் (பிரான்ஸ்), நிறஞ்சன் (யாழ். பல்கலைக்கழகம்), நிறோஜன் (யாழ்.பல்கலைக்கழகம்), நிதுஷா, நிவாஸ், டிலுசா (சுவிஸ்), டிலக்சி (சுவிஸ்), ஜெனிசன் (சுவிஸ்), கவினா, கஜோனா, அபிஷா ஆகியோரின் பேரனும், கோபிகனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10.07.2016 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று குடமியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

நாவற்காடு,
வரணி.

தகவல்:-
குடும்பத்தினர்


(5155)

# அரச படையினரை பலிகொடுக்க சூழ்ச்சி

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

**போரின் போது இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு அரச படையினரை பலி கொடுக்க சிலர் முயற்சித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.**



உரையாற்றும் போதே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். (இ-10)

அதேவேளை ரணில் - மைத்திரி அரசாங்கம் மேற்கொண்டுவரும் புதிய அரசியல் சாசனத்தில் வார்த்தை ஜாலங்களை அடிப்படையாகக் கொண்ட நாட்டை துண்டாடும் சதி முயற்சியொன்றும் இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ள மகிந்த, அதனால் பௌத்த மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பை அண்மித்த புறநகர் பகுதியான மொறட்டுவை ஸ்ரீ போதிராஜாராம விகாரையில் நேற்று முன் தினம் புதன் கிழமை இரவு நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு

## மகிந்தவுக்கும் சந்திரிகாவுக்கும் இனி அரசியலுக்குள் இடமில்லை



முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷவும் சந்திரிகாவும் இனி ஜனாதிபதியாக முடியாது எனவும், புதியவர் ஒருவரே வருவார் எனவும் நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், எதிர் வரும் தேர்தலில் புதியவர் ஒருவரை நியமிக்க ஸ்ரீ.சு. கட்சி முடிவெடுக்க உள்ளதாக கூறினார்.

மைத்திரிபால சிறிசேனவுக்கும், மகிந்த ராஜபக்ஷவுக்கும் நன்கு தெரிந்த ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க உள்ளதாக அறிவித்தார். ஸ்ரீ.சு.கட்சி ஆட்சியில் இருக்க வேண்டுமானால் இந்த இருவருக்கும் தெரிந்த ஒருவரே ஜனாதிபதியாக வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ராஜபக்ஷக்கள் ஜனாதிபதியாக வருவார்களா? என ஊடகவியலாளர்கள் இதன் போது கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் வரலாமென பதிலளித்தார்.

மேலும் அர்ஜுன் மகேந்திரன் ஜனாதிபதியின் ஆலோசகர் வரிசையில் இல்லை எனவும், பிரதமரின் ஆலோசகர் வரிசையிலேயே இருப்பதாகவும் நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். (இ-10)

## அரசாங்கத்தின் கீழ் மீண்டும் தன்னார்வு நிறுவனங்கள்

(கொழும்பு)

மகிந்த ஆட்சியின் போது அரசாங்கத்தின் கீழ் தமது நடவடிக்கைகளை நிறுத்தியிருந்த சர்வதேச தன்னார்வு நிறுவனங்கள் புதிய அரசாங்கத்தின் கீழ் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிவெடுத்துள்ளன.

இதன்படி லிபரல் கொள்கையை பரப்பும் ப்ரட்ரிக் நௌமான் பவுண்டேசன் விரைவில் தமது நடவடிக்கைகளை இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த தன்னார்வு நிறுவனத்தின் செயற்பாடுகளுக்காக ஜேர்மனிய தூதரகம் பல முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கலாசாரம் மீளெழுச்சியை கட்டியெழுப்புவதே இந்த தன்னார்வு நிறுவனத்தின் பணியாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## சாலாவ வெடிவிபத்தால் 1800வீடுகளுக்கு சேதம்

அண்மையில் இடம்பெற்ற சாலாவ இராணுவ முகாம் வெடிப்பு சம்பவத்தினால் சுமார் ஆயிரத்து 800 வீடுகள் சேதமடைந்திருப்பதாக மதிப்பீட்டு அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதில் முற்றாக வீடுகள் அழிவடைந்த 401 குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் அடிப்படையில் மாதாந்த வாடகை வழங்கப்பட்டுள்ள நிலையில், நேற்று 150 குடும்பங்களுக்கு குறித்த நிவாரண பணம் வழங்கப்பட்டது. (இ-10)

## அமைதியான நாடுகள் வரிசையில் 2016 இல் இலங்கை முன்னேற்றம்

### ஆபத்தான நாடுகள் வரிசையில் 97 ஆவது இடம்

(கொழும்பு)

உலக அமைதி தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2016 ஆம் ஆண்டுக்கான தரப்படுத்தலில் இலங்கை அமைதியான நாடுகள் வரிசையில் முன்னேற்றமடைந்துள்ளது. உலகில் 163 ஆபத்தான நாடுகள் வரிசையில் இலங்கை 97 ஆவது இடத்தில் உள்ளது.

உலகில் ஆபத்தான நாடுகள் வரிசையில் சிரியா முதல் இடத்திலும் தென் சூடான் இரண்டாவது இடத்திலும் உள்ளன. அடுத்ததாக ஈராக், ஆப்கானிஸ்தான், சோமாலியா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

அமைதியான நாடுகள் வரிசையில் இந்தியா, இலங்கைக்கு பின் வரிசையில் உள்ளது. பெரும்பாலான இஸ்லாமிய நாடுகள் அமைதியற்ற மிகவும் ஆபத்தான நாடுகள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரம் மற்றும் அமைதி தொடர்பான சர்வதேச அமைப்பு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இந்த தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-10)





இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளை திறப்பு விழா நேற்று காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் சத்திரச்சந்தி அருகாமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன கிளையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். குறித்த ஆயுர்வேத நிலையத்தில் மருந்து பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (படங்கள்:- உ.சாளின்)

## மூவாயிரம் கோடி மோசடி தொடர்பில் முன்னாள் அமைச்சரிடம் விசாரணை

பாரிய ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் அடுத்த வாரம் விசாரணை நடத்தவுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் சதோச நிறுவனத்திற்கு 3 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்ததில் நடந்துள்ளதாக கூறப்படும் பாரிய ஊழல் தொடர்பாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

சதோசவுக்கு பொருட்களை இறக்குமதி செய்வதிலும் உள்நாட்டிலும் கொள்வனவு செய்ததிலும் நிதி மோசடி நடந்துள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## பதுளையில் உதயமாகும் பசிலின் கட்சி பதுளையிலேயே அஸ்தமனமாகிவிடும்



பதுளையில் உதயமாக இருக்கும் பசிலின் புதிய கட்சியானது பதுளையிலேயே அஸ்தமனமாகும் என விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், பசில் ராஜபக்ஷ தனது புதிய கட்சியை பதுளையில் இருந்து ஆரம்பிக்க உள்ளதாக அண்மையில் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் முகமாகவே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு அறிவித்தார்.

பதுளையின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் பதுளையின் அனைத்து செயற்பாடுகளுக்கும் நாம் இருக்கின்றோம். புதிதாக யாரும் அங்கு உதயமாக தேவையில்லை என அறிவித்தார்.

தற்போது நாட்டில் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் குறைவாக உள்ளதாகவும், இதை அபிவிருத்தி செய்வதற்கு பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட உள்ளதாகவும் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ன மேலும் தெரிவித்தார். (இ-10)

## மட்டக்களப்பில் விமான நிலையம் திறக்கப்படவுள்ளது

மட்டக்களப்பு விமானப் படை முகாமில் உள்ள விமான நிலையம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவீனமயப்படுத்தப்பட்டுள்ள குறித்த விமான நிலையம் ஊடாக உள்நாட்டு விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் நாளை மறுதினம் 10 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்த விமான நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

## மூதூரில் வாள்வெட்டு இளைஞன் உயிரிழப்பு!

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் ஆஸாத் நகர் மீரா தைக்காப் பள்ளிவாசலில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 39 வயதுடைய கே.எம்.நாஸ்கீன் என மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த நபர் அவரது மைத்துனரைக் கட்டுத் துவக்கினால் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு மூன்று மாதத்துக்கு முன்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-10)

## வடக்கு முதமைச்ச...

நேற்று காலை யாழ்ப்பாணம வருகை தந்தி ருந்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத் தின, காலை 9.30 மணியளவில் ஆயுர்வேத நிலையத்தை சத்திர சந்தியில் திறந்து வைத்ததோடு, பின்னர் யாழ்.மாவட்ட செயல கத்தில் சந்திப்பொன்றினையும் மேற்கொண் டார்.

இதன் பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அமைந்துள்ள ஆலயத்தில் வழி பாடுகளில் ஈடுபட்டு, பிற்பகல் 3.30 மணிய ளவில் யாழ்ப்பாணம் தாதிய பயிற்சி கல்லூரி யில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்விலும் கல ந்து கொண்டு இறுதியாக போதனா வைத்திய சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள,

சிற்றுண்டி சாலையையும் திறந்து வைத் தார். இதன் பின்னர் பிற்பகல் 5 மணியள வில் இதய சத்திர சிகிச்சை பிரிவில் கடந்த மூன்று நாட்களாக அனுமதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரனை நேரில் சென்று பார்வையிட்டு நலம் விசாரித்து சென்றார்.

வடக்கு முதல்வரை அமைச்சர் ராஜித சேனாரத்தின நேரில் சென்று பார்வையிட்டு திரும்பும் போது திடீரென முதலமைச்சர் அனுமதிக்கப்பட்டிருந்த அறையில் மின் சாரம் தடைப்பட்டதனால் அங்கு சிறிது நேரம பதற்றம் நிலவியது. எனினும் ஒருசில வினா டிகளில் மீண்டும் மின்சாரம் வழமைக்கு திரும்பியிருந்தது.

தன்னியக்க மின்சார பாதுகாப்பு ஆழி தானாக விழுந்தமையே மின்சார தடைக்கான காரணமாக கூறப்பட்டுள்ளது. மேலும் அமைச்சர் ராஜித சேனாரத்தினவுடன் மக ளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜய கலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பி னர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் வடக்கு முதல்வரை சந்தித்து நலன் விசாரி த்தனர். (செ-4)

## சுதேச வைத்திய...

செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

எமது மாகாணத்தில் சுதேசமருத்துவம் கைவிடப்பட்டு போகும் நிலையில் அதற்கு மீண்டும் புத்துயிர் கொடுத்து அதை மீண்டும் எமது பிரதேச மக்களுக்கு வழங்குவதற்கான முக்கியமாக வேலைத்திட்டம் இதுவாகும்.

வடகிழக்கு மாகாணங்களில் சுதேச மரு த்துவமாக நாம் பின்பற்றி வந்தது சித்த மரு த்துவ முறை ஆகும். இது ஆயுள்வேதம், யுனானி போன்ற மருத்துவ முறைகளுடன் கலந்து எமது மாகாணங்களில் பின்பற்றப் பட்டு வருகிறது.


வடமாகாணசுகாதார அமைச்சின் கீழ் 85 சித்தமருத்துவ வைத்தியசாலைகள் காண ப்படுகிறன. இவை பொருளாதார ரீதியிலும் ஆளணி ரீதியிலும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறன. எனவே நாங்கள எங்களுடைய சித்த மருத்துவ துறையை மேம்படுத்துவதற்காக முழுமையானசெயற் திட்டத்தை தயாரித்து அமைச்சருக்கு வழ ங்கியுள்ளோாம். அவற்றை நடைமுறைப்படு த்துவதற்கு தயாராக உள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எமது முன்னோர் சித்தமருத்துவத்தை கட்டிக் காத்து வருகிறார்கள். அதன்மூலம் எமது சமுதாயத்தை அவர்கள் கட்டிக்காத்து வருகிறார்கள். யுத்த காலத்தில் கூட எமக்கு வழங்கப்பட்ட மருந்துகளின் அளவு மட்டுப்படுத்தப்பட்டிரு ந்தபோது சித்த வைத்தியர்கள் மக்களின் உயிரை காப்பாற்ற மிகவும் நேர்த்தியாக தமது வைத்தியத்தினை மேற்கொண்டார்கள்.

எனவே இது பாரம்பரிய வைத்தியம், அதை மீண்டும் எமது மக்கள் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் உதவி செய்யவேண்டும்.

சுதேச மருத்துவத்தின் தலை நகராக கிளி நொச்சியை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள் ளோம். கிளிநொச்சி கல்மடு பிரதேசத்தில் சுதேச மருத்துவதிணைக்களத்துக்கு என 100 ஏக்கர் காணி வழங்கியுள்ளோம். அதில் 20 ஏக்கர் காணியில் மூலிகை தோட்டத்தை ஆரம்பித்துள்ளளோம். அதை அரை ஏக்கர்க ளாகபிரித்து அப்பிரதேசத்தில் வாழும் யுத்த த்தால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத் துவ குடும்பங்களுக்க வழங்கியுள்ளோம். அவர் கள் அத்தோட்டத்தில் உற்பத்திசெய்யும் பொருட்களை உரியவிலைக்கு எமதுதிணை க்களம் பெற்றுக்கொள்வது போன்ற ஏற்பாடுக ளைசெய்துள்ளோம். அத்துடன் சித்தமருந்து பொருட்களை உற்பத்தி செய்வதற்கான திட்ட த்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங் கமும் இணைந்து சுதேச மருத்துவத்துறையை மேம்படுத்துவதற்கு ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். எமது மாகாணத்துக்கு 4 ஆயிர த்து 500 மில்லியன் ரூபாய் தேவை என கோரி அதற்கான திட்டவரைபுகளை தயாரி த்து அமைச்சரிடம் கொடுத்திருந்தேன். சமீப த்தில் அதற்குநிதி ஒதுக்குவதற்கான ஏற்பாடு செய்து தந்திருந்தார். அதாவது ஒஸ்ரிய நாட் டின் பிரதி நிதிகள் சமீபத்தில் வருகை தந்திரு ந்தனர். 60 மில்லி யன் யூரோ வினை எமது மாகாண த்தில் சுகாதாரது றைக்கு முதலீடு செய்வதற்கு தருவதாக கூறியிரு ந்தார்கள். அடுத்த மாதம் அளவில் இவர்கள் வரவிருப் பதுடன் இதற்கான வேலைத்திட்டமும் முன் னெடுக்கப்பட வுள்ளது என சத்தி யலிங்கம் தெரி வித்தார். (செ-9)




# புலிகளுடன் ராஜிதவுக்கு பகை இல்லை; ஆட்சி மாற்றத்துக்கும் அவரே காரணம்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ராஜித வுக்கு எந்த பகையும் இல்லை. அவர்கள் இவர் மேல் நல்ல பற்றுள்ளவர். அத்துடன் ஆட்சி மாற்றத்துக்கு முக்கிய காரணம் அமைச்சர் ராஜித சேனாரத்னவே என சிறுவர் இராஜா ங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நச்சுத்தன்மையற்ற மருந்துகள் பற்றிய அரச பொறிமுறையினை அறிவூட்டும் மாவ ட்ட வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித சேனா ரட்ன தலைமையில் நேற்றைய தினம் யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையா ற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சுகாதார அமைச்சின் ஊடாக 30 வருட ங்களுக்கு பின்னர் சிறந்த அமைச்சர் கிடை த்துள்ளார். வடமாகாணத்தில் இடம்பெற்ற போரின் காரணமாக எமக்கு கிடைக்க வேண டிய சலுகைகளை இழந்துள்ளோம். அவற்றை திரும்ப பெறுவதற்கு பல உதவிகளை அமை ச்சர் மேற்கொள்ளுவார் என நம்புகிறோம்.

எமது அரசு ஆட்சியை அமைப்பதற்கு முதற் காரணம் அமைச்சர் ராஜித சேனாரத்தின தான் ஏனெனில் நாம் எதிர்க்கட்சியில் இரு ந்த போது கடந்த அரசில் மீன்பிடி அமைச்ச ராக அவர் இருந்தார். கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவரை சந்தித்த போது என க்கு கூறியிருந்தார் இந்த அரசை தொடர்ந்து நடத்துவதற்கு இடமளிக்க மாட்டோம் என கூறியிருந்தார். அவ்வாறே 2015 ஆம் ஆண்டு அரசு மாறியது.

மக்களுக்காக திட்டங்களை செய்து கொண்டு போவோம் ஆனால் ஆட்சியை மாற்றி ஜனாதிபதியை மாற்றி புதிய அரசமைப்போம் என உறுதியாக கூறினார் ஆட்சி மாற்றத்து க்கு முக்கிய காரணம் அவர். எனவே தமிழ் முஸ்லிம் மக்கள் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

2001 - 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எனது கணவர் இருக்கும் போதும் ராஜித அமைச்சராக இருந்தார். சமாதானத்துக்கு காரணமாக இருந்தவர் அவர். தெற்கில் இரு ந்த பயங்கரவாதிகளுக்கு முகம் கொடுத்திரு ந்த இவரை வடக்கில் இருந்த பயங்கரவாதி களின் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருந் தார் என இங்கு கூறியிருந்தார்கள். ஆனால் வடக்கில் உள்ள பயங்கரவாதிகள் என அவர் கள் கூறும் எமது தமிழீழ விடுதலைப்புலிகளால அவருக்கு அச்சுறுத்தல் இருக்கவில்லை. அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருந் தார். புலிகளின் முக்கிய உறுப்பினர்களுடன் தனியாகவும் எமது வீட்டில் சந்தித்து கலந்து



ரையாடியுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிக ளில் நல்ல பற்றுள்ளவர். அதே போல் தமிழர் மீதும் பற்றுள்ளவர்.

கடந்த கால ஜனாதிபதிகளான சந்திரிகா, மகிந்தவின் காலத்திலும் தற்போதைய ஜனா திபதியின் காலத்திலும் தமிழ் முஸ்லிம் மக்க ளுக்காக இவர் குரல் கொடுத்து வருகிறார். தமிழ் மக்கள் இழந்த அனைத்தையும் இந்த நல்லாட்சியில் அவர் பெற்றுத்தரவேண்டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிக ளுக்கு வேலைவாய்ப்பை வழங்கி நிரந்தர நியமனங்கள் வழங்க வேண்டும் என அமை ச்சரிடம் கேட்டுக்கொள்வதாக விஜயகலா மேலும் தெரிவித்துள்ளார். (செ-9)

# வற் வரி அதிகரிப்பிற்கு எதிராக பல்வேறு பகுதிகளில் ஹர்த்தால்

வற் வரி அதிகரிப்பிற்கு எதிர்ப்பு வெளியி டும் வகையில் நேற்று வியாழக்கிழமை தென்னிலங்கை மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்க ப்பட்டு வருகின்றது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நேற்று முழு கடையடைப்பு போராட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளதோடு, வியாபாரிகள் பலர் அம் பாந்தோட்டை நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தையும் முன்னெடுத்துள்ளனர்.

குறிப்பாக அம்பாந்தோட்டை, சூரியவெவ, திஸ்ஸ மஹாராமை, லுனுகம்வெஹெர, ரன்ன, ஹுங்கம, பெலிஹத்த, வீரகெட்டிய, மித்தெனிய, அங்குனுகொலபெலெஸ்ஸ, உள்ளிட்ட மாவட்டத்தின் பிரதான நகரங்கள் அனைத்திலும் வியாபார ஸ்தலங்கள் மூட ப்பட்டிருந்தன.

இந்நிலையில், பொதுமக்கள் மீதான வரிச் சுமையை குறைக்குமாறு அம்பாந்தோட்டை வ்ர்த்தக சம்மேளனத்தின் தலைவர் லால் சமரகுணரத்ன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேபோன்று சம்ரகமுவ மாகாணத் தின் இரத்தினபுரி - உடவலவ, எம்பிலிப்பிட்டிய, கொடக்காவெல ஆகிய பிரதேசங்களிலும் நேற்று வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நகரங்களில் சில பகுதிகளில் நேற றைய தினம் வியாழக்கிழமை வற் வரி அதிக ரிப்பிற்கு எதிராக ஹர்த்தால் அனுஷ்டிக் கப்படும் என்று எழுதப்பட்ட சுவரொட்டிகள் நேற்றுமுன்தினம் இரவு ஒட்டப்பட்டிருந்தன.

• ஹர்த்தால் அனுஷ்டிப்பின் காரணமாக குறித்த நகரங்களின் அன்றாட வர்த்தக நட வடிக்கை பாதிக்கப்பட்டுள்ளதோடு, மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

கடையடைப்பு போராட்டம் காரணமாக வெளிமாவட்டங்களில் இருந்து அம்பாந் தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள நகர ங்களுக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்காக வந்த சில்லரை மற்றும் மொத்த வியாபாரி கள் பாதிக்கப்பட்டதை காணமுடிந்தது.

இதேவேளை, அம்பாந்தோட்டை மாவட் டத்தில் ஒரு சில வர்த்தக நிலையங்களில் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வற் வரி அதிகரிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த சில தினங்களுக்கு முன் னர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஹர்த்தால் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்க ப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# 'பிரபாகரனும் விஜயவீரவும் பயங்கரவாதிகள்'-ராஜித

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின்தலைவர்றோஹண விஜயவீர ஆகிய இருவருக்குமே நாட்டு மக் கள் பயந்துள்ளார்கள் என சுகாதார அமை ச்சர் ராஜித சேனாரத்தின தெரிவித்துள்ளார்.

நேற்று காலை யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்தின, காலை 9.30 மணியளவில் ஆயுர் வேத நிலையத்தை கே.கே.வீதி சத்திர சந்தியில் திறந்து வைத்ததோடு, பின்னர் யாழ்.மாவ ட்ட செயலகத்தில் சந்திப்பொன்றினையும் மேற்கொண்டார்.

இதன் பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அமைந்துள்ள ஆலயத்தில் வழி பாடுகளில் ஈடுபட்டு, பிற்பகல் 3.30 மணிய ளவில் யாழ்ப்பாணம் தாதிய பயிற்சி கல்லூரி யில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்விலும் கல ந்து கொண்டார். இந்த நிகழ்வில் உரையாற் றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள தமிழ் மக்கள் கடந்த காலங்களில் இரு தலைமைத்துவங்களின் கீழ் இருந் தோம், இப்போது சிங்கள தலைமைத்துவ த்தின் கீழ் வந்தது வரவேற்கத்தக்கதாகும். கடந்த காலங்களில் இடம்பெற்ற அழிவுகள் தற்போது இடம்பெறவில்லை நாடுஅமை தியாகவுள்ளது.

இந்த அமைதியை சிங்கள, தமிழ் மக் களே நிரந்தரமாக பேண வேண்டும். வடக் கில் பல அபிவிருத்திகளை எமது அரசு மேற் கொண்டு வருகின்றது. யாழ்.போதனா வைத் தியசாலையிலும் இந்த அபிவிருத்தி முன் னெடுக்கப்படுகின்றது. இன்னும் நிரந்தர நியமனம் கிடைக்கப்பெறாத பணியாளர்க ளுக்கு நாங்கள் நியமனம் வழங்கவுள்ளோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியை பயன் படுத்தி நாங்கள் அபிவிருத்தியை கட்டியெழு ப்ப வேண்டும். கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பி ள்ளை பிரபாகரன் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் றோஹண விஜய வீர ஆகிய இருவருக்குமே நாட்டு மக்கள் பய ந்துள்ளார்கள்.

இதற்கு காரணம் இவர்கள் இருவரும் கொலையாளிகள், பயங்கரவாதிகள். ஆகவே கடந்த காலங்களுக்கு இடம் கொடுக்காமல் அனைவரும் ஒற்றுமையுடன் நாட்டை கட்டி யெழுப்புவோம் என ராஜித தெரிவித்தார். 1989 நவம்பர் 13இல் ஜே.வி.பி தலைவர் றோஹன விஜயவீர, அரச படையினரால் கொல்லப்ப ட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)



யாழ்.தேசிய கலை இலக்கியப் பேரவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செ.கதிர்காமநாதன் படைப்புகள் நூலின் அறிமுக நிகழ்வில் விருந்தினர்கள் உரையாற்றுவதையும் பார்வையாளரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# ரவீந்திரநாத் தாகூர் நினைவுப்பேருரை கலா நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தில்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் பிரபல கவிஞரும் எழுத்தாளரும் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவருமான குருதேவ் இரவீந்திரநாத்தாகவர் 1922,1928 மற்றும் 1934 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டமையை நினைவு கூரும் முகமாகவும் அவரது 155 ஆவது பிறந்த தின நினைவு நாளை கொண்டாடும் முகமாகவும் ஓர் சிறப்பு நினைவுப் பேருரை உள்ளடங்கிய கலா நிகழ்வினை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினருடன் இணைந்து நாளை சனிக்கிழமை 9 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மருத்துவபீட வளாகத்தில் அமைந்துள்ள ஹூவர் அரங்கில் நடத்த இந்தியத் துணைத் தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது.

நினைவுப்பேருரையை இந்தியாவின் மேற்கு வங்கத்தில் அமைந்துள்ள விஸ்வ பாரதி (சாந்திநிகேதன்) பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சுவபன்குமார் பாத்தா வழங்குவார்.

பேராசிரியர் சுவபன்கு மார் பாத்தா, இந்தியாவின் தாவர உயிரியல் தொழில்நுட்ப துறையில் பிரபல விஞ்ஞானியுமாவார். இவர் அனைத்து அறிவியல் துறை சார்ந்த 25 இந்திய விஞ்ஞானிகளில் முக்கிய இடத்தை வகிப்பவராவார்.

கலாநிதி பாத்தா, இந்திய இயற்கை அறிவியல் ஆய்வாளராகவும் உலக அறிவியல் மைய ஆய்வாளராகவும் விளங்குகின்றார். (இ)

# விவாதப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்திக்கு அருகேயுள்ள சுகதாமம் மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம்பெற்று வருகின்ற விவாதப் போட்டியில் நேற்று 07.07.2016 இல் நடைபெற்ற விவாதப் போட்டி முடிவுகள் தொடர்பாக அறிவிக்கப்பட் டுள்ளது.

முதலாம் சுற்று

போட்டி -1

யா/ இணுவில் இந்துக் கல்லூரி

போட்டி -2

யா/ தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலயம் (128 புள்ளிகள்),யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி (149 புள்ளிகள்)

இரண்டாம் சுற்று

தலைப்பு: மரியாதையான நடத்தைக்குக் காரணம் பிறப்பா? வளர்ப்பா?

யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி (154 புள்ளிகள்), யா/ இணுவில் இந்துக் கல்லூரி (157 புள்ளிகள்)

மூன்றாம் சுற்றுக்குத் தெரிவாகிய அணி

யா/ இணுவில் இந்துக் கல்லூரி

<u>நடுவர்கள்</u>

பிரதான நடுவர்: சிரமணன் **B.A (Hons) in Hindu Civilization** (பல்கலைக்கழக விரிவுரையாளர்)

நடுவர் 2: கு.கௌதமன் **B. A (Hons) in Psychology** (தேசிய) சிறுவர் பாதுகாப்புத்துறை மாவட்ட அதிகாரி, யாழ் மாவட்ட செயலகம்)

நடுவர் 3: பிரம்மகுமாரி சௌபாக்கிய கௌரி **M.A in Philosophy** (ஓய்வுபெற்ற அதிபர்)

இன்றைய போட்டி விபரங்கள் (08-07-2016)

காலை 9.00 – 1.00

போட்டி-1 சுலபமானது எது? மதித்து நடப்பதா? மதிப்பை பெறுவதா?

போட்டி- 2 இன்றைய காலகட்டத்தில் அதிக சவாலாக இருப்பது எளிமையா? நேர்மையா? (இ-5)


## இருபத்தேழாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணரங்கு 11 02 1924



விண்ணரங்கு 08 07 1989

### கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து

வையமதில் காவியத்தை வாலிபமாய்ப்
பேசவைத்தோன்
வானொலி, தொலை சினிமா எங்கும் தான் புகழ்
ஆக்கிக்கொண்டோன்
நாடகத்தில் புதுவடிவை நானிலத்தில் எமக்களித்து
நல்லதோர் கலைஞர் குழாம் நடமாட வைத்ததெய்வம்
காலத்தால் அழியாத கலை வடிவை தமிழ்க்களித்து
ஞாலத்தில் இறவாத நடிகமணி புகழ் என்றும்
வாழி வாழி

"சாரங்கா"
காங்கேசன்துறை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

(5149)


**மீனம்** தேகநலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், சச்சரவை விட்டு சாதித்துக்காட்டும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியம் சீராகும்.

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாடு திருப்தி தரும் வகையில் அமையும், தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், காரிய வெற்றி தரும்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரிய மொன்றைச் செய்து முடிப்பீர்கள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தராடம்,திருவோணம் | | புத சுக் |
| | | | குரு சந் ராகு |
| | சனி செவ் | | |

## இராசி பலன்

08.07.2016
(ஆனி 24, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 3.25மணிவரை
மகம் முன்னிரவு 9.07 மணிவரை
சுபநேரம் 5.58-7.28 மணிவரை
இராகுகாலம் 10.28-11.58 மணிவரை
மாணிக்கவாசகர் குருபூசை
சதுர்த்தி விரதம்

வளவன்

**கடகம்** உங்களின் நல்ல யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**சிம்மம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வெளியூர் போக்குவரத்துக்களால் அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் கிடைக்கும்.

# போதைவஸ்து குற்றம் புரிவோரின் கருணை மனு நிராகரிக்கப்படும்!

## மரணமே தண்டனையாகும் என நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

**சட்ட விளைவுகள் தெரியாமல் போதைவஸ்து கடத்தல் மற்றும் விற்பனை குற்றச்செயல் புரிவோரின் கருணை மனுக்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது. பிணை கோரி செய்யப்படும் அத்தகைய மனுக்கள் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அறிவித்துள்ளார்.**

போதை வஸ்து கடத்தல் குற்றம் புரிவோருக்கு அதி கூடிய தண்டனையாக மரண தண்டனை விதிக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

கேரளாவில் இருந்து கொண்டு வந்ததாகக் கருதப் படுகின்ற 39 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத திருந்த சம்பவம் தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு தொடர்பான வழக்கு விசாரணையின்போதே இந்த அறிவித்தலையும் எச்சரிக்கையையும் நீதிபதி இளஞ்செழியன் விடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற இந்த வழக்கு விசார ணையின் போது அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது,

மிகவும் சொற்ப அளவு என்று கருதப்படுகின்ற 2 கிராம்ஹெறோயின், மோபின, கொக்கேயின்போன்றபோதைப பொருளை ஒருவர் தனது உடைமையில் வைத்திருந் தால் அல்லது விற்பனை செய்தால் அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று போதைவஸ்து சட்டத்தின் 54 ஆம் பிரிவு பரிந்துரை செய்கின்றது.

அதேவேளை, 5 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா உடைமையில் வைத்திருந்தால் அல்லது விற்பனை செய் திருந்தால் 7 ஆண்டுகள் வரை கடூழியச் சிறைத் தண்டனை விதிக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் கூறுகின்றது.

போதைப் பொருள் குற்றம் தொடர்பான இத்தகைய விடயங்கள் தொடர்பில் மேல் நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்பட்டு, தண்டனை தீர்ப்பளிக்கப்பட வேணடும் என போதைவஸ்து தண்டனைச் சட்டத்தில் வலியுறுத் தப்பட்டிருக்கின்றது.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டுக் கடற்கரையோரங்களில் பெருமளவான கேரளா கஞ்சா கைப்பற்றப் பட்டுள்ளது.

அவற்றைக கடத்தி வந்த சந்தேகத்தில் பலர் கைது செய்யப்பட்டுசட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நிலைமை தொடர்வதை அனுமதிக்க முடியாது.

யாழ். குடாநாடு போதை வஸ்து இல்லாத சாம்ராச்சிய மாக உருவாக்கப்பட வேண்டும் என்பதே நீதிமன்றின் இலக்காகும். நீதிமன்றத் தீர்ப்புக்கள் மக்களைப் பாது காக்கும் கேடயங்களாக மாற வேண்டும்.

கைது செய்யப் படும் விசாரணைக் கைதிகள் சிறைச்சாலை சீர்திருத்தப் பள்ளி மாணவர்ளாக மாற வேண்டும்.

போதைவஸ்து உடைமையில் வைத்திருப் பது, அதனை விற்பனை செய்வது, அதனைப் உட் கொள்வது போன்ற குற்றச் செயற் பாடுகளை யாழ்.குடா நாட்டில் அனுமதிக்க முடி யாது.

அதனால் தான் யாழ். மேல் நீதிமன்றம் போதை வஸ்து வழக்குகளில் மிகவும் கடும் போக்கு நிலைப்பாட்டை எடுத்து வருகின்றது.

போதைவஸ்து பாவனை மற்றும் போதைவஸ்து குற் றச் செயல்களில் இருந்து, மாணவர் சிறார்களைப் பாது காக்க வேண்டும். இளைஞர் களைப் பாதுகாக்க வேண்டும்.

அதேபோன்று, மாணவி களையும் பெண்களையும் பாதுகாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

ஏனெனில் அனைத்து குற்றங்களுக்கும் ஒரு வகை யில் போதைவஸ்துவே பின் னணியாகக் காணப்படு கின்றது.

மரண தண்டனைக்குரிய போதைவஸ்து குற்றச் செயல் களின், சட்ட விளைவுகள் தெரியாமல்• ஈடுபடுபவர்கள் சட்டரீதியான நடவடிக்கை களை எதிர்கொள்ள வேண்டி யிருக்கும்.

போதைவஸ்து கடத்தல் அல்லது விற்பனையில் ஈடுப டுபவர்கள், அத்தகைய குற்றச் செயல்களைப் புரிந்து விட்டு, நீதிமன்றத்தில் கருணை காட்டுமாறு கோருகின்ற விண் ணப்பங்கள் நீதிமன்றத்தி னால் நிராகரிக்கப்படும்.

மரண தண்டனைக்கு ரிய குற்றத்தைப் புரிவது மட்டுமல்லாமல், யாழ். குடா நாட்டை சீரழிக்கின்ற போதை வஸ்து வர்த்தகம் என்ற குற் றச்செயல்களை அனுமதிக்க முடியாது.

அத்தகைய குற்றச் செயல் களைப் புரிபவர்களுக்குக் கடும் தண்டனையே வழங் கப்படும் என போதைவஸ்து குற்றச் செயலுக்கான சட்ட விளைவுகள் குறித்து, அறி வுறுத்தியுள்ள நீதிபதி இளஞ் செழியன், பிணை மனு தொடர் பான வழக்கு விசாரணையை எதிர்வரும் ஆவணி மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்தி வைத் தார். (இ-10)

---

## இசைப் பேரரங்கு




இதில் பாட்டு ஓ.எஸ். தியாகராஜன், வயலின் - விட்டல் ராம மூர்த்தி, மிருதங்கம்-நெய்வேலி ஆர். நாராயணன், கஞ்சிரா - கே.வி.கோபால கிருஷ்ணனும் வழங்கவுள்ளனர்.

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீராம நாம கானாமிர்தம் இசை வேள்வி - 2016 இசைப் பேரரங்கு இன்றுவெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும்.

வி.சித்தார்த் தன், வி.பிரதித் தன் குழுவினரின் நாத அரங்கும் இடம்பெறும். இதில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உடற்தொழிலியற்துறைத் தலைவர் பேராசிரியர் கனகசபை சிவபாலன் தலைமையுரையை நிகழ்த்தவுள்ளார். (இ)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்.நீர்வேலி வாய்க்கால்த்தரவை மூத்த விநாயகர் ஆலய பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது. இத் திருவிழா நாட்களில் இரவு 7 மணியளவில் சமயம் காட்டும் சமூகம் என்ற தலைப்பில் பண்டிதரும் சைவப் புலவருமான சொல்வேந்தர் பொன் சுகந்தனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (இ-5)

## தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப் பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. கற்கை நெறிகளுக்கான விண்ணப் பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற் போதுநடைபெற்றுவருகின்றன.

கணனி தொழில்நுட்ப வியலாளர், கணனி படவடிவமைப் பாளர், கணனி வன்பொருள் திருத்துநர் ஆகியகற்கை நெறி கள் ஆரம்பிக்கவுள்ளன.

இக்கற்கைநெறிகள்அனைத் தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக் கற்கை நெறிகள் கற்க விரும்புபவர் கள் தங்கள் பதிவுகளை அலு வலக நேரத்தில் யாழ்.வீரசிங் கம் மண்டபம் முதலாம் மாடி யில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் இன்றுமேற்கொள் ளுமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் கணக்காளர் சுரேஸ்குமார் தெரிவித்துள்ளார். (இ)



கிருத்திகன் இயக்கத்தில் உருவான இருட்டறை குறும் படம் அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரியில் வெளி யிடப்பட்டது. வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் வெளியிட்டு வைக்க சிறப்புப் பிரதிகளை, கமலநாதன் சசீந்திரன், கிருபாகரன், கலைத்துறையைச் சார்ந்த கேசவராஜா, நிலான், ஆகாஷ், மகேந்திரசிங் எனப் பலர் பெற்றுக் கொண்டனர்.

## கயிறு கழுத்தில் இறுக்கியதில் குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

மாட்டுக்கு கட்டியிருந்த கயிறு கழுத்தில் சிக்கியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் கரவெட்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளது.இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடமராட்சி கரவெட்டி அரசடிப் பகுதியில் குறித்த குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். இதன்போது வீதியில் கட்டப்பட்டிருந்த மாடு ஒன்று குறுக்கே சென்றுள்ளது.

இதனால் அக்குடும்பஸ்தர் கீழே விழுந்துள்ளதுடன் மாட்டின் கயிற்றால் அந் நபரின் கழுத்து இறுக்கப்பட்டது.

உயிருக்கு போராடிக் கொண்டிருந்த இக் குடும்பஸ்தர் உடனடியாக கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். (இ-5-60)




## மாணவர்களுக்கான அவசர சந்திப்பு

க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கான அவசர சந்திப்பு எதிர் வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியில் இடம் பெற இருப்பதால் இச் சந்திப்பில் மாணவர்கள் அனைவரும் தேசிய அடையாள அட்டையுடன்தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார்.(இ)

# ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில்
# யாழ்.மேல் நீதிமன்று வழங்கிய தீர்ப்புக்கு முக்கிய இடம்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், நடந்து முடிந்துள்ள 32 ஆவது கூட்டத் தொடரில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் அல்ஹுசைன் வெளியிட்ட வாய்மொழி மூல அறிக்கையில் யாழ். மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒன்றிற்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டம் விசுவமடு மீள்குடியேற்றப் பிரதேசத்தில் இரண்டு தமிழ்ப் பெண்கள் மீது நடத்தப்பட்ட பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் துஷ்பிரயோக வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட 4 இராணுவத்தினருக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட வழக்கு விசாரணையில் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பு வழங்கியிருந்ததையே ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை கவனத்தில் எடுத்து சுட்டிக் காட்டியுள்ளது.

“2010 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி விசுவமடுவில் 2 தமிழ்ப் பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக 4 இராணுவ வீரர்களுக்கு எதிராக தீர்ப்பளிக்கப்பட்டது. இப்படி குற்றம் தீர்க்கப்படுவது மிக அரிது” என அந்த அறிக்கையின் 19 ஆம் பந்தியில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்தார்.


அத்துடன், “இந்த அரசு பதவிக்கு வந்த முதல் 5 மாதங்களில் மிக பிரபலமான பல வழக்குகள் வெளிவந்தன. உதாரணமாக பிரகீத் எக்னெலிகொட, பத்திரிகை ஆசிரியராகிய லசந்த விக்கிரமதுங்க, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் மற்றும் ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் போன்றவர்களின் கொலைகள் தொடர்பான தகவல்கள் வெளிவந்தன. ஆனால், அவை பின்பு மெல்ல மெல்ல வலுவிழந்தன. திருகோணமலை ஐவர் கொலை வழக்கு மற்றும் அக்சன் பாம் வழக்கு என்பன பல நிலைகளில் தொடர்ந்து நடைபெறாமல் இருக்கின்றன. வழக்குகளில் சாட்சிகளைக் கொண்டுவர அரசு புதிய முயற்சிகளை ஏற்படுத்தி வசதி செய்தும், அவை பலனளிக்கவில்லை” என்றும் அந்த அறிக்கையின் 18 ஆவது பந்தியில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் விசுவமடு பாலியல் வல்லுறவு வழக்கின் தீர்ப்பு மட்டுமே முக்கியமாக விசாரணை முடிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கென்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசுவமடுவில் பாதுகாப்பற்ற நிலையில் வசித்து வந்த 2 தமிழ்ப் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் துஷ்பிரயோக வழக்கில் 4 இராணுவத்தினருக்கு 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் நட்ட ஈடும் தண்டப் பணமும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தீர்ப்பளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகள் தொடர்பில் குறிப்பாக பாலியல் வல்லுறவு குற்றச் செயலுக்காக அளிக்கப்பட்ட இந்தத் தண்டனைத் தீர்ப்பானது, யாழ்.மேல் நீதிமன்றத்தின் சுதந்திரமான செயற்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது என சட்டத்துறை நிபுணர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-10)





நச்சுத்தன்மையற்ற மருந்துகள் பற்றிய அரச பொறிமுறையினை அறிவூட்டும் மாவட்ட வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு சுகாதாரஅமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரட்ன தலைமையில் நேற்றையதினம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் விசேட வைத்திய நிபுணர் திருமதி சுயாதா சேனாரட்ன, சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண சுகாதாரஅமைச்சர் பி.சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், இலங்கை ஆயுள்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் தலைவர், ஆயுள்வேத வைத்தியர், அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்- பொ.சோபிகா)

# நஞ்சு ஊட்டப்பட்ட மிருகங்களின் இறைச்சியை உண்ண வேண்டாம்

நஞ்சு ஊட்டப்பட்ட மிருகங்களின் இறைச்சியை உட்கொள்ள வேண்டாம் என வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வன விலங்குகளை வேட்டையாடுவதற்கு சிலர் நஞ்சு வகைகளை பயன்படுத்துகின்றனர் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு நஞ்சூட்டி வன விலங்குகளை கொன்றவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர் என வன விலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் எஸ்.கே. பதிரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் பதிவானால் உடனடியாக 1992 என்ற அவசர அழைப்பு இலக்கத்திற்கோ அல்லது 011-288 8585 என்ற இலக்கத்திற்கோ தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (இ-10)

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-19

வலம்புரி கல்விப்பிரிவு

### (07.06.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

### பகுதி II

01. 1. சந்திரனில் 2.ஆந்தை அலறும் ஓசையால்/சத்தத்தால்
3.நட்சத்திரங்கள் 4.வெளிச்சத்தினால் 5.மெதுவாக/ஆறுதலாக
6.மலர்களைத் தூவியது போல் 7.பறக்கும்
02. 1.நித்திரைவிட்டு எழுதல் 2.உடன் மறைதல்
03. 1.தொழிலாளி 2.மாதுளம்பழம்
04. 1.வள்ளல்
05. நூலகம் என்பது ஓர் அறிவுக் களஞ்சியம் ஆகும்.
06. அம்மா அதிகாலையில் எழும்புவார், அம்மா உணவு சமைப்பார்.
07. 1.அலறும் 2.வைரவிழா 3.பிடி 4.நாற்று
5.அம்மா அவனைப் பார்த்து எங்கே சென்றாய்? என்று கேட்டார்.
08. 1.Rainbow 2.Telephone 3.Good morning
09. 1.நான் விளையாடுவதற்கு விரும்புகிறேன் 2.முயல் 3.புத்தகத்தை எடுக்கவும்
10. 1.Flower மலர் 2.Mango அம்ப
11. இவர் எனது அண்ணா
12. மட்ட வதுர தென்ன
13. 1) 4 2) 3 3) 3 4)2 5) 1 6)3 7) 2 8)1 9) 4
10)2 11)3 12) 1 13) 1 14) 3 15) 3 16) 4 17) 1 18) 3
19) 4 20) 3 21) 3 22) 3
17. 1.கம்பளித்தையல் 2. துன்னாத்தையல்
18 1. ஆடு தீண்டாப்பாலை 2.முடக்கொத்தான்
14. 1) 4.5 cm/4cm 5c 2) 4 3 3) 45பேர்
4)9சதுர சென்ரிமீற்றர் 5) 7/8 6) 56 ரூபா
7)12:05 மணித்தியாலம் 8) 3/8 9) 98 ரூபா
10)84 சதுரசென்ரிமீற்றர் 11)750ml 12)15km
13)285km 14)102 ரூபா
15. பொருத்தமான வசனங்கள்.

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா:33
உயரம்: 5’7"
தகைமை/தொழில்:O/L/ முகாமையாளர்
தொ.இ: B/6049

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 29
உயரம்: 5’7"
தகைமை/தொழில்:A/L லண்டன் PR
தொ.இ: B/6050

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 11
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:Accounting/ கணக்காளர்
தொ.இ: B/6051

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 9செவ் 12 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்
தொ.இ: B/6053

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
தொ.இ: G/5673

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 42செவ் 8 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்:BCA, MCA/ தனியார் தொழில்
தொ.இ: G/5675

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 13 3/4செவ் 2 இல்
உயரம்: 5’7"
தகைமை/தொழில்:LLB/சட்டத்தரணி
தொ.இ: G/5677

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 78செவ் 7 இல்
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/5679

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# கொத்துக்குண்டுகள் பாவித்தமை குற்றமாகாது மக்ஸ்வெல் கூறியமை புண்படுத்தும் செயல்

## காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் தெரிவிப்பு

இராணுவம் யுத்தத்தின் போது கொத்துக் குண்டுகளை பாவித்திருந்தால் அது குற்றமாகாது என ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம கூறியிருப்பது தமிழ் மக்களை புண்படுத்தும் செயலாகும் என காணாமற்பானோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்து வரும் ஜனாதிபதி ஆணைக் குழு தலைவர் மக்ஸ்வல் பரணகம இராணுவம் யுத்தத்தின் போது கொத்துக் குண்டுகளை பாவித்திருந்தால் அது குற்றமாகாது என்றும் அத்தகைய குண்டுகள் தொடர்பாக தடைகள் ஏதும் இல்லை என்றும் கூறியிருப்பது தமிழ் மக்களை புண்படுத்தும் செயலாகும்.

சர்வதேச மனித உரிமை பேரவையின் அறிக்கையில் கொத்துக் குண்டுகள் போடப் பட்டதற்கான சாட்சியங்கள் இருப்பதாகவும் இது தொடர்பாக விசாரணை மேற் கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கும் வேளையில் மக்ஸ்வல் பரணகம கூறும் கருத்தின்படி பார்க்கும் போது இராணுவம் கொத்துக் குண்டுகளை பாவித்திருப்பதற்கு ஆதாரமாக அமைகிறது.

இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக கூறி காணாமற் போனவர்கள் தொடர்பாக ஒரு நீதியான விசாரணையை மேற்கொள்ளும் தலைவர் இவ்வாறான கருத்தை கூறுவதன் மூலம் எவ்வாறு தமிழ் மக்கள் இவரிடம் இருந்து தமக்கு நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியும்.

இலங்கை இராணுவத்தை பாதுகாக்க முன்வருபவரிடம் இருந்து எவ்வாறான நீதியை எதிர்பார்க்க முடியும். எனவே நீதியான நடுநிலைமையான விசாரணையை இவரிடம் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

இத்தகைய சூழ்நிலையில்தான் பாதிக்கப்பட்ட மக்கள் இலங்கையில் நடத்தப்படும் எந்த ஒரு விசாரணைக்கும் எதிர்ப்பினையும் சர்வதேச விசாரணை ஒன்றைத் தவிர வேறு விசாரணையில் நம்பிக்கை இல்லை என்றும் கூறுகின்றனர். அதே போன்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையும் இலங்கை அரசாங்கம் மேற் கொள்ளும் விசாரணைகளில் பூரணநம்பிக்கை கொள்ளாத நிலை காணப்படுகின்றது.

ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின் ஒரு ஜனநாயக சூழ்நிலை ஏற்பட்டிருந்தாலும் காணாமற் போனவர்கள், தமிழ் அரசியல் கைதிகள், மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாக மக்கள் தொடங்கிய இடத்திலேயே இருக்கின்ற நிலை காணப்படுகின்றது. பாதுகாப்பு தரப்புக்கு பயந்து அரசாங்கம் இவ்விடயங்களில் பின்வாங்குவதனால் இந்த ஆட்சி மீது மக்கள் விரக்தியடையும் நிலை தோன்றக்கூடும்

ஏற்கனவே வெள்ளை வான் கடத்தல் தொடர்பாக தகவல்களை தர முன்வந்த கடற்படை அதிகாரிக்கு இராணுவ நீதிமன்றம் மூலம் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இராணுவத் தளபதி போர் குற்றம் தொடர்பாக தகவல்களை வழங்க வேண்டாம் என சட்டமா அதிபரை கோரியிருப்பதும் ஜனநாயக நெறிமுறைகளை மீறும் செயற்பாடாக பார்க்கப்படுகின்றது. நல்லிணக்கம் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் மன மாற்றத்தில் இருந்து உதிக்க வேண்டும். பாதிப்புக்கு காரணமானவர்களை காப்பாற்றும் செயற்பாடுகள் மூலம் நல்லிணக்கம் ஒரு போதும் தோன்றமாட்டாது என மேலும் தெரிவித்தார். (2-9)

# அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பில் அமைக்கப்பட்ட நீதிமன்றம் திருப்திகரமற்றது

## சாந்தி எம்.பி. தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

அரசியல் கைதிகளின் உண்ணாவிரதத்தின் பின் விசாரணை செய்வதற்காக கொண்டுவரப்பட்ட விசேட நீதிமன்ற நடவடிக்கைகள் அரசியல் கைதிகளின் விடயத்தில் திருப்தியளிக்கக்கூடியவாறு இல்லை.

ஆதலால் தம்மை பிணையில் அல்லது புனர்வாழ்வளித்து விடுதலை செய்யுமாறு அரசியல் கைதிகள் கோரிக்கை விடுப்பதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

கொழும்பு மகசீன் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை ஸ்ரீஸ்கந்தராசா எம்.பி. அண்மையில் சிறைச்சாலைக்கு நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக்கோரி ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதத்தின் பின் அரசியல் கைதிகளை விசாரணை செய்வதற்காக கொண்டு வரப்பட்ட விசேட நீதிமன்ற நடவடிக்கைகள் அரசியல் கைதிகள் விடயத்தில் திருப்தியளிக்கூடியவாறு இல்லை.

குறிப்பாக ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகளில் குற்றம் சுமத்தப்படடுள்ள வேளைகளில் அவற்றில் குறிப்பிட்ட ஒரு வாழ்க்கை மட்டுமே விசேட நீதிமன்றுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகவும் ஏனைய வழக்குகளை வெவ்வேறு நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்ல வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை ஒப்புக்கொள்ளுமாறு வற்புறுத்துவதாகவும் தெரிவித்துள்ளதோடு தமக்கான வழக்கு விசாரணை நடவடிக்கைகளுக்கான செலவுகளை தமது குடும்பத்தலைவர்களால் செலுத்த முடியாத சூழல் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தம்மை பிணையில் அல்லது புனர்வாழ்வளித்தாவது விடுதலை செய்யுமாறு அரசியல் கைதிகள் கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவர் இந்த அரசாங்கம் தமிழ் மக்களினுடைய பிரச்சினைகளை தீர்ப்பதில் அக்கறை கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (2-281)



வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் ஆசிரியர் மாநாடு அண்மையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில நடைபெற்ற போது...

# வடமாகாண சுற்றுலா மையங்களை இராணுவம் கையகப்படுத்தியுள்ளது

## கல்வியமைச்சர் குருகுலராஜா குற்றச்சாட்டு

வடக்கு மாகாண சபைக்கு சொந்தமான பல சுற்றுலா மையங்களை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் குருகுலராஜா தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுற்றுலா மையம் கடந்த 5 ஆம் திகதி மாங்குளத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு பதிலாக பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

2010 ஆம் ஆண்டு போர் முடிந்து விட்ட பின்பு ஊரை பார்ப்பதற்காக இந்த வீதி வழியாக கூட்டிக் கொண்டு வந்தார்கள். இராணுவத்தினர் அப்போது இங்கிருக்கின்ற அதிகாரிகள் சிலரும் என்னுடன் வந்தனர். அந்த நேரத்திலே கட்டடங் கள் பல இருக்கவில்லை. கிளிநொச்சி நகரிலே சில கட்டடங்கள் இருந்தன. அதன் பின்னர் ஒரு வருடத்துக்கு பின்னர் மீண்டும் மீள்குடி யேற்றம் வருகின்றபோது அங்கு இருந்த ஒரு சில கட்டடங்களையும் காணவில்லை. இப்பொழுது வரலாற்று ரீதி யாக அதை நாங்கள் தேடு கின்றோம்.

பார்க்க விடும்போது இருந்த கட்டடங்களை எல்லோரும் படம் எடுத்தார்கள். பத்திரிகையாளர்களும் வந்தார்கள். அவர்களும் படம் எடுத்தார்கள். இப்போது அந்த படங்களை தாருங்கள் அந்த பழைய கட்டடங்களை யார் உடைத்தது என்பதை அறியலாம் என்றால் இப்போது அதை எடுக்க முடியாதுள்ளது.

நாட்டிலே இடம்பெற்று முடிந்த யுத்தத்தின் பின்னர் படிப்படியாக எமது பிரதேசத்தை கட்டியெழுப்பி வருகிறோம். அந்த வகையில் சில கடமைகளை நாங்கள் செய்கின்றோம்.

வடக்கு மாகாணத்திலே சுற்றுலாத்துறையை நன்றாக அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதற்காக இதை வடக்கு மாகாண முதலமைச்சரின் பணிப்பின் பேரில் அமைத்திருக்கிறார்கள்.

இன்று எனது அன்பரொருவர் சென்னார் யாழ்ப்பாணத்திலே தான் சிறுசிறு வீடுகளெல்லாம் விடுதிகளாக அமைத்து வைத்திருக்கிறார்கள். உண்மையிலேயே தற்போது வடக்கிற்கு வருகின்ற சுற்றுலா பயணிகள் யாழ்ப்பாணத்திற்கு சென்று வருகின்றனர். ஏனைய பகுதிகளிலுள்ள இடங்களில்



சென்று அவர்கள் தங்குவதற்கான வசதிகள் செய்யப்படவில்லை.

அதேவேளை சுண்டிக்குளம் பகுதியிலே இராணுவத்தினர் ஒரு பெரியவிடுதி அமைத்திருக்கின்றனர். அங்கு யாரும் செல்ல முடியாதுள்ளது. அதேபோல் காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலுள்ள கடற் கோட்டை கடற்படையினரது கைவசம் உள்ளது. காங்கேசன் துறையிலே ஒரு பகுதி இவ்வாறு வடக்குமாகாண சபைக்கு சொந்தமான பல சுற்றுலா மையங்களை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். இவ்வாறான நிலையில் எவ்வாறு வடக்கு மாகாண சுற்றுலாத்துறையை விருத்தி செய்வது. இதைக் கதைத்தால் இங்கு சிலர் அரசியல் பேசுவதாக சொல்லுவீர்கள்.

அதேபோல் சில பழைமை வாய்ந்த கோட்டைகள் உடைக்கப்பட்டு விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. அதேபோல கௌதாரி முனையிலே போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட புகைக்கூடு ஒன்று உள்ளது. அந்தப்பகுதி ஒரு மணல் மேடு. இதேபோல் மணல் காட்டிலே மணல்புட்டி இருந்தது. அது அழிக்கப்பட்டுள்ளது இதேபோல் சாவகச்சேரியில் இருந்த ஒரு மணல் புட்டி அழிக்கப்பட்டுள்ளது. கௌதாரி முனையிலே இயற்கையாகவே குவிக்கப்பட்ட மணல்புட்டி அதுவும் அரசியல் தலையீட்டுடன் அழிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் வெளிநாட்டு பறவைகள்வந்து செல்கின்ற ஆனையிறவு, சுண்டிக்குளம் போன்ற பிரதேசங்கள் இவ்வாறு பல சுற்றுலா மையங்கள் எமது வடக்கு மாகாணத்திலே உள்ளது அவற்றை பயன்பாட்டுக்கு மாற்றுவதிலே பல சிக்கல்கள் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-281)




# க.பொ.த (உ/த) பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் 2016 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு முதலாம் மற்றும் இரண்டாம் தடவை தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டை எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வைத்து வழங்கப்படும் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் அனைவரும் சீருடையுடனும் தேசிய அடையாள அட்டையுடனும் வருகை தரல் வேண்டும்.

முதலாம் தடவை தோற்றும் மாணவர்கள் பெற்றோருடன் சமுகம் அளித்தல் கட்டாயமானது என அவர் கேட்டுள்ளார். (2)

# தமிழக மீனவர்கள், படகுகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்

## வலியுறுத்துகிறார் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ்

(கொழும்பு)

**இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இலங்கை அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.**



இது தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

இந்தியா-இலங்கை மீன்வளத்துறை அமைச்சர்கள் இடையிலான பேச்சுவார்த்தை நிலுவையில் இருப்பது எப்போதும் எனது நினைவில் உள்ளது.

நமது இரு நாட்டு அரசுகளும் இரு நாட்டு உறவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இதனால்தான், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காணமுடிகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற இந்தியா-இலங்கை கூட்டு ஆணையத்தின் 9ஆவது கூட்டத்தில், இலங்கை மீன்வளத்துறை அமைச்சரை பேச்சுவார்த்தைக்காக இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுப்பது என்று உடன்பாடு ஏற்பட்டது.

இதுபற்றி எங்கள் நாட்டு வேளாண் அமைச்சர் ராதா மோகன்சிங்குடன் நான் ஏற்கனவே ஆலோசனை நடத்தியுள்ளேன்.

இலங்கை மீன்வளத்துறை அமைச்சருக்கு விரைவில் அழைப்பு விடுக்குமாறு அவரை கேட்டுக்கொண்டேன். அவரும் அதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்தார்.

அதேநேரம், இரு நாட்டு மீன்வளத்துறை அமைச்சர்களின் பேச்சுவார்த்தைக்கு முன்பாக, இரு நாட்டு மீனவர் சங்க பிரதிநிதிகளிடையே இன்னும் ஒரு மாதத்துக்குள் பேச்சுவார்த்தை நடத்துவது நல்லது என்பது எனது யோசனை.அதற்காக இருநாட்டு மீனவர் சங்கங்களை நாம் வலியுறுத்த வேண்டும்.இருநாட்டு மீனவர் சங்கங்களும் பேச்சுவார்த்தை நடத்தினால், அதன்பிறகு, இருநாட்டு மீன்வளத்துறை அமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்த ஏதுவாக இருக்கும்.

இந்தியாவும், இலங்கையும் தாங்கள் கைது செய்யும் அடுத்த நாட்டு மீனவர்களை அவ்வப்போது விடுதலை செய்து வருகின்றன. இந்த சாதகமான சூழ்நிலையும், நல்லெண்ணமும் பாராட்டத்தக்கது.

இந்த நல்லெண்ண நடவடிக்கை, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநில அரசுகளின் தலைமை மற்றும் மக்களின் மனதில் ஆக்கபூர்வமான தாக்கத்தை நிச்சயமாக ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த சூழ்நிலையில், மீன்வளத்துறை அமைச்சர்களின் பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு நம்மால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, இலங்கைச் சிறைகளில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிப்பது பற்றி தாங்கள் பரிசீலிக்க வேண்டும்.

அதுபோல், இந்தியச் சிறைகளில் உள்ள இலங்கை மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிப்பது பற்றி நாங்கள் பரிசீலிப்போம்.

படகுகளும், மீன்பிடி சாதனங்களும் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு முக்கியமானவை என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், அவை வெயிலிலும், மழையிலும் தொடர்ந்து கிடந்தால், பயனின்றி போய் விடும்.

அத்துடன், இருநாட்டு கடல்சார் சுற்றுச் சூழலையும் சிதைத்து விடும். எனவே, எனது 2 யோசனைகளையும் தாங்கள் ஆக்க பூர்வமாக பரிசீலிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-10)

# முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் காணிப்பிரச்சினை முடிபுக்கு கொண்டு வரப்பட்டது

## உரிமையாளருக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை அமைந்துள்ள காணி தனியாருக்கு சொந்தமானதாக காணப்பட்டு வந்த நிலையில் அதனை வைத்தியசாலைக்கென பெறுவதில் இருந்துவந்த இழுபறி நிலை முடிபுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தீர்மானத்திற்கமைவாக இப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான பொறுப்பு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசாவிடம் ஒப்படைக்கப்பட்டதற்கு அமைவாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்,பிராந்திய சுகாதார பணிப்பாளர் , வைத்தியசாலை அதிகாரிகள் மற்றும் காணி உரிமையாளருக்கிடையிலான சந்திப்பொன்று கடந்த மாதம் 28 தண்ணீரூற்றில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினரின் மக்கள் சந்திப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

அதன் பின்னர் இரண்டாம் கட்டமாக நேற்று முன்தினம் வவுனியா குடியிருப்பு வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. இதில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, வைத்திய கலாநிதி சிவமோகன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ,கரைதுறைப்பற்று பிரதேச செயலக காணி வெளிக்கள அலுவலர் சரவணன் மற்றும் காணி உரிமையாளர் பங்குபற்றியிருந்தனர்.

இச்சந்திப்பில் வைத்தியசாலைக்கான காணியானது 2012ஆம் ஆண்டு செய்யப்பட்ட அளவீட்டின் பிரகாரம் பிரதான வீதி அருகிலிருந்து 25 ஏக்கர் அளவுள்ள காணியை வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு காணி உரிமையாளர் சம்மதம் தெரிவித்தனர். இக்காணிக்கான பெறுமதி மீள மதிப்பிடப்பட்டு காணி உரிமையாளருக்கு நட்டஈட்டுக்கொடுப்பனவை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (2-281)




# சிறுவர் இல்ல விளையாட்டு விழா

(சோலைநகர்)


திருவள்ளுவர் பூன்பள்ளி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளி/செல்வாநகர் அ.த.க. பாடசாலை அதிபர் எஸ். கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக புதுமுறிப்பு கிராம அலுவலர் திருமதி பாலகுமாரன் மஞ்சுளாதேவி, கிளிநொச்சி புதுமுறிப்பு முதியோர் சங்கத் தலைவர் அப்புத்துரை நவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி ஜெயகாந்தராசா கௌசலா, அக்கராயன் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி திருச்செல்வம் சாந்தகுமாரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-309)



அறிவொளி வலய நிறுவனம் ,சோலை நகரில் அமைந்துள்ள சேரமான் முன்பள்ளி சிறார்களுக்கு சூரிய சக்தியில் இயங்கும் சோலர் ஒன்றை கடந்த 5 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் முன்பள்ளியில் வைத்து வழங்கியுள்ளது. அத்துடன் சிறார்களின் பெற்றோருக்கு உடுப்பு பொதிகளையும் வழங்கி வைத்தது. (படங்கள்:-புதுமுறிப்பு செய்தியாளர்)

# ஆனி மாமகத்தில் முத்தமிழ் வாதவூரன்



பாண்டிநாட்டிலே திருவாதவூரிலே ஆமாத்தியப் பிராமண குலத்திலே சம்புபாத சிவாச்சாரியார்- சிவஞானவதியார் என்பவருக்குச் சற்புத்திரராக அவதரித்தவரே மாணிக்கவாசக சுவாமிகள்


இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் திருவாதவூரர். சிறுவயதிலேயே சகல கலைகளையும் கற்று அறிவொழுக்கங்களிலே சிறந்து விளங்கினார். அவரது சிறப்புக்களை அறிந்த அரிமர்த்தன பாண்டியன் அவரை அழைத்து அவருக்கு முதன்மந்திரிப் பதவி கொடுத்து தென்னவன் பிரமராயன் என்ற சிறப்புப் பட்டமும் வழங்கினார்.

வாதவூரர் தமக்கு வழங்கப்பட்ட மந்திரிப்பதவிக்குரிய கடமைகளைச் செய்து மன்னரின் நன்மதிப்பைப் பெற்றார். எனினும் இறைவனையடைந்து பேரின்பம் பெற வேண்டும் என நினைத்தார்.

பாண்டியன் திருவாதவூரரை அழைத்து அளவற்ற திரவியங்களைக் கொடுத்து குதிரை வாங்கும்படி கட்டளையிட்டான். குதிரை வாங்குவதற்காகச் செல்லும் வழியிலே திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தையடைந்து அங்கு சிவபெருமான் ஒரு குருந்த மர நிழலில் அடியார்கள் புடைசூழ குருமூர்த்தமாய் எழுந்தருளியிருப்பதைக் கண் டார். இக்காட்சியைக் கண்ட திருவாதவூரர் அப்பரமாச்சாரியாரின் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி தமக்கு ஞான உபதேசம் செய்யும் படி பிரார்த்தித்தார். பரமாச்சாரியாரும் அவருக்கு தீட்சை செய்தருளினார். அவர் அனலிடைப்பட்ட மெழுகுபோல மனமுருகிப் பரமாச்சாரியாரை வணங்கி பழுதில்லாத சொல்மணிகளை அன்பாகிய இழையினாற் கோர்த்து திருவாசகமாகிய பாமாலையைச்சூடினார். இதனாற் பரமாச்சாரியார் அவருக்கு மாணிக்கவாசகர் என்னுந் திருநாமத்தைச் சூட்டியருளினார். மாணிக்கவாசகரும் தனது ஆபரணங்களையும் பாண்டியன் குதிரை வாங்குவதற்காகக் கொடுத்த திரவியங்களையும் பரமாச்சாரியரது திருமுன்னிலையிலேயே வைத்து வணங்கினான். பரமாச்சாரியார் அவைகளைச் சிவ புண்ணியங்களுக்கு உபயோகமாகும்படி செய்தருளினார்.

மாணிக்கவாசகரின் இச் செயற்பாடுகளை ஏவலாளர்கள் மூலம் அறிந்த அரசன் அவரை உடனே வருமாறு திருமுகமூலம் அழைத்தான். மாணிக்கவாசகர் அச் செய்தியை உடனே பரமாச்சாரியாரிடம் காட்டினார். பரமாச்சாரியார் பாண்டியனுக்குக் கொடுக்கும்படி மாணிக்க மணி ஒன்றை அவரிடம் கொடுத்தனுப்பி குதிரைகள் ஆவணி மூல நட்சத்திரத்தன்று வரும் என்று பாண்டியனுக்குச் சொல்லும்படி கட்டளையிட்டு அனுப்பினார்.

சில நாட்களின் பின் குதிரைகள் வராதமை கண்டு அரசன் மாணிக்கவாசகர்மீது கோபங்கொண்டு அவரைச் சிறையில் அடைத்தான். மாணிக்கவாசகர் மனவேதனையுடன் சிவபிரானைத் தியானித்து முறையிட்டார். பெருமான் ஆவணி மூலநாளிலே காட்டிலுள்ள நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி மதுரைக்குக் கொண்டுவந்தருளினார். இதையறிந்த பாண்டியன் மகிழ்ச்சியடைந்து மாணிக்கவாசகரை மீட்டு அவரையும் அழைத்துக்கொண்டு போய் குதிரைகள் அனைத்தையும் பந்தியில் கட்டுவித்தான். அன்றிரவு வந்த குதிரைகள் எல்லாம் நரிகளாகி நின்ற குதிரைகளையும் கடித்துவிட்டு ஊளையிட்டு நகரெங்கும் திரிந்தது.




கோபமடைந்த பாண்டியன் இதெல்லாம் வாதவூரரின் சூழ்ச்சியேயென அவர் மீது கோபங்கொண்டு மீண்டும் சிறையில் அடைத்து வருத்தினான். சிவபெருமான் மாணிக்கவாசகரின் துன்பத்தை நீக்கியருளவும் வந்தியென்னும் செம்மனச் செல்வியின் சிவபக்தியை உலகுக்குக்காட்டவும் எண்ணிவைகை நதியைப்பெருக்கெடுக்கச்செய்தார். அதுமதுரையை அழிப்பது போல கரைபுரண்டு பாய்ந்தது. பாண்டியன் சோமசுந்தரப் பெருமானை வணங்கி முறையிட்டும் வைகையின் பெருக்குக் குறைவில்லை. இதனால் தான் இறைவனான மாணிக்கவாசகருக்குத் துன்பம் செய்தமையே வைகை பெருக காரணமென்றறிந்து அவரைச் சிறையிலிருந்தும் நீக்கி வைகைப் பெருக்கை வற்றச் செய்து வைகையின் கரையையடைக்குமாறுவேண்டினான். மாணிக்கவாசகர் சிவபிரானைத்தியானித்தும் வைகையின் பெருக்கு வற்றியது. கரையை அடைக்க நகர மக்களை நதிக்கரைக்கு அழைத்து ஒவ்வொருவருக்கும் பகுதி அளந்து விடப்பட்டது. அனைவரும் தத்தமது பங்குகளை அடைத்தனர். சிவபெருமானிடத்திலே பேரன்பு கொண்டவரும் பிட்டு விற்றுச் சீவனம் செய்பவருமான வந்தியென்னும் மூதாட்டியின்பங்கு அடைக்கப்படவில்லை. இம்மூதாட்டியார்தனது பங்கை அடைக்க ஆளில்லையே என்று சிவபெருமானிடம் முறையிட்டார்.

இறைவன் அடியார்மீது இரக்கம்கொண்டுதானேகூலியாளாகவந்து கூடையுந்தலைமேற்கொண்டு கொட்டுடைத் தோழராகி வேடைகொண்டயர்னார். அவரிடம் பிட்டு வாங்கித் தின்று மென்று ஆடியும் பாடியும் ஓடியும் விளையாடி பிட்டு நன்றென்று கூறிப் பிறைமுடியசைத்தும் களைப்பினால் படுத்துறங்குபவர் போல் கொன்றை மரநிழலிலே நடித்தும் நின்றாரேயன்றி குறித்த பங்கை அடைத்து முடிக்கவில்லை. இதைக்கண்ட பாண்டியனின் காரியதரிசி ஒருவன் கூலியாளாக, வந்தவருக்கு பிரம்பினால் அடித்தான். அந்த அடி பாண்டிய மன்னன் மீதும் எல்லோர்மீதும் பட்டது. கூலியாள் மறைந்துவிட்டார். அனைவரும் இது இறைவனின் விளையாட்டே என்று கடவுளை வணங்கினர். பாண்டியன் தனது ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்படி மாணிக்கவாசகரை வேண்ட அதற்கு உடன்படாமல் எல்லாவற்றையும் துறந்து திருப்பெருந்துறையையடைந்து பரமாச்சாரியாரை வணங்கி உபதேசம் பெற்றார்.

ஒருநாள் பரமாச்சாரியார் அடியவர் எல்லோரையும் திருப்பெருந்துறையிலே இருக்குமாறு பணித்து மறைந்தருளினார். சில நாட்கள் செல்ல இறைவனருளால் அங்குள்ள தடாகத்திலே ஒரு சோதி தோன்றியது. மணிவாசகருடன் இருந்த அடியார்களெல்லாம் அச்சோதியுட்புகுந்து சிவலோகஞ் சேர்ந்தனர்.

மாணிக்கவாசகர் இறைவன் கட்டளைப்படி திருவுத்தரகோசமங்கை, திருவிடைமருதூர், திருவண்ணா மலை, திருக்கழுங்குன்றம் முதலிய திருத்தலங்களைத் தரிசித்து திருவாசகம் பாடி சிதம்பரத்தை அடைந்தார். அங்கு புத்தர்களுடன் வாதிட்டு அவைகளையெல்லாம் ஊமைகளாக்கியும்ஊமையாகவிருந்தபௌத்த அரசனின் மகளைப்பேச வைத்து பௌத்தர்கள் எல்லோரும் சைவசமயத்தின் உண்மையை உணர்ந்து சைவராக வைத்தபெருமைக்குரியவரானார்.

மாணிக்கவாசகரின் திருவாசகத்தின் பெருமையை எல்லோரும் அறியவேண்டுமென்று விரும்பி பிராமண வேடத்தோடு அவரிடம் வந்து திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சொல்லச்செய்து ஏட்டிலே எழுதி தாமேகைச்சாத்திட்டு அவ்வேட்டுப் பிரதியை கனகசபைப் படியில் வைத்து மறைந்தருளினார். மறுநாள் பூசைக்கு வந்த அந்தணர்கள் அவ்வேட்டுப்பிரதியைக் கண்டு வியந்தனர். அடியார்கள் எல்லோரையும் அழைத்து மாணிக்கவாசகரிடம் சென்று அதன் பொருளைக்கூறுமாறு கேட்க, சுவாமிகள் பொன்னம்பலத்திற்கு அழைத்துப்போய் "பொருள்இவரேதான்" என்று நடராசப் பெருமானைச் சுட்டிக்காட்டி அவர்கள் எல்லோருங் காணக்கூடியதாக கனகசபைக்குட் புகுந்து பெருமானோடு இரண்

த.பரராசசிங்கம்
நீர்வை அன்பன்

## மாணிக்கவாசகர் குருபூசை இன்று

யாழ்.காரைநகர் கிழவன்காடு கலாமன்ற அறநெறிப்பாடசாலை நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு கிழவன்காடு கலாமன்ற மனோன் மணி கலையரங்கத்தில் இடம்பெறும். கிழவன்காடு கலாமன்ற உப தலைவர் ச.இராசநாயகம் வரவேற்புரையினையும் "புகழில் திகமும் அழகன்" எனும் தலைப்பில் சொற்பொழிவினை வவுனியா தமிழ்ச் சங்க அமைப்பாளர் காரை த.சிவ குமாரனும் வழங்குவார்.

இதேவேளை பெரியபுராணத்தில் விஞ்சி நிற்பது ஆண் டவர் சோதனையா? அடியவர் சாதனையா? எனும் தலைப்பில் சிறப்பு பட்டிமன்றமும் இடம்பெறும். (இ

++++++++++

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் மாணிக்க வாசகர் குருபூசை இன்றுகாலை9மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரட்ணம் சிறப்பு விருந்தினராக திருச்சபை நாயக அமைப் பாளர் ஸ்ரீலஸ்ரீ கதிர்குமாரசாமி சுமு கலிங்கமும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி. கு.விஜயரகுநாதன், சமயப் புலவர் மு.திருஞான சம்பந்தப் பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

++++++++++

யாழ்ப்பாணம் சி.சி.த.க பாடசாலையில் மாணிக்கவாசகர் குருபூஜை நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும்.இந் நிகழ்வில் திருவாசகம் எனும் தேன் என்ற தலைப்பில் கருணாலய முதல்வர் ஐ.சிவராஜாவின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறும்.அத்துடன் திருமதி த.சிவநாதன் ஆசிரியை நற்சிந்தனை, மாணவர் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (இ-5-136)

++++++++++

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் மாணிக்கவாசக சுவாமிகளின் குரு பூசைத் தினம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய மண்டபத்தில் இடம் பெறும்.தலைவர் ஏ.வி. கணேசலிங்கம் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் சிறப்புரையை பண்டிதர் மா.கணநாதன் நிகழ்த்துவார். (இ-7)

## மாணிக்கவாசகரின் குருபூசை தின திருமுறை மனனப்போட்டி பரிசளிப்பு

வண்ணை -சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் மாணிக்கவாசக சுவாமிகள் குரு பூசை தினதிருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழா நாளை 9 ஆம்திகதிசனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பரிசளிப்புவிழாவுக்கு கணேசன் ஆடையக முதல்வர் க.சிவநேசன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கு வார்.

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு 25.06.2016 சனிக்கிழமை நடைபெற்ற திருமுறை மனனப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்றோர்.

பாலர் பிரிவு தரம்-1

முதலாம் இடம் சு.ஸஸாங்கி-யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, இரண்டாமிடம் பு.சன்னுயன்-யா/கோப்பாய் நாவலர்தமிழ் வித்தியாலயம், மூன்றாமிடம் க.ஷானுயா-யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

பாலர் பிரிவு தரம்-2

முதலாம் இடம் சி.வரேண்யா-யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, இரண்டாமிடம் வி.சிறிகலா-யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, மூன்றாமிடம் செ.திவ்வியா-யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

கீழ்ப்பிரிவு தரம் 3

முதலாமிடம்லோ.டேனிலா- யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் இரண்டாமிடம் கோ.சர்மிகா -சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப் பாடசாலை, சி.ஸ்ருதி- கைலாஸ. நாத வேதசிவாகம அற நெறிப் பாடசாலை.

கீழ்ப்பிரிவு தரம் -4

முதலாமிடம் ச.வைஸ்ணவி -யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, இரண்டாமிடம் சி.கஜானி-சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப்பாடசாலை, மூன்றாமிடம் சி.சங்கவி-யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## எதிர்காலச் சந்ததியை பாதுகாக்க புதியதிட்டம்

### போதைப்பொருள் தடுப்பு செயலணி உருவாக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி செயற்றிட்டத்தின் கீழ் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான செயலணி 6 மாவட்டங்களில் முன்னெடுத்துள்ள நிலையில், 7 ஆவது மாவட்டமாக புத்தளம் மாவட்டத்தில் அடுத்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக செயலணியின் தலைவர் சமந்த குமார தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்இது தொடர்பில்அவர் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் சட்டவிரோதமான முறையில் அதிகளவு போதைப் பொருள் கொண்டுவரப்படுகின்றமையினால் போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்து செல்வதுடன் சிறுவர்களே அதிகமாக பாதிக்கப்பட்டு வருகின்றனர் என தெரிவித்தார்.

இதனால் எதிர்கால சிறுவர்களின் நிலை கேள்விக்குறியாகி விடுவதோடு, இவ்வாறான செயற்பாடுகளில் பெற்றோர்களே அதிகளவில் சிறுவர்கள் மற்றும் பெண்களை பலவந்தமான முறையில் ஈடுபடுத்தி வருகின்றனர். இவ்வாறான சட்டவிரோத செயற்பாட்டை குறைக்கும் முகமாகவே நாம் இந்த செயலணியை மேற்கொண்டு வருகின்றோம் என அறிவித்தார்.

குறிப்பாக, புத்தளம் மாவட்டத்தை தெரிவு செய்தமைக்கான காரணம் குறித்து ஊடகவியளாலர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சமந்த குமார கருணாரத்ன, புத்தளம் மாவட்டத்திலேயே அதிகளவு குற்றச் செயல்கள் அதிகரிக்கப்பட்டு வருவதாக பொலிஸ் தகவல்கள் பதிவாகியுள்ளமையால், புத்தளம் மாவட்டத்தையும் இந்த செயலணிக்குள் இணைத்துக் கொண்டுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார். (இ-10)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# தமிழ் இலக்கியங்கள் காட்டும் அறிவியல் சிந்தனைகள்...

உலகத்திலே மிகவும் பழைமையான பண்பட்ட மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள தமிழ் மொழியின் இலக்கண இலக்கியங்கள் மொழியின் சிறப்புக்களை வெளிப்படுத்துவதோடு தமிழரின் நாகரிக மேம்பாட்டினையும் கலை, அறிவியல், அரசியல், தத்துவம் போன்ற துறைகளில் இருந்த அறிவு ஆற்றல்களை வெளிப்படுத்துவனவாய் அமையப்பெற்றுள்ளன. தமிழ் இலக்கியங்கள் படிப்போரின் உள் ளத்திற்கு இன்பத்தைக் கொடுப்பதோடு உள்ளங்களைச் செம்மை செய்வனவாகவும் காணப்படுகின்றன. இலக்கியங்கள் மட்டுமன்றி இலக்கண நூல்களும் வாழ்வறம் பேசும் தன்மையுடையனவாகக் காணப்படுகின்றன. தொல்காப்பியம் மொழிக்கு இலக்கணம் கூறுவதோடு மொழியைப் பேசும் மக்க ளின் வாழ்க்கைக்கும் இலக்கணம் கூறி வாழ்வியல் நெறிகளை இயம் புகிறது. இலக்கியம் என்பது வெறும் இரசனைக்குரிய ஒன்றாக மட்டும் இல்லாமல் அனுபவமும் அறிவிய லும் கலந்த படைப்பாகவே ஆக்கப்பட்டுள்ளது. அன்றைய தமிழர் கண்ட கனவுகளே இன்றைய நிஜங்கள். இன்றைய அறிவியல் வளர்ச்சியின் ஆணிவேராக பண்டைய தமிழரின் வாழ்வியல் அமைந்துள்ளது. இதனைப் பல தமிழ் இலக்கியங்கள் நமக்குப் பறைசாற்றுகின்றன. பழந்தமிழரின் வாழ்வில் அணுவில் தொடங்கி அண்டம் வரையிலும் அறிவியல் பரவிக்கிடக்கின்றது.

மனிதவாழ்வின் நெறிகளை முழுமையாக மாண்புறக் கூறுகின்ற திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களில் வையத்தில் வாழ் வாங்கு வாழக் கைக்கொள்ள வேண் டிய வளமான நெறிகள் பிரிவாகத் தரப்பட்டுள்ளன. வாழ்வியல் நெறிகளை விளக்குகின்ற நோக்கிலேயே சிலம்பு, மேகலை போன்ற காப்பியங்கள் படைக்கப்பட்டுள்ளன. கம்பராமாயணம் மூலம் ஒரு தனி மனிதனின் வாழ்க்கைக்கு விளக்கம் தருகிறார் கம்பர். சமயம் சார்ந்து படைக்கப்பட்டுள்ள நூல்களும் மனிதனின் வாழ்வறம் போற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. தேவாரம், திருவாசகம், நாலாயிரம் திவ்ய பிரபந்தம் ஆகிய இலக்கியங்கள் இறைவனைப் போற்றுவதோடு அறிவியல் சிந்தனைகளை தன்னகத்தே கொண்டனவாகவே காணப்படுகின்றன.

அணுவை உடைக்கமுடியும் என்பதை அறிவியல் அறிவால், கற்பனையில் கூட ஏற்றுக்கொள்ளாத காலத்திற்கு முன்னரே

அணுவைத் துளைத்தேழ் கட லைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்
(திருவள்ளுவமாலை– ஒளவையார்)

என்று அணுவைத் துளைக்கும் அறிவியலை தமிழ் இலக்கியம் பேசியுள்ளது. ஓர் அணுவை நூறு பங்காக்கி ஒரு பங்குக்கு கோன் என்று பெயரிட்டான் கம்பன்

சாணிலும் உளன், ஓர் தன்மை
அணுவினைச் சத கூறு இட்ட
கோணினும் உளன்...
(கம்பராமாயணம்– இரணியன் வதைப் படலம்)

இடையின்றி அணுக்களெல்லாம் சுற்றுமென இயல் நூலார் இசைத்தல் கேட்டோம் என்று பாரதி அணு க்களின் அசைவுகள் குறித்து அழ குத் தமிழில் பாடியுள்ளான். கம்பன் படைத்த புட்பக விமானமும், சீவக சிந்தாமணியில் திருத்தக்க தேவர் காட்டும் மயில் பொறியும் வானூர்தி வரும் முன்னே இலக்கியங்கள் காட் டிய அறிவியல் சிந்தனைகளே.

ஐம்பூதங்களால் உருவானது இவ்வுலகம் எனில் அது எவ்விதம் என்ற கேள்வி அறிவியலுக்கு சவாலாக அமைந்த ஒரு காலத்தில் பரிபாடல்

கருவளர் வானத்திசை யிற் றோன்றி
உருவறிவாரா வொன்ற னூழியும்
உந்து வளி கிளர்ந்த வூழூழியும்
செந்தீச் சுடரிய வூழியும் பணி யொடு
தண் பெயரலை இய வூழி யுமவையிற்
நுண்முறை வெள்ள மூழ்கி யார் தருபு
மீண்டும் பீடுயர் பீண்டியவற் றிற்கும்
உள்ளீடாகிய விரு நிலத்தூழி யும்

என்று கூறும் பாடலில் வானிலிருந்து காற்றும் காற்றிலிருந்து தீயும் தீயிலிருந்து நீரும் நீரில் இருந்து நிலமும் தோன்றிய நிலைகள் கூறப்பட்டுள்ளன. கதிரவனில் பிரிந்து பூமி நீண்ட காலத்திற்கு நெருப் புக் கோளமாக இருந்தது என்றும் அது காலப் போக்கில் சிறிது சிறிதாகக் குளிர்ந்து பனிப்படலமாக மாறி பின் நெடு நாட்களுக்குப் பிறகு நிலம் தோன்றியது என்றும் உல கத்தின் தோற்றம் குறித்த பல அறி வியல் உண்மைகளை எடுத்துக் கூறுகின்றது. இவ்வாறான பல்வேறு விதமான அறிவியல் சிந்தனைகளைத் தாங்கியனவாகவே தமிழர் தம் இலக்கண இலக்கியங்கள் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன.

தேடல் இருக்கும் இடத்தில்தான் வெற்றி கிடைக்கிறது. பறவையைக் கண்ட மனிதன் தானும் பறக்க நினைத்தான். இறக்கைகள் இல்லாதபோ தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. விளைவு விமானத்தின் துணையோடு விண்ணில் பறந்தான். இவ்விமானங்கள் பற்றிய பல குறிப்புக்கள் சங்கப் பாடல்களிலேயே பயின்று வந்துள்ளமையைக் காண முடிகின்றது.

வலவன் ஏவ வானவூர்தி
(புறம்–27)

எனும் பாடலடியில் வானவூர்தி என்ற அற்புதமான சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இதைப்போலவே சிலப்பதிகாரத்தில் கண்ணகி கோவலனோடு ஆகாயத்திலிருந்து வந்திறங்கிய விமான ஊர்திகள் ஏறிச் சென்றதாக ஒரு காட்சி. இதனை இளங்கோ

வாடா மாமலர் மாரி பெய்தாங்கு
அமரர்க் கரசன் தமர் வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்னோடு
வானவூர்தி ஏறினள் மாதோ
கானமர் புரிகுழல் கண்ணகி தானென்...

என்ற வரிகளில் வாடாத பெரிய மலர்களை மழையாகச் சொரிந்து அமரர்களின் அரசனான இந்திரனும் வானோரும் வந்து வாழ்த்த தன் கணவன் கோவலனோடு கண்ணகி விமானத்தில் ஏறிச் சென்றாள் என்று கூறப்பட்டுள்ளது.

இன்றைய மருத்துவ உலகம் மனிதனைக் காப்பாற்ற மரணத்தின் வாயில்வரை செல்கிறது. குளோனிங் முறையென்று உயிரின் மாதிரிகளாக புதிய உயிர்களை உருவாக் கும் அளவு வளர்ந்துவிட்டது. ஆனால் மருத்துவப் படிப்புக்களோ செயன்முறைப் பயிற்சிகளோ இல்லாத அந்தக் காலகட்டத்திலும் சித்தர்களும் சிறந்த வைத்தியர்களும் வாழ்ந்துள்ளமை அவர்கள் படைத்த இல க்கியங்கள் நமக்குக் கூறுகின்றன.

மாதா உதிரம் மலமிகில் மந்த னாம்
மாதா உதிரம் சலமிகில் மூங் கையாம்
மாதா உதிரம் இரண்டொக் கில் கண்ணில்லை
மாதா உதிரத்தில் வைத்த குழ விக்கே
(திருமந்திரம்)

என்று திருமூலர் இயற்றிய திருமந்திரப் பாடல்களைக் கேட்கும் போது தாயின் உதிரத்தில் மலம் இருந்தால் பிறக்கும் குழந்தை மந்தபுத்தி உடையதாகவும் நீர் மிகுந்தால் குழந்தை ஊமையாகவும் மலம், நீர் இரண்டும் மிகுதியாக இருந்தால் குழந்தை குருடாகப் பிறக்கும் என்ற கருத்துக்கள் இப்பாடலில் பயின்று வருகின்றன. இக்கருத்துக்கள் இன்றைய மருத்துவர்களின் ஆலோசனைகளிலும் அமைந்திருப்பதை அறியமுடிகின்றது.

பழுதுபட்ட ஒரு உறுப்பை எடுத்துவிட்டு வேரோடு உறுப்பைப் பொரு த்துதல் என்பது இன்றைய மரு த்துவ உலகின் சாதனை. இதனைப் பற்றிய குறிப்பொன்று சிலம்பில் காணப்படுகின்றது.

நாடு விளங்க கொண்புகழ் நடுகதல் வேண்டித்தன்
ஆடு மழைத் தடக்கையறு த்து முறை செய்த
பொற்கை நறுந்தார்ப் புனை தேர்ப் பாண்டியன்...

கீரந்தையின் இலக்கக் கதவை தான் தட்டியதற்குத் தண்டனையாக தன் கையைத் தானே துண்டித்துக் கொள்கிறான் பாண்டியன். அதன் பின் பொன்னாலாகிய கையைச் செய்து வைத்துக்கொண்டான். அன்றிலிருந்து பொற்கைப் பாண்டியன் என அழைக்கப்பட்டான் என்கிறது அச்செய்தி. உறுப்பினை இழந்த ஒருவன் செயற்கை உறுப்பினைப் பொருத்திக் கொண்டு பயன்படுத்தியதை இப்பாடலில் உணரலாம்.

பெரியபுராணத்திலும் இதைப் போன்ற ஒரு நிகழ்வினைக் காண முடிகின்றது. சிவன் மீது மிகுந்த பற்றுக்கொண்ட கண்ணப்பர் ஒரு நாள் இறைவன் கண்ணிலிருந்து குருதி வழிவதைக் கண்டார். பதறி னார். உடனே மூலிகைகளை பறித்துக்கொண்டு வந்து பிழிந்து அதைக் கண்ணில் விடுகிறார். குருதி நிற்கவில்லை. எனவே சற்றும் தாமதிக்காது தனது கண்ணைத்தோண்டி அவ்விடத்தில் அப்புகின்றார். அங்கு குருதி வழிவது நிற்கிறது. இதனை

இதற்கினி என்கண் அம்பால் இடந்தப் பின் எந்தையார் கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்து முன் இருந்து தங்கண்
முதற்சர மடுத்து வாங்கி முதல்வர்தங் கண்ணில் அப்ப...

என்ற அடிகளில் கூறுகிறார்.

இன்று கண்பார்வையற்றவர்களுக்கு பிறருடைய கண்ணை வைத்து அறுவைச்சிகிச்சை செய்து பார்வை பெற வைக்கும் அறிவினை மிக எளிமையாக கண்ணப்பர் கதை மூலம் வெளிப்படுத்தியுள்ளார் சேக்கிழார்.

மேகம் கடல் நீரைப்பெற்று மழையாகப் பொழிகின்றது என்பது அறிவியல் கண்டுபிடிப்பு. இது ஒரு நாள் ஆய்வின் முடிவல்ல. பல்லாண்டுகளின் பலன். ஆனால் இதனை விளக்கும் முகமாக

நிறைகடல் முகந்துராய் நிறைந்து
நீர் தளும்பும் தன் பொறை தவிர்பு அசைவிட..
(பரி 6:1–2)

என்று பரிபாடலில் முகில்கள் கடலின் கண் நீரை முகர்ந்து கொண்டு வந்து ஊழிய முடிவின் கண் முழுகுவிக்க முயன்றது போல் மழை பெய்தது என்ற கருத்துக் கூறப்பட்டுள்ளது. இவை ஆய்வின் வெளிப் பாடுகள் அல்ல. அன்றைய தமி ழரின் அறிவின் வெளிப்பாடுகள்.

கே.எம். செல்வதாஸ்
ஆசிரியர்,
யாழ்.உடுத்துறை
மகா வித்தியாலயம்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 164

உலகின் மிகப் பெரிய பனிப்பாறையின் பெயரென்ன?

புதிர் 164இற்கான விடைகளை 18.07.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 163 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

யாரும் சரியான பதில் எழுதவில்லை

புதிர் 163க்கான கேள்வியும் விடையும்:
உலகின் முதல் மடிக்கணனி (First Laptop in the world) என்ன பெயரால் அழைக்கப்பட்டது? டைனா புக் (Dyna BooK)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 164

சரியான விடை:-..........
முழுப்பெயர்:-..........
முகவரி:-..........
தொ.பே. இல:..........
கையொப்பம்:..........

# கொத்தணிக்குண்டு குற்றச்சாட்டு தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம்



யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், அது தொடர்பில் சுயாதீனமான மற்றும் நம்பகரமான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று பல்வேறு மட்டங்களிலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 32 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை குறித்த வாய்மூல அறிக்கையை வெளியிட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹூசேன் தனது அறிக்கையில் இந்த கொத்தணிக் குண்டுகள் குறித்து பிரஸ்தாபித்திருந்தார்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் கொத்தணிக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தற்போது அண்மைய கால அறிக்கைகளில் புதிய ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குற்றச்சாட்டு குறித்து சுயாதீனமான பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐ.நா. கோருகின்றது என்று வாய்மூல அறிக்கையின் 33ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் யுத்த காலத்தில் கொத்தணிக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டனவா? இல்லையா? என்பது தொடர்பில் நாட்டில் பாரிய வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில் இந்த கொத்தணிக்குண்டு விவகாரம் தொடர்பில் காணாமற் போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை விடுத்தார்.

அதாவது யுத்தத்தின் போது இலங்கை இராணுவத்தினருக்கு கொத்தணிக்குண்டுகளை பயன்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டிருந்தால் இராணுவத் தேவையின்படி அதற்கான அவசியம் ஏற்பட்டிருந்தால் அந்த நேரத்தில் அது சட்டவிரோதமானதல்ல என்பதை சுட்டிக்காட்டுகிறேன் என்று காணாமற்போனோர் தொடர்பாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம கூறியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் யுத்தம் முடிவடைந்தபோது கொத்தணிக்குண்டு பயன்பாட்டுத்தடை அமுலில் இருக்கவில்லையென்பதை பரணகம ஆணைக்குழுவின் இரண்டாவது ஆணையின் பிரகாரம் வெளிப்படுத்தியுள்ளோம் என்பதை வலியுறுத்துகிறோம். 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியே இந்தத் தடை உலகில் செயற்பாட்டுக்கு வந்தது எனவும் மக்ஸ்வெல் பரணகம குறிப்பிட்டுள்ளார்.

தருஷ்மன் அறிக்கையிலும் இவ்வாறு கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் அதற்கான மூலங்கள் முன்வைக்கப்பட வில்லை. ஆனால் இலங்கை இராணுவம் அந்தக் குற்றச்சாட்டை மறுத்ததுடன் அந்த மறுப்பானது அந்தநேரம் ஐ.நாவினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனை எமது ஆணைக்குழு அவதானித்திருந்தது என்றும் காணாமற் போனோர் தொடர்பாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் யுத்த்தின் இறுதிக் கட்டத்தின்போது கொத்தணிக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவா? இல்லையா? என்பது தொடர்பான சர்ச்சை நிலவி







வருகின்ற சூழலில் மக்ஸ்வெல் பரணகம இவ்வாறானதொரு கருத்தினை தெரிவித்துள்ளமை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

அதாவது, காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கடந்த 2014ஆம் ஆண்டு இரண்டாவது ஆணையொன்று அப்போதைய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது.

அதாவது யுத்த காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா? போர்க்குற்றங்கள் நடந்துள்ளனவா? என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பரணகம ஆணைக்குழுவிற்கு கடந்த அரசாங்கத்தினால் ஆணை வழங்கப்பட்டது.

அந்த இரண்டாவது ஆணைக்கு அமைய கடந்த வருடம் பரணகம ஆணைக்குழு அறிக்கையையும் அரசாங்கத்துக்கு வழங்கியிருந்தது. அதன்படி குறித்த இரண்டாவது ஆணைக்கு ஏற்பவே மக்ஸ்வெல் பரணகம இந்த கொத்தணிக்குண்டு விவகாரம் தொடர்பீல் நேற்று முன்தினம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதாவது, கொத்தணிக் குணடுகள் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தால் அது பாரதூரமான விடயம் என்றும் அது தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அரசாங்கம் ஜெனிவாவில் தெரிவித்திருந்த நிலையிலேயே பரணகம இவ்வாறான கருத்தைக் கூறியிருக்கின்றார்.

மேலும் கொத்த்ணிக் குண்டு விவகாரம் தொடர்பான தகவல்கள் வெளிவந்த போது அரசாங்கப் படைகளால் எந்த வகையிலும் கொத்தணிக்குண்டுகள் பயன்படுத்தப்படவில்லை என்றும், அரசாங்கத்திற்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதாகவும் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த அமைச்சரவையின் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, இறுதிக்கட்ட யுத்தத்தில் இராணுவத்தினர் எக்காரணத்தைக் கொண்டும் கொத்தணிக்குண்டுகளை பயன்படுத்தவில்லை என்பது எமக்குத் தெரியும் என்று கூறியிருந்தார்.

அத்துடன், கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள புகைப் படங்கள் இலங்கையிலிருந்து எடுக்கப்பட்டன என்பதை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்? அதுமட்டுமன்றி, இது இலங்கை இராணுவத்தினுடைய கொத்தணிக்குண்டுகள் என எவ்வாறு கூற முடியும்? இது தொடர்பில் முதலில் ஆராய வேண்டும். அதுமட்டுமன்றி, இந்த புகைப்படங்களில் இருக்கும் கொத்தணிக்குண்டுகள் இராணுவத்தினுடையதா? அல்லது புலிகளுடையதா என யாருக்குத் தெரியும்? மேலும் யுத்தம் முடிவடைந்து 7 வருடங்கள் கடந்த பின்னர் தற்போது ஏன் இவற்றை வெளியிட வேண்டும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் பல கேள்விகளை இந்த விடயத்தில் எழுப்பியிருந்தார்.

அரசாங்கம் கொத்தணிக் குண்டு குற்றச்சாட்டை முழுமையாக இவ்வாறு மறுத்துள்ள நிலையில் யுத்தத்தின்போது கொத்தணிக் குண்டுகளை பயன்டுத்தியிருந்தாலும் அதில் தவறு இல்லை என காணாமற்போனோர் குறித்த ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளமை தற்போது புதுசர்ச்சையை தோற்றுவிப்பதாக அமைந்திருக்கின்றது.

கொத்தணிக் குண்டுப்பாவனை தொடர்பில் சர்வதேச சட்டங்கள் எதனைக் கூறினாலும் அவற்றை யுத்தத்தின்போது பயன்படுத்துவது யுத்த விதிமுறைகளுக்கே அப்பாற்பட்டதாகக் கருதப்படுகின்றது. எனவே இது மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என்ற விடயத்தின் கீழ்வரும் ஒரு அம்சமாக காணப்படுகிறது.

எனவே, தற்போது அரசாங்கம் இந்த விடயத்தில் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் பக்கச்சார்பற்ற மற்றும் நம்பகத்தன்மையான விசாரணையை நடத்த வேண்டியது அவசியமாகும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல்ஹூசேனும் இந்த விடயத்தை மிகவும் ஆணித்தரமான முறையில் தனது வாய்மூல அறிக்கை ஊடாக வலியுறுத்தியிருக்கின்றார்.

எனவே, அரசாங்கம் தாமதிக்காமல் இது தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். விசேடமாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் உள்ளக விசாரணைப் பொறிமுறையில் இது தொடர்பான விசாரணைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதன் காரணமாகவே பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெறவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றனர்.

அதாவது இது போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையினால் வெறுமனே உள்ளக விசாரணையினூடாக இதற்கான நீதியை பெற முடியுமா என்பது மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தும் விடயமாக அமைந்திருக்கின்றது. அதனால், அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் தொடர்பிலும் புரிந்து கொள்ள வேண்டியது அவுசியமாகும்.

அதாவது கொத்த்ணிக் குண்டுகள் உண்மையில் யுத்தத்தின்போது பயன்படுத்தப்பட்டிருந்தால் அது நிச்சயம் பாரிய அழிவை ஏற்படுத்தியிருக்கும். இதில் பொது மக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கும்.

எனவே, இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் நம்பகரமான விசாரணையை முன்னெடுப்பதே அனைத்திற்கும் பதில் கூறுவதாக அமையும்.

2009ஆம் ஆண்டு கொத்தணிக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டிருந்தால் அது சட்டவிரோதமானது அல்ல என்று கூறிவிட்டு, இந்த விடயத்தை வெறுமனே விட்டுவிட முடியாது. இது தொடர்பில் மக்கள் நம்பிக்கை வைக்கும் அளவில் விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஜெனிவாவில் நடைபெற்ற இலங்கை நிலைமை தொடர்பான விசேட உபகுழுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, யுத்தத்தின்போது கொத்தணிக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டிருந்தால் அது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என உறுதியளித்திருந்தார்.

எனவே, இந்த விடயங்கள் அனைதையும் கருத்திற் கொண்டு அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் நம்பகரமான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

## உயிரியல் பகுதி-II மூன்று மணித்தியாலங்கள்

### உயிரியல் பகுதிII தொடர்ச்சி

02) (A)(i)வினைத்திறனான வாயுப்பரிமாற்றத்திற்கு சுவாசமேற்பரப்பு கொண்டிருக்கவேண்டிய அத்தியாவசியமான இயல்புகள் யாவை?

(ii)ஆயிரங்காலிகள். நூறுகாலிகள் ஆகியவற்றில் காணப்படத்தக்க சுவாச மேற்பரப்புக்கள் எவை?

(iii)ஆயிரங்காலிகள். நூறுகாலிகளின் குருதியில் சுவாச நிறப் பொருட்கள் காணப்படுவதில்லை. இதற்கான காரணம் யாது?

(iv)மனிதனின் சுவாசப்பாதையில் உட்புறமாக படலிடப்பட்டு காணப்படும் இரண்டு பிரதான கல வகைகளைப் பெயரிடுக.

v) சிகரெட் புகையில் உள்ள இரண்டு பிரதான பிரதிகூலமான கூறுகளைப் பெயரிட்டு. அவ் ஒவ்வொரு பாதிப்புக்களைக் குறிப்பிடுக.

(vi)புகைத்தல் தவிர்ந்த சில கைத்தொழில்களினால் சுவாசத் தொகுதியில் ஏற்படத்தக்க ஒழுங்கீனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(B) (i)விலங்குகளில் இயைபாக்கத்தின் முக்கியத்துவம் யாது?

(ii)விலங்குகளின் இயைபாக்கத்தில் முக்கியம் பெறும் இரண்டு தொகுதிகள் எவை?

(iii)இணைபாக்கத்தில் அந்த இரண்டு தொகுதிகளுக்கும் இடையிலான பிரதான மூன்று வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(iv)விலங்குகளின் இயைபாக்கத்தில் குருதிச்சுற்றோட்டத் தொகுதியின் பங்களிப்பு யாது?

(v) (a) நரம்புக்கலத்தின் ஓய்வுமென்சவ்வழுத்தம் என்பதால் கருதப்படுவது யாது?

(b) ஓய்வு மென்சவ்வழுத்தம் எவ்வகையான காரணிகளில் தங்கியுள்ளது?

(c) தாக்க அழுத்த நிலையில் முனைவழித்தலுக்கு பொறுப்பான அயன் எது?

(d) மனித மூளியின் தொழில்கள் இரண்டினைக் குறிப்பிடுக.


(C) (i)வாங்கி என்றால் என்ன?

(ii)வாங்கிளின் இயல்புகள் எவை?

(iii)கீழே தரப்பட்டுள்ள தூண்டலை உணருகின்ற மனித தோலில் உள்ள வாங்கி/வாங்கிகளைப் பெயரிடுக.

வெப்பம். தொடுகை. அழுத்தம்


(iv)கீழே தரப்பட்டுள்ள கட்டமைப்பைப் பெயரிட்டு. a தொடக்கம் e வரையான பகுதிகளை பெயரிடுக.




மேற்தரப்பட்ட கட்டமைப்பைப் பெயரிடுக..................

(v) மேலே தரப்பட்ட வரிப்படத்தில் X எனக் குறிக்கப்பட்ட பகுதியின் பெயர் என்ன?

03) (A) ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படுகின்ற உபகரணத்தின் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது



(a)(i) இது என்ன உபகரணம்?

(ii)இந்த உபகரணத்தை ஒழுங்கமைக்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கைகள் எவை?

(iii) மேற்குறித்த உபகரணத்தைப் பயன்படுத்தி. ஆவியுயிர்ப்பு வீதத்தை அளவீடு செய்யும்போது எடுக்கவேண்டிய முக்கியமான எடுகோளைக் குறிப்பிடுக.

(iv) காற்றோட்டம். வளிமண்டல ஈரப்பதன் போன்ற சூழற் காரணிகளின் வேறுபாட்டிற்கு ஏற்ப ஆவியுயிர்ப்பு வீதம் வேறுபடுவதை பரிசோதிப்பதற்கு மேற் குறிப்பிட்ட உபகரணத்தை ஆய்வுகூடத்தில் எவ்வாறு மாற்றியமைக்கலாம்?

காற்றோட்டம். வளிமண்டல ஈரப்பதன்

(v)பின்வரும் நிலைமைகளில் ஆவியுயிர்ப்பு வீதம் எவ்வாறு மாறுபடுகின்றது என்பதைக் குறிப்பிடுக.

வெப்ப நிலை அதிகரிப்பு...............

வளிமண்டல ஈரப்பதன் அதிகரிப்பு..................

(vi)காற்றோட்டம் அதிகரிக்கும்போது ஆவியுயிர்ப்பு வீதம் மாற்றமடைவற்கான காரணம் யாது?

(b) (i)கசிவு. ஆவியுயிர்ப்பு ஆகியன தாவரங்களிலிருந்து நீர் இழக்கப்படும் இரண்டு முறைகளாகும். இவ் இரண்டு முறைகளிலும் நீர் வெளியேறுவதில் உள்ள இரண்டு பிரதான வேறுபாடுகளைத் தருக.

(ii) சில தாவரங்களில் மாத்திரம் ஏன் கசிவைக் காண முடிகின்றது?


(B) (i) (a) விலங்குகளில் நைதரசன் கழித்தல் என்பதால் கருதப்படுவது யாது?

(b) விலங்குகளின் கழிவகற்றலில் இழக்கப்படுகின்ற நீரின் அடிப்படையில் நைதரசன் கழிவுப் பொருட்களை ஏறுவரிசைப்படி எழுதுக.

(ii) மனிதனின் பிரதான கழித்தல் அமைப்புக்களைத் தருக.

(iii) மனித உடலினால் உற்பத்தி செய்யப்படும் முதலான கழிவுப் பொருள்களைப் பெயரிடுக.

(iv) (a) மனிதனின் சிறுநீரகச் சிறுகுழாயின் அமைப்பின் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது. இவ்வரிப்படத்தில் a தொடக்கம் e வரையான பகுதிகளைப் பெயரிடுக.




(b)வரிப்படத்தில் (a),(d) ஆகியவற்றிற்கிடையிலான பிரதானமான கட்டமைப்பு வேறுபாடு ஒன்றினைக் குறிப்பிடுக.

(c) மனிதனின் சிறுநீரகத்தில் எப்பொழுதும் நீரைப் புகவிடும் தன்மையற்ற பகுதி எது?

(d)ADH உள்ளபோது நீரை புகவிடும் தன்மையுடையதாகும் சிறுநீரகத்தியின் பகுதி எது?

(v) ஆரோக்கியமான மனிதனின் கலன்கோள வடிதிரவத்தில் உள்ள சிறுநீரில் காணப்படாத கூறுகள் மூன்று தருக.

(C) (i) விலங்குகளின் குருதிச் சுற்றோட்டத் தொகுதியின் மொத்த வகிபங்கு என்ன?

(ii)கூர்ப்பின்போது விலங்குகளின் குருதிச்சுற்றோட்ட தொகுதியில் ஏன் விருத்தி தேவைப்படுகின்றது?

(iii)மூடிய சுற்றோட்டத்திற்கும் திறந்த குருதிச்சுற்றோட்டத்திற்கு இடையிலான இரண்டு பிரதான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(iv) (a)ஒட்சிசன் கடத்தல் தொடர்பாக மனிதனின் செங்குழியங்களில் காணப்படும் நான்கு இசைவாக்கங்களைக் குறிப்பிடுக.

(b)மனிதனின் செங்குழியங்களில் மிக அதிகளவில் காணப்படும் நொதியம் எது?

(c)மனிதனின் செங்குழியங்களின் உற்பத்தியைத் தூண்டும் ஓமோன் எது?

(v)மனிதனில் நடுநிலைநாடிகளையும் ஒற்றைக்குழியங்களையும் எவ்வாறு வேறுபடுத்தலாம் எனக் குறிப்பிடுக.

04) (A) (i) அயன்மகரந்தச் சேர்க்கை என்பதால் கருதப்படுவது யாது?

(ii) அயன்மகரந்தச் சேர்க்கையின் அனுகூலம் யாது?

(iii)அந்தோபைற்றாவின் பெண்புணரித்தாவரம் / முளையப்பையின் வரிப்படத்தைக் வரைந்து. அதன் பகுதிகளைப் பெயரிடுக.

(iv) அந்தோபைற்றாக்களில் இனப்பெருக்க செயன்முறையில் இரட்டைக்கருக்கட்டல் செயன்முறையை விபரிக்குக.

(v)அந்தோபைற்றுக்களின் சூல்வித்தில் கருக்கட்டலின்பின் நடைபெறும் மாற்றங்கள் நான்கினை குறிப்பிடுக.

(vi)வித்தின் உறங்குநிலை என்றால் என்ன?

(vii)வித்து உறங்குநிலையின் முக்கியத்துவம் என்ன?

(B) (i) பின்வரும் பதங்களை விளக்குக.

தூய வழி. அமைப்பொத்த நிறமூர்த்தம். பரிபாடை (Codon)

(ii)மெண்டலினால் குறிப்பிடப்பட்ட பாரம்பரிய காரணிகளுக்கும். இனப்பெருக்கம். கலப்பிரிவின்போது நிறமூர்த்தங்களின் நடத்தைக்கும் இடையில் காணப்படும் இரண்டு ஒற்றுமைகளைத் குறிப்பிடுக.

(iii)கீழே தரப்பட்டுள்ள மெண்டலியன் அல்லாத பாரம்பரிய இயல்புகளைப் பெயரிட்டு பொருத்தமான இனக்கலப்பின் விளைவால் உருவான $F_2$ இன் தோற்றவமைப்பு விகிதங்களையும் தருக.

| | | மெண்டலியன் அல்லாத பாரம்பரிய இயல்பு | $F_2$ இன் தோற்றவமைப்பு விகிதம் |
|---|---|---|---|
| a) | பரம்பரை அலகு ஒன்றின் எதிருரு மற்றையதிலும் முற்றாக ஆட்சியானது அல்ல | | |
| b) | பரம்பரை அலகு ஒன்றின் இரண்டு தானங்களிலும் உள்ள ஆட்சியான பரம்பரையலகு பிறிதொரு இரட்டைப் பின்னடைவான எதிருருவால் மறைக்கப்படுவது | | |
| c) | ஆட்சியான பரம்பரையலகானது பிறிதொரு ஆட்சியான பரம்பரையலகால் மறைக்கப்படுவது | | |

(iv)இலிங்க முறையில் இனம் பெருக்குகின்ற குடித்தொகை ஒன்றில் A,B ஆகிய பரம்பரை அலகுகள் இணைப்பில் உள்ளதாகக் கருதுக. குறிப்பிட்ட விகிதத்தில் நடைபெற்ற விகாரத்தினால் அவை முறையே a,b ஆக மாறியது. அடுத்த சந்ததியில் எதிர்பார்க்கப்படும் தோற்றவமைப்புக்கள் எவை?

(v) பின்வரும் கொள்கைகளில் பாரம்பரிய மாறல்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைக் குறிப்பிடுக.

(a) இலாமாக்கின் கொள்கை (b) டாவினின் கொள்கை

(vi)பெரும்பாலான குடித்தொகைகளில் Hardy-weinberg சமநிலையைக் குழப்புகின்ற மூன்று காரணிகளைத்தருக.

(C) சூழற்றொகுதியொன்றில் அளவிடப்பட்ட சக்தியானது வருடத்திற்கு. ஒரு சதுர மீற்றர் பரப்பில். கிலோயூலில் தரப்பட்டுள்ளன.

மொத்த சூரிய சக்தி $= 4.71 \times 10^8$

தேறிய முதலுற்பத்தித் திறன் $= 4.95 \times 10^6$

முதலான உற்பத்தியாளரின் சுவாசம் $= 0.88 \times 10^6$

(a) சூழற்றொகுதி ஒன்றின் இரண்டு பிரதான தொழிற்பாட்டு இயல்புகளைக் குறிப்பிடுக.

(b)சூழற்றொகுதி ஒன்றின் தேறிய முதலுற்பத்தித் திறன் என்பதால் கருதப்படுவது யாது?

(c)மேலே குறிப்பிடப்பட்ட சூழற்றொகுதியில் கொள்கை ரீதியாக பிறபோசணிகள் பெற்றுக்கொண்ட மொத்த சக்தியின் அளவு யாது?

(d)மேலே குறிப்பிட்ட சூழற்றொகுதியில் மேற்பரப்பை வந்தடையும் சக்தியிலிருந்து பதிக்கப்படும் சக்தியின் வீதத்தைக் கணிக்க.

(ii) உயிர்ப்பல்வகைமை செழிப்பு மையம் என்பதால் கருதப்படுவது யாது?

(iii) உயிர்ப்பல்வகைமை பிரகடனத்தில் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் எவை?

(iv) (a) அழிந்துவிட்ட இனம் என்ற பதத்தினால் கருதப்படுவது யாது?

(b) அழிதல் செயன்முறையில் கூர்ப்பு ரீதியான முக்கியத்துவம் யாது?

(c) உயிர்ப்பல்வகைமை வரலாற்றின் இறுதியான பாரிய பேரழிவு நடைபெற்ற காலத்தைக் குறிப்பிட்டு அக்காலப்பகுதியில் அழிந்த இரண்டு உயிரினக் கூட்டத்தைப் பெயரிடுக.

அழிவு நடைபெற்ற காலம். உயிரினக் கூட்டம்

### பகுதி B - கட்டுரை வினாக்கள்

நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தேவையேற்படின் பெயரிடப்பட்ட வரிப்படங்களைப் பயன்படுத்துக.

◆(ஒவ்வொரு வினாவுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்)

◆5. "உயிர்வாழ்விற்கு நீர் முக்கியமான ஒரு கூறாகும்." நீரின் பௌதிக இரசாயன இயல்புகளைத் தொடர்புபடுத்தி உயிரினங்களுக்கு நீரின் முக்கியத்துவத்தை ஆராய்க.

6. (a) மனிதனின் இரப்பையின் அமைவிடம், மொத்தக் கட்டமைப்பு, இழைய ஒழுங்கமைப்பு ஆகியவற்றை விபரிக்குக.

(b)மனித இரப்பையின் தொழில்களை விபரிக்குக.

7. (a)இருவித்திலைத் தாவர வேரின் முதல் இழையங்களை விபரிக்குக.

(b)அடிப்படை கோட்பாடுகளின் உதவியுடன் மண்ணீர் வேரின் காழ்வரை கடத்தப்படுதலை விளக்குக.

8. மனிதனின் கபச்சுரப்பியினால் வெளிவிடப்படும் ஓமோன்களைப் பற்றி விபரித்து அவை ஒவ்வொன்றினதும் தொழில்களைக் குறிப்பிடுக.

9. (a) திண்மக் கழிவுகள் என்றால் என்ன?

(b) திண்மக்கழிவுகள் திறந்த நிலையில் இடப்படுவதால் உருவாக்கப்படும் சுற்றாடல் பிரச்சினைகள் எவை?

(c) திண்மக்கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் பயன்படும் தற்கால முறைகளை விபரிக்குக.

10. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

(a) கிளைகோப்பகுப்பு

(b) மனிதனின் சுக்கிலப்பாய்மம்

(c) மனிதனின் இலிங்கம் இணைந்த பாரம்பரியம்

இவ் வினாத்தாளுக்குரிய விடைகளை w.w.w.facebook.com/valampurii எனும் முகநூலிலும் w.w.w.valampurii.lk என்ற இணையத்தள முகவரியிலும் பார்வையிடலாம்.

◆ ◆ ◆

### உயிரியல் பகுதி I விடைகள்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 6) | 1 | 11) | 1 | 16) | 2 | 21) | 3 | 26) | 5 | 31) | 5 | 36) | 1 | 41) | 4 | 46) | 3 |
| 2) | 2 | 7) | 4 | 12) | 1 | 17) | 3 | 22) | 3 | 27) | 2 | 32) | 4 | 37) | 3 | 42) | 3 | 47) | 4 |
| 3) | 4 | 8) | 5 | 13) | 4 | 18) | 3 | 23) | 1 | 28) | 4 | 33) | 4 | 38) | 3 | 43) | 1 | 48) | 3 |
| 4) | 2 | 9) | 4 | 14) | 2 | 19) | 1 | 24) | 3 | 29) | 2 | 34) | 1 | 39) | 5 | 44) | 4 | 49) | 1 |
| 5) | 3 | 10) | 4 | 15) | 3 | 20) | 2 | 25) | 5 | 30) | 5 | 35) | 5 | 40) | 4 | 45) | 5 | 50) | 2 |

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## இணைந்த கணிதம் பகுதி-I

Teacher:T.Vijaenthiran (BSc, Dip, in.Ed),J/H/C

01. n நேர் முழுஎண்ணாக இருக்க,
$\sum_{r=1}^{n} r(2^{r-1}) = 1 + (n-1)2^n$ எனக் கணிதத்தொகுத்தறிமுறையால் நிறுவுக.

02. $y = |2x-1| + 2x - 1$ இன் வரைபை வரைந்து $|2x-1| \geq 1-2x$ ஆக இருக்கும் x இன் பெறுமானவீச்சைத் தருக.

03. $^{n}p_r = {}^{n-1}p_r + r\,{}^{n-1}p_{r-1}$ எனக் காட்டுக.

04. $\lim_{\theta \to \pi} \frac{\sqrt{2+\cos\theta}-1}{(\pi-\theta)^2} = \frac{1}{4}$ எனக் காட்டுக.

05. $\int_0^1 (1-x)x^{\frac{2015}{2}}\,dx$ ஐக் காண்க.

06. $ay = 3(a^2 - x^2)$ எனும் வளையீபாலும் x அச்சாலும் அடைக்கப்பட்டபரப்பளவு $4a^2$ சதுரஅலகு எனக் காட்டுக.

07. செங்கோணமுக்கோணி OAB இன் ஆள்கூறுகள் O(0, 0), A (a, 0), B (0, b) ஆகும். AB இன் நடுப்புள்ளி C எனின் CA = CO எனக் காட்டுக. $\hat{OCA}$ ஐக் காண்க.

08. $x^2 + y^2 + 2xh + a^2 = 0$, $x^2 + y^2 - 2ky - a^2 = 0$ ஆகிய வட்டங்களின் பொதுநாணின் நீளம் $2\sqrt{\frac{(h^2-a^2)(k^2+a^2)}{h^2+k^2}}$ எனக் காட்டுக.

09. $r^2 = g^2 + f^2$ எனின், $x^2 + y^2 - 4r^2 = 0$, $x^2 + y^2 + 2gx + 2fy = 0$ எனும் வட்டங்கள் வெளிப்புறமாகத் தொடாதபோதிலும் உட்புறமாகத் தொடும் எனக் காட்டுக.

10. $A = \tan^{-1}\left(\frac{x\sqrt{3}}{2\lambda-x}\right)$ ஆகவும் $B = \tan^{-1}\left(\frac{2x-\lambda}{\lambda\sqrt{3}}\right)$ ஆகவும் இருப்பின் A - B இன் பெறுமானம் யாது?

11. a) i. $a \neq 0$ ஆயின், $ax^2 + bx + c = 0$ எனும் சமன்பாடு இரண்டு மூலங்களைமட்டும் கொண்டிருக்கும் எனக் காட்டுக.

ii. $(x-a)(x-b) = h^2$ எனும் சமன்பாடுஎப்பொழுதும் மெய்மூலங்களைக் கொண்டுள்ளதுஎனக் காட்டி, ஒவ்வொரு மூலகமும் ab இலும் பெரிதாயின்,
$h^2 < ab(1-ab)$ எனவும் உய்த்தறிக.

b) சார்புகள் P(x), Q(x) என்பவை x - p ஐப் பொதுக்காரணியாகக் கொண்டிருப்பின் x - p ஆனதுசார்பு P(x) - Q(x) இன் ஒரு காரணிஎனக்காட்டுக. இதிலிருந்து,
சார்புகள் $ax^3 + 4x^2 - 5x - 10$, $ax^3 - 9x - 2$ என்பன ஒரு பொதுவான காரணியைக் கொண்டிருப்பின் a இன் பெறுமானங்களைக் கண்டுசார்புகளைக் காரணிகளின் பெருக்கமாகத்தருக.

12. a) $(1+x)^n$ இன் விரிவைத் தருக.
$(1+2x+x^2)(1+x)^n$ இன் விரிவைக் கருதுவதன் மூலமாக,
$C_r + 2C_{r-1} + C_{r-2} = \frac{(n+2)(n+1)\ldots\ldots\ldots\ldots(n+3-r)}{r!}$ எனவும்,
$(1+x)^n$ இன் விரிவிலிருந்து,
$C_5 + C_1C_4 + C_2C_3 = \frac{n(2n-1)(2n-2)(2n-3)(2n-4)}{5!}$ எனவும் காட்டுக

b) $\frac{1}{(1+x)(1-ax)} + \frac{a}{(1+ax)(1-a^2x)} + \frac{a^2}{(1-a^2x)(1-a^3x)}$ எனும் தொடரின் பொதுஉறுப்பு Ur ஐ எழுதுக. Ur = f (r) - f (r+1) ஆகுமாறு f (r) ஐக் கண்டு இதிலிருந்து, $\sum Ur = \frac{1}{1-a}\left(\frac{1}{1+x} - \frac{a^n}{1+a^n x}\right)$ எனக் காட்டுக.

13. a) i. தாயம் $A = \begin{pmatrix} a & b \\ -b & a \end{pmatrix}$ ஆகவும் தாயம் $B = \begin{pmatrix} c & d \\ -d & c \end{pmatrix}_{2\times2}$ ஆகவும் இருப்பின் தாயம் AB, தாயம் BA ஐக் காண்க.
$|AB| = |BA| = |A||B|$ எனக் காட்டுக.

ii. $\alpha, \beta$ என்பன $\frac{\pi}{2}$ இன் ஒற்றை மடங்கு எனின்,
$A = \begin{pmatrix} Cos^2\alpha & Cos\alpha\,Sin\alpha \\ Cos\alpha\,Sin\alpha & Sin^2\alpha \end{pmatrix}$, $B = \begin{pmatrix} Cos^2\beta & Cos\beta\,Sin\beta \\ Cos\beta\,Sin\beta & Sin^2\beta \end{pmatrix}$
எனின், AB ஐக் காண்க.

b) $z = x + iy$ எனின் $|z - i| = 1$, $arg\left(\frac{z}{z+i}\right) = \frac{\pi}{2}$ என்பவற்றின் ஒழுக்கைத் தெக்காட்டின் தள வடிவில் தந்து ஆகன் வரிப்படத்தில் வரைக.
$\frac{2z+1}{iz+1}$ என்பதன் கற்பனைப் பகுதி-2 எனின் சிக்கலெண் z ஆனது $x + 2y - 2 = 0$ இல் கிடைக்கும் எனக் காட்டுக.

14. a) $y = \frac{x^2+1}{(x-2)(x+2)}$ எனும் வரைபை வரைக.
இதிலிருந்து $x^2 = \frac{4k+1}{k-1}$ என்பதில் x இற்கு தீர்வு இல்லாமல் இருப்பதற்கான k இன் பெறுமானவீச்சைக் காண்க.

b) A $(p^2, -p)$, B $(q^2, q)$, C $(r^2, -r)$ என்பவற்றை உச்சிகளாகக் கொண்ட முக்கோணி ABC இனுள் இணைகரம் AFDE வரையப்படுகின்றது. புள்ளிகள் D, E, F என்பன முறையே BC, CA, AB இல் அமைந்திருப்பின் இணைகரத்தின் உயர் பரப்பளவு
$\frac{1}{4}(p+q)(q+r)(p-r)$ எனக் காட்டுக.

15. a) $\int_a^{\infty} \frac{dx}{x^4\sqrt{(a^2+x^2)}} = \frac{2-\sqrt{2}}{3a^4}$ எனக் காட்டுக.

b) $\int \frac{dx}{\sqrt{(1+3x-x^2)}}$ ஐ x ஐக் குறித்துத் தொகையிடுக.

c) பகுதிகளாகத் தொகையிடும் முறையைப் பயன்படுத்தித் தொகையிடுக.
$\int \sqrt{x^2 - a^2}\,dx$

16. a) $ax + by + c = 0$ இற்கு $(x_1, y_1)$ இலிருந்துவரையும் செங்குத்துத் தூரம் $\left|\frac{ax_1+by_1+c}{\sqrt{(a^2+b^2)}}\right|$ எனக் காட்டுக.

A, B என்பன x, y அச்சுக்களில் உள்ள புள்ளிகளாகும். A, B ஐ விட்டமுனைப் புள்ளிகளாகவும் உற்பத்தி O இற்கூடாகவும் செல்லும் வட்டத்திற்கு உற்பத்தியிலிருந்து வரையப்படும் தொடலியிற்குப் புள்ளிகள் A, B இலிருந்து வரையப்படும் செங்குத்துத் தூரங்கள் p, q ஆகும். வட்டத்தின் சமன்பாட்டையும், அதன் மையம், ஆரை ஆகியவற்றையும, தொடலியின் சமன்பாட்டையும் காண்க.

17. a) $tanA - \tan B = \frac{Sin(A-B)}{CosA\,Cos\,B}$ எனக் காட்டுக.
இதிலிருந்து, $\frac{Sin\,x}{Cos\,3x} + \frac{Sin\,3x}{Cos\,9x} + \frac{Sin\,9x}{Cos\,27x} = \frac{1}{2}(tan\,27x - tanx)$ எனக் காட்டுக.

b) $A + B + C = \pi$ எனின், $Sin^4A + Sin^4B + Sin^4C = \frac{3}{2} + 2Cos\,A\,Cos\,B\,Cos\,C + \frac{1}{2}Cos\,2A\,Cos\,2B\,Cos\,2C$ எனக் காட்டுக.


◆ ◆ ◆

## இணைந்த கணிதம்-II

### பகுதி - A


1. t=0 இல் X எனும் புகையிரதம் U எனும் சீரான வேகத்துடன் P எனும் நிலையத்தைக் கடந்து சிறிது நேரம் இயங்கிய பின் f எனும் சீரான அமர்முடுகலுடன் இயங்கி Q எனும் நிலையத்தில் ஓய்விற்கு வருகின்றது. Y எனும் புகையிரதம் t=0 இல் P எனும் நிலையத்தில் ஓய்விலிருந்து f எனும் சீரான ஆர்முடுகலுடன் இயங்கி X அமர்முடுகத் தொடங்குமுன் U எனும் வேகத்தை அடைந்து பின்னர் U எனும் சீரானவேகத்துடன் இயங்கி f எனும் சீரான அமர்முடுகலுடன் இயங்கி Q இல் ஓய்விற்கு வருகிறது. ஒரே வரிப்படத்தில் வேகநேர வரைபை வரைந்து புகையிரதங்கள் இயங்க எடுத்த நேரவித்தியாசம் $\frac{U}{2f}$ எனக் காட்டுக.

2. A, B என்பன கிடை மட்டத்திலுள்ள புள்ளிகளாகும். A இலிருந்து ஒரே நேரத்தில் இரு துணிக்கைகள் கதி V உடன் எறியப்படுகின்றன. ஒரு துணிக்கை B இனூடு t நேரத்திலும் மற்றைய துணிக்கை B யினூடு T நேரத்திலும்சென்றால்,
$4V^2 = g^2(t^2 + T^2)$ எனக் காட்டுக.

3. 

படத்தில் காட்டியவாறு நிலையான ஆப்பில் சமகரடான முகங்களில் $m_1$, $m_2$ எனும் திணிவுகள் இயங்கும் எனின் ஆர்முடுகல் a ஆனது,
$a(m_1 + m_2) = g(m_1 \sin\alpha - m_2 \sin\beta - \mu m_1 \cos\alpha - \mu m_2 \cos\beta)$
என்பதால் தரப்படும் எனக் காட்டுக. $\mu$ - உராய்வுக் குணகமாகும்.

4. 3m, m திணிவுகளையுடைய ஒத்தகோளங்கள் இரண்டுமுறையே 2U, U வேகங்களுடன் எதிர் எதிரே இயங்கி மோதுகின்றன. மோதலின் பின் வேகங்களைக் காண்க. 3m இன் இயக்கத்திசைக்கு யாது நிகழும்?

5. 

B, C என்ற மூட்டுக்களுக்குரிய தகைப்பு வரிப்படத்தை வரைவதன் மூலம் கோல்களின் தகைப்புகளை வகைப்படுத்துக.

6. ஒவ்வொன்றும் கிடையுடன் கோணம் $45^c$ அமைக்கும் இரு தளங்களுக்குமிடையே 2a எனும் நீளம் கொண்ட இலேசான கோல் ஒன்று கிடையாய் ஓய்விலுள்ளது. கோல் அமைந்துள்ள நிலைக்குத்துத் தளமானது அவ்விரு சாய்தளங்களின் இடைவெட்டுக் கோட்டிற்குச் செங்குத்தாயுள்ளது. ஒவ்வொரு தளத்திற்கும் கோலிற்கும் இடையேயான உராய்வுக் குணகம் $\frac{1}{2}$ ஆகும். W எனும் நிறையுடைய துணிக்கை ஒன்றுகோலின் நடுப்புள்ளியில் வைக்கப்படுகின்றது. துணிக்கையானது கோல்வழியே படிப்படியாக நகர்த்தப்பட்டால் அது தூரம் $\frac{4a}{5}$ செல்லு முன்னர் கோலானது நழுவாது எனக் காட்டுக.

7. முக்கோணி ABC வடிவில் வளைத்த சீர்கம்பியானது A இலிருந்து தொங்கவிடப்பட்டுள்ளது. A இனூடாக நிலைக்குத்துக் கோடு BC ஐ D இல் சந்திப்பின், $\frac{BD}{DC} = \frac{a+b}{a+c}$
எனக் காட்டுக. (இங்கு a, b, c வழமையானவை. திணிவு நீளத்திற்கு நேர் விகிதசமனாகும்)

8. கணிதப் புதிர் ஒன்றிற்கு மூன்று மாணவர்கள் விடை எழுதுவதற்கான நிகழ்வுகள் முறையே $\frac{1}{2}, \frac{1}{3}, \frac{1}{4}$ எனின், விடை எழுதுவதற்கான நிகழ்தகவைக் காண்க.

9. ஆகாரம் 6 ஆகவும் இடை, இடையம் 9 ஆகவும் உள்ள 5 புள்ளிகளில் ஓர் புள்ளி 10 எனின், மற்றையை புள்ளியாது?

10. 13, 15, 17 எனும் புள்ளிகளின் மாறல் திறனைக் காண்க.

இணைந்த கணிதம் பகுதி-I வினாத்தாளுக்குரிய விடைகளை w.w.w.facebook.com/valampurii எனும் முகநூலிலும் w.w.w.valampurii.lk என்ற இணையத்தள முகவரியிலும் பார்வையிடலாம்.

(மிகுதி நாளை வெளிவரும்)

# கொத்தணிக் குண்டு விவகாரம் எனது கருத்து சட்டரீதியானதே

## பரணகம பதிலளிப்பு

(கொழும்பு)

**கொத்தணிக் குண்டுகள் தொடர்பான குற்றச்சாட்டுத் தொடர்பாக தாம் வெளியிட்ட கருத்து சட்டரீதியான நிலைப்பாடே என்று காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.**



இலங்கைப் படையினர் போரில் கொத்தணிக் குண்டுகளைப் பயன்படுத்தியிருந்தாலும் கூட, அது சட்ட விரோதமானது அல்ல என்றும், 2010 ஆம் ஆண்டே, கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும் அனைத்துலக பிரகடனம் நடைமுறைக்கு வந்தது என்றும், மக்ஸ் வெல் பரணகம தெரிவித்திருந்தார்.

இவரது இந்தக் கருத்து அதிமேதாவித்தனத்தை வெளிப்படுத்தும் முயற்சி என்று கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கண்டனம் வெளியிட்டார்.

இதற்குப் பின்னர், தஹிந்து ஆங்கில நாளிதழிடம் கருத்து வெளியிட்டுள்ள மக்ஸ் வெல் பரணகம, தனது கருத்து சட்டரீதியான நிலைப்பாடு என்று தெரிவித்தார்.

அதேவேளை, முன்னதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு நேற்று முன்தினம் அளித்திருந்த செவ்வி ஒன்றில், மக்ஸ்வெல் பரணகம கூறியிருப்பதாவது,

"கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பாக நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற ஐ.நா. மனித ஆணையாளரின் கோரிக்கை அடிப்படையற்றது.

எமது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட இரண்டாவது ஆணைக்கு அமைய கொத்தணிக்குண்டு குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தப்பட்டது. இதுபற்றிய எல்லா சான்றுகளும் ஆய்வு செய்யப்பட்டன.

இதன் முடிவில் இலங்கை இராணுவம், கொத்தணிக் குண்டுகளைப் போரில் பயன்படுத்தவில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.

2010 ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதலாம் திகதி தான் கொத்தணிக் குண்டுகளை பயன்படுத்துவதை தடை செய்யும் அனைத்துலக பிரகடனம் நடைமுறைக்கு வந்தது.

எனவே இந்த வகை குண்டுகளை இலங்கை படையினர் போரில் பயன்படுத்தியிருந்தாலும் கூட, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அதில் தவறு காண முடியாது.

கொத்தணிக் குண்டுகளைப் பயன்படுத்த வேண்டிய நிலை இலங்கை இராணுவத்துக்கு ஏற்பட்டிருந்தாலும் கூட அது அனைத்துலக சட்ட மீறலாக அமையாது.

இலங்கை போர் முடிவுக்கு வந்த பின்னர் தான், கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும் அனைத்துலக பிரகடனம் நடைமுறைக்கு வந்தது என்பது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு தெரியவில்லை.

இது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளின் மூலம் இலங்கையின் பெயரைக் கெடுக்கின்ற முயற்சி" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# பௌத்தர்களுக்கு இடமில்லாமல் போய்விடுமோ என அஞ்சுகின்றேன்

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்



அரசியல் அமைப்பில் பௌத்தர்களுக்கு இடமில்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் பௌத்தர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மொரட்டுவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்று எமக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.குறிப்பாக பௌத்தர்கள் என்ற ரீதியில் எமக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. அரசியல் அமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடம் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் உருவாகியுள்ளது.இந்த விடயம் குறித்து ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. நாட்டின் அரசியல் அமைப்பு குறித்து கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும்.

என்ன மாற்றங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன. வார்த்தை விளையாட்டுக்களின் ஊடாக ஏதேனும் தீங்கு மேற்கொள்ளப்படுகின்றதா? என்பது கண்காணிக்கப்பட வேண்டும்.வார்த்தைகளில் மூடி இந்த நாட்டை பிளவுபடுத்த முயற்சிக்கப்படலாம்.

மேலும் போர்க் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களின் அடிப்படையாகக் கொண்டு படைவீரர்களை பலிகொள்ளும் செயற்பாடுகள் கிரமமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-10)

# அரசு டெங்குநோயைக் காட்டி பணம் சம்பாதிக்கின்றது

டெங்கு ஒழிப்பை ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு, டெங்கு நோயை பயன்படுத்தி பணத்தை சம்பாதிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளால், பெண் தாதி ஒருவரின் உயிர் பறிபோயுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் கூறியுள்ளது.

இதனைத் தவிர வைத்திய சாலையில் பணியாற்றும் ஊழியர்கள் சிலருக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. டெங்குநோய் பரவலின் பாரதூரமான நிலைமையை தீர்மானிக்க இதுவே போதுமானது என சங்கத்தின் தலைவரான தாதி அதிகாரி காமினி குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

அரச புள்ளிவிபரங்களின் படி இந்த வருடம் டெங்கு நோய் ஏற்பட்டவர்களில் இதுவரை 35 பேர் பலியாகியுள்ளனர். நோயாளர்களின் எண்ணிக்கையும் 20 ஆயிரத்து 507 ஆக அதிகரித்துள்ளது.

இவற்றை கவனத்தில் கொள்ளாத அரசாங்கம்டெங்கு நுளம்பு பரவலுக்கு காரணமாக இருந்ததாக கூறி அபராதத்திற்கு மேல் அபராதத்தை விதித்து வருகிறது எனவும் குமாரசிங்க குற்றம் சுமத்தியுள்ளார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## பதினொன்று முதல் இருபத்தைந்து வரை

பெண்களாக இருக்கட்டும் ஆண்களாக இருக்கட்டும்; 11 முதல் 25 வரையிலான வயது முக்கியமான பருவம்.

ஒருவர் பண்பு நலன்கள், பழக்கவழக்கங்கள்– ஏன் எதிர்காலமே கூட இந்த இடைப்பட்ட வருடங்களில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்த வயதில் கெடுதல்கள் இவர்களை அதிகமாகக் கவர்ந்திழுக்க வாய்ப்பிருக்கிறது. திருடும் பழக்கமாகட்டும், பாலுணர்வு பற்றிய குற்றங்களாகட்டும், இந்தப் பருவத்தில் தான் பற்றிக் கொள்கின்றன.

தன்னிச்சையாக நடக்கின்ற ஆர்வமும் , நிமிர்கின்ற விருப்பமும் இந்த வயதில்தான் ஏற்படும். நமக்குச் சுயமாக முடிவெடுக்கும் உரிமை உண்டு என்று இவர்கள் எண்ண ஆரம்பிப்பது இந்த வயதில்தான்.

அத்தகைய இவர்கள் முடிவுகளை மூத்தவர்களோ பெற்றோர்களோ சரியல்ல என்று சுட்டிக் காட்டினால் அவர்களையே தங்கள் விரோதிகளாக எண்ணத் தொடங்கிவிடுவார்கள்.

பெற்றோர்களுக்கும் பெரியவர்களுக்கும் தங்கள் மீது கொஞ்சமும் பிரியமில்லை என்றும், அனுவளவும் அன்பு காட்டுவதில்லை எனவும் குற்றம் சாட்டியபடி அவர்களை விட்டு விலகிப் போய்க் கொண்டே இருப்பார்கள். இது தொடர்பாக எதிர்த்துப் பேசுவதும் இந்த வயதில்தான்.

நண்பர்களே உலகம் என்றும் , அவர்கள் சொல்வதே வேதம் என்றும் வாதிடுவார்கள்.

தான் எடுத்த முடிவு சரியா? தவறா? என்று ஒரு கணமும் சிந்திக்காமல் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செயற்படுவதும் இந்த வயதில் தான்.

உணர்ச்சிப் போராட்டங்களுக்கு வடிகால் தெரியாமலும், அதை வடிகட்டாமலும் அப்படியே கொட்டிவிடுகிற பருவம் இந்தப் பருவம் தான். பார்த்ததற்கெல்லாம் ஆசைப்படும் பருவமும் இந்தப் பருவம்தான்.

இவர்களுள் பெரும்பாலானவர்களின் படிப்பு பதினாறு, பதினேழாவது வயதோடு முற்றுப் பெற்றுவிடுகிறது. தேர்வில் எதிர்பாராத தோல்விகளைச் சந்திக்கும் போது வாழ்வை முடித்துக் கொள்ள எண்ணுவதும் வீட்டை விட்டு ஓடிவிட எண்ணுவதும் இந்த வயதுதான்.

காதல் கத்தரிக்காய் என்று ஈடுபட்டு வாழ்வை வீணடித்துக் கெள்வதும் இந்த வயதில்தான்.

ஆக–

இந்த வயதை ஒட்டிய உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தினர்–குறிப்பாகப் பெற்றோர் இவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள், இனி நமக்குப் பொறுப்பு முடிந்து விட்டது என்று இந்த இக்கட்டான நேரத்தில் ஒதுங்கிவிடாமல், இரத்த உறவு என்கின்ற நிலையில் இருந்து இறங்கி, உற்ற தோழன்– தோழிபோல நடந்து அவர்கள் பிரச்சினைகளுக்குப் பக்க பலமாக இருக்க வேண்டும்.

தன் ரசனைகளையும் உணர்வுகளையும் மதிப்பதில்லை; அன்பு இல்லை, பாசமில்லை என்ற குற்றச்சாட்டு எழாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.நாம் சொன்னால் அது நன்மைக்காகவே இருக்கும் என்று அவர்கள் நம்பும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

எதையும் கட்டாயப்படுத்தித் திணிக்காமல் உணர வைத்து ஏற்றுக் கொள்ளுமாறு செய்ய வேண்டும்.பக்குவப்படாத இந்த வயதில் சம்பந்தப்பட்ட மற்றவர்கள் துணையாகவும் விழிப்பாகவும் இல்லாது போனால், வளர்கின்ற பச்சைப் பயிரை நெருப்புக் கவ்வத் தாங்களே வாய்ப்பளித்ததாக ஆகிவிடும்.

**லேனா தமிழ்வாணன்**

# தென்சீனக்கடல் விவகாரத்துக்கு பேச்சுக்களின் ஊடாகவே தீர்வு

## இலங்கை அரசு ஆலோசனை

(கொழும்பு)

தென்சீனக் கடல் விவகாரம், அமைதியான முறையில் ஆக்கபூர்வமான, அர்த்தமுள்ள பேச்சுக்களின் மூலம் தீர்க்கப்படுவதே ஒரு வழிமுறை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சீன செய்தி நிறுவனமான சின்ஹுவாவுக்கு, இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மேலதிக ஊடகச் செயலர் சமன் அதாவுடஹெட்டி, அளித்துள்ள செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

தென்சீனக் கடல் விவகாரத்தில் சில நாடுகளுக்கு இடையில் பிரச்சினைகளும், கருத்து வேறுபாடுகளும் இருப்பதை அறிவோம்.

இந்தப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான பேச்சுக்களின் மூலம், தீர்வு காண முடியும் என்று நம்புகிறோம்.

பிராந்தியத்தில் அமைதியையும், உறுதிப்பாட்டையும் பேணுவதற்கு சீனா உறுதி பூண்டுள்ளது என்பதை எல்லா நாடுகளும் நம்புகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)



யாழ்.இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த தேர்த்திருவிழா கடந்த 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போது...

# 2017 வரவு-செலவுத்திட்டத்திலிருந்து தமிழ், சிங்கள அரச கருமமொழிகளை நடைமுறைப்படுத்த நிதி

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

2017ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து இலங்கையின் அரசகரும மொழிகளான சிங்கள மற்றும் தமிழ் மொழிகளை நடைமுறைப் படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் படவுள்ளன என தேசிய மொழிகள் துறை அமைச்சர் மனோ கணேசன் சமர்ப்பித்த குறித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அமைச்சர் கயந்த கருணாதிலக இந்த தகவலை வெளியிட்டார்.

இலங்கையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் அரச கரும மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டளவில் பொதுமகன் ஒருவர் அரச நிறுவனம் ஒன்றில் தாம் விரும்பிய மொழியில் தமக்கான தேவையை பெற்றுக் கொள்ளும் நடைமுறையை இலக்காகக் கொண்டு இந்த யோசனை அமைச்சர் மனோ கணேசனால் முன்வைக்கப்பட்டதாக கயந்த கருணாதிலக தெரிவித்தார். (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு


**201**

## மார்லன் பிராண்டோவுடன் சந்திப்பு

அதற்கு சிவாஜி கணேசன் நீங்கள் பணக்காரர் அதனால் எங்கள் குழந்தைகள் சாக்கடையில் விளையாடுவது, வறுமை காரணமாக விபச்சாரம் நடப்பது எல்லாம் உங்களுக்கு பொழுது போக்காக தோன்றுகிறது . சத்யஜித்ரே உங்களுக்காக இந்தப் படங்களை எடுக்கவில்லை எங்களுடைய மக்களுக்காக எடுத்திருக்கிறார். எங்கள் மக்களில் பலர் ஏழைகள் . அவர்கள் மாற வேண்டும், வறுமை ஒழிய வேண்டும் நாடு முன்னேற வேண்டும் என்று மக்களுக்கு உணர்த்துவதற்காக அந்த மாதிரிப் படங்களை எடுக்கிறார் என்று கூறினார்.

இது பற்றி சிவாஜி கணேசன் பிறகு கூறும் போது நான் ஆங்கிலம் பேச பயப்பிடமாட்டேன் எனக்கு தெரிந்த ஆங்கிலத்தில் விளாசி விட்டேன். மார்லன் பிராண்டோ கவனமாக கேட்டுக் கொண்டிருந்தார்.

என் பேச்சுக்கிடை யில் இரண்டு, மூன்று முறை காப்பி குடித்து விட்டார் என்னுடைய அமெரிக்க சுற்றுப் பயணத்தில் மார்லன் பிராண்டோவை சந்தித்தது மறக்க முடியாது என்று குறிப்பிட்டார்.



புதியபறவை படத்தில் சிவாஜி

உலகப் புகழ்பெற்ற கவர்ச்சிக்கன்னி மர்லின் மன்றோவையும் சிவாஜி சந்திக்க ஏற்பாடாகி இருந்தது.

காரில் நண்பர் வந்து சேர்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக சிவாஜி உரிய நேரத்தில் போய்ச்சேர முடியவில்லை.

நயாகரா மேயர்

சிவாஜி கணேசன் நயாகரா நீர்வீழ்ச்சியை பார்க்கச் சென்றார். அவரை நயாகரா நகர மேயர் வரவேற்றார். அத்துடன் அவருக்கு ஒரு தங்கச்சாவியை கொடுத்து, இன்று ஒரு நாள் நீங்கள்தான் நகரத்தின் மேயர் அதற்கு அடையாளம் தான் இந்தச் தங்கச்சாவி என்றார் .

பிற நாடுகளில் இருந்து வருகின்ற மிக முக்கிய தலைவர் அல்லது பிரமுகர்களுக்குத்தான் இத்தகைய கௌரவம் நயாகரா நகரில் தரப்படுவது வழக்கம். சிவாஜிக்கு முன்னதாக இத்தகைய கௌரவத்தை பெற்ற இந்தியர் பிரதமர் மட்டுமே.

மலேசியா

அமெரிக்க சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும் வழியில் மலேசியாவுக்கு சிவாஜி சென்றார். அங்கு அன்றைய பிரதமர் துங்கு அப்துல் ரகிமானும் மலேசிய தமிழர்களும் வரவேற்பளித்தனர்.

பிறகு சிங்கப்பூர் சென்றார். அங்குள்ள தமிழர்களும் வரவேற்பளித்தனர்.

சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய சிவாஜிகணேசனை எம்.ஜி.ஆர். மாலை அணிவித்து வரவேற்றார்.

விமான நிலையத்தில் இருந்து சிவாஜியை நடிகர், நடிகைகள் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

சிவாஜிகணேசன் சொந்தமாகத் தயாரித்த புதியபறவை மேல்நாட்டுப் படங்களுக்கு நிகராக,சிறப்பாக அமைந்தது.

1962 இல் பார்த்தால் பசி தீரும், நிச்சய தாம்பூலம், வளர்பிறை, படித்தால் மட்டும் போதுமா?, பலே பாண்டியா, வடிவுக்கு வளைகாப்பு, செந்தாமரை, பந்தபாசம், ஆலயமணி ஆகிய 9 படங்களிலும் 1963 இல் சித்தூர் ராணி பத்மினி, அறிவாளி, இருவர் உள்ளம், நான்வணங்கும் தெய்வம், குலமகள் ராதை, பார்மகளே பார், குங்குமம், இரத்தத்திலகம், கல்யாணியின் கணவன், அன்னை இல்லம் ஆகிய 10 படங்களிலும் சிவாஜி நடித்தார்.

(தொடரும்)

# ‘மைத்திரி, ரணிலின் அப்பாவி அரசாங்கம்’

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

**ஒவ்வொரு முடிவையும் அரசாங்கம் நின்று நிதானமாகவே எடுக்கின்றது. இது மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தைப் போன்றதோர் அரசாங்கமல்ல. யாரும் குழப்பமடையத் தேவையில்லை என்று தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன, இந்த அரசாங்கம் மைத்திரி மற்றும் ரணிலின் அப்பாவி அரசாங்கமாகும் எனவும் தெரிவித்தார்.**



அரசாங்கத்தகவல்திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பதிலளிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கம் பற்றியாரும்கவலைகொள்ளத் தேவையில்லை, இது அப்பாவி அரசாங்கமாகும். மகிந்தவின் ஆட்சியைப் போல குழப்பமடையத் தேவையில்லை. அரச கடன் தொடர்பிலான விபரங்கள், அறிக்கைகளில் இல்லை. மத்திய வங்கியில் பற்றாக்குறை ஏற்பட்டால், திறைசேரியின் ஊடாகவே பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், மகிந்தவின் ஆட்சியின் போது, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி உள்ளிட்ட வங்கிகளிடமிருந்தே கடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆகையால், அவை தொடர்பில், மத்திய வங்கியின் கணக்கில் இல்லை என்றும் அவர் கூறினார்.

அரச கடன் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும். அதன்பின்னர், நிவாரணங்களுக்கு பஞ்சமே இருக்காது. இவ்வருட இறுதிக்குள் நிவாரணம் கரைபுரண்டோடும். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஊடகத்துறை பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதாரண மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில், கடந்த அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களுக்கான விலைகளை குறைக்கவில்லை.

பசில் ராஜபக்ஷவுக்கு கடந்த ஆட்சியில் சட்ட ரீதியாக நியமிக்கப்பட்டிருந்த 7 மெய்ப்பாதுகாப்பு அதிகாரிகள் தவிர மேலதிகமாக, 148 இராணுவம் மற்றும் கடற்படையினர் அடங்கிய பாதுகாப்பு அணி அவருக்கு வழங்கப்பட்டிருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# 6 பேரில் ஒருவருக்கு இலங்கையில் நோய்

(கொழும்பு)

இலங்கையில் ஆறு பேரில் ஒருவருக்கு ஏதேனும் நீண்ட நாள் நோய் காணப்படுவதாக ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

அதாவது இலங்கையின் மொத்த சனத் தொகையில் 18 வீதமானவர்கள் ஏதேனும் ஓர் வகையில் நீண்ட கால நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் இந்த மதிப்பீட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நீரிழிவு, இரத்த அழுத்தம், மாரடைப்பு, புற்று நோய், பக்கவாதம், உளநோய், மூட்டு வலி உள்ளிட்ட நீண்ட கால நோய்களினால் இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 15 வயதுக்கும் குறைந்த சிறுவர், சிறுமியருக்கு அதிகளவில் தொற்று நோய்களே பரவுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

# புகையிரத கடவை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாதுகாப்பற்ற புகையிரத கடவை ஊழியர்கள் நேற்றுக்காலை முதல் மீண்டும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நாடு முழுவதிலுமுள்ள 687 பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளில் தொழில் புரியும் 2,061 ஊழியர்கள் இந்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக செயலாளர் நிமல் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

குறித்த ஊழியர்கள் கடந்த ஏப்ரல் மாதம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட போது ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென அரசாங்கத்தினால் உறுதிமொழி வழங்கப்பட்டதாகவும் எனினும் அரசாங்கம் இதுவரை ஊழியர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்கவில்லையென செயலாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 772

விமலேந்திரன்





சிவா





பிரசன்னா




கபிலன்




அச்சு



லக்சிகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பொருளாதாரத்தை கட்டியெழுப்ப கஞ்சா வளர்க்க முடியும் - கே.டி.

நாட்டின் பொருளாதாரத்தைக கட்டியெழுப்ப கஞ்சா வளர்க்க முடியும் என ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

கடன்சுமை வரிச்சுமை மற்றும் வீழ்ச்சியடையும் பொருளாதாரம் என்ற தொனிப்பொருளில் ஜே.வி.பியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கருத்தரங்கு தொடரின் பொலனறுவை அரலகங்கவில பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில,வரப்பிரசாதங்களை குறைத்துக் கொண்டு அரசியல்வாதிகள் மக்கள் இருககும் நிலைக்கு இறங்கி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் தேசிய திட்டமொன்று வகுக்கப்பட வேண்டும்.

சரத் பொன்சேகாவிடம் அரசியல வாதிகளுக்கு வாகனம் இறக்குமதி செய்ய பணம் ஒதுக்கப்பட்டமை குறித்து என்ன சொல்கின்றீர்கள் என கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த கே.டி.லால்காந்த,

பிரபுக்களுக்கு அவ்வாறு வாகனங்களை வழங்கப்படாவிட்டால் உலகம் நினைக்கும் நாம் ஓர் பிச்சைக்கார நாடு என சரத் பொனசேகா பதிலளிக்கின்றார். அவருக்கு புரியவில்லை இது ஓர் பிச்சைக்கார நாடு என்பது.வரும் நபர்களிடமிருந்தும் உலக நாடுகளுக்கு இந்த நாட்டின் தலைவர்கள் செல்லும் போதும் பிச்சை கேட்பது அவருக்கு புரிய வில்லை. யாரேனும் ஆட்சியாளர் ஒருவர் இவ்வாறு நாடு நெருக்கடியான நிலையில இருக்கும் போது இவ்வாறான கருததை வெளியிடுவாரா? என கே.டி.லால்காந்த கேள்வி எழுப்பியுள்ளார். வெளிநாட்டு சந்தையை இலக்கு வைத்து உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலமே வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-08.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.90 | 148.65 |
| பிரிட்டன் | பவுண்ட் | 186.62 | 193.42 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 159.52 | 165.99 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 147.54 | 153.62 |
| கனடா | டொலர் | 111.00 | 115.53 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 107.78 | 112.72 |
| சிங்கப்பூர் | டொலர் | 106. 86 | 110.88 |
| இந்தியா | ரூபா | 2.1524 | ------- |
| சீனா | யுவான் | 21.7325 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.9106 |
| குவைத் | டினார் | 481.0267 |
| ஓமான் | ரியால் | 377.5369 |
| கட்டார் | ரியால் | 39.8880 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7147 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5426 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 90 | 90 | ·80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 80 | 90 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 700 | 500 | 600 | 600 | 600 | 500 |
| தக்காளி | 260 | 220 | 240 | 240 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 100 | 80 | 80 | 100 |
| கோவா | 160 | 100 | 150 | 150 | 160 | 150 |
| கரட் | 200 | 150 | 160-200 | 200 | 240 | 150 |
| பூசணி | 120 | 110 | 140 | 130 | 160 | 70 |
| புடோல் | 120 | 50 | 80 | 80 | 80 | 50 |
| வாழைக்காய் | 120 | 90 | 100 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 100 | 120 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 60 | 80 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 250 | 160 | 200 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 60 | 80 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 140 | 120 | 160 | 150 |
| பயற்றங்காய் | 150 | 60 | 100 | 80 | 80 | 120 |
| லீக்ஸ் | 160 | 130 | 120-200 | 160 | 160 | 150 |
| பீற்றூட் | 140 | 100 | 100 | 120 | 150 | 100 |
| கறிமிளகாய் | 420 | 300 | 200 | 240 | 240 | 180 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 400 | 400 | 300 | 400 |
| போஞ்சி | 200 | 150 | 180 | 200 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 70 | 80 | 100 | — |
| கீரை - 1 பிடி | 20 | 15 | 20 | 20 | 20 | 150 |
| தேசிக்காய் | 180 | 120 | 200 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 15-25 | 40 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 90 | — | 200 | — | 320 | 200 |
| முள்ளங்கி | 150 | 60 | 80 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 20 | 15 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 40 | 60 | 60 | 50 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா பதவி ஏற்பு 223

அரசு செலவில் இவர் அனுப்பப்பட்டதாக புகார்கள் எழுந்தன. டென்னிஸ் அத்லெட்டிக் வீரரான இவர் இளைஞர்களுக்கான அமைப்பு ஒன்றைத் தொடங்கியிருந்தார்.

அடுத்த மகன் யோஷித கடற்படையில் பயிற்சி பெற்று வந்தவர். 3ஆவது மகன் ரோகித கல்லூரி மாணவன்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு 6 சகோதரர்கள். 3 சகோதரிகள். மூத்த அண்ணன் சமல் ராஜபக்ஷ போக்குவரத்துத்துறை மற்றும் விவசாயத்துறை அமைச்சர். இன்னொரு சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புத்துறை செயலாளர். இன்னொரு சகோதரர் பசில் ராஜபக்ஷ. ஜனாதிபதியின் ஆலோசகர்.

நாட்டில் இவர்கள் வைத்ததுதான் சட்டம். இதனால்தான் நாடு ஒரு குடும்பத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்று ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டினார்.

### புதிய பிரதமர்

பிரதமராக இருந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய பிரதமராக யார் வருவார் என்று கேள்வி எழுந்தது.

இதுவரை ஜனாதிபதியாக இருந்த சந்திரிகாவின் தம்பி அநுர பண்டாரநாயக்கவுக்கு பிரதமர் பதவி கொடுப்பது என்ற திட்டத்தை மகிந்த ராஜபக்ஷ கைவிட்டார். இதனால் தபால் மற்றும் தொலைத்தொடர்பு துறை முன்னாள் அமைச்சர் டி.எம். ஜெயவர்த்தனவுக்கு பிரதமர் பதவி கொடுக்கப்படும் என்ற செய்திகள் வெளியாகின.

ஆனால் கடைசி நேரத்தில் திடீர் திருப்பமாக ஜெயவர்த்தனவுக்குப் பதிலாக விக்கிரம நாயக்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

இராணுவத்தின் புதிய தளபதியாக சரத் பொன்சேகா பதவி ஏற்றார்.

இராணுவத்தின் புதிய தளபதியாக சரத் பொன்சேகா 06.12.2005 அன்று காலை பதவி ஏற்றார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,


சரத்பொன்சேகா

இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் எந்தத் தாக்குதலையும் சந்திக்க தயார் நிலையில் உள்ளனர். கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவத்தினர் இறந்தது குறித்து விடுதலைப்புலிகளைச் சந்தேகிக்கின்றோம். ஏனெனில் இது போன்ற தாக்குதலை நாட்டில் நடத்த வேறு எந்த அமைப்பிற்கும் பலன் இல்லை.

### நவீனமயம்

உலகின் அனைத்து நாடுகளிலும் இராணுவத்தில் நவீன ஆயுதங்களைப் புகுத்தியுள்ளனர். அதிகரித்து வரும் தீவிரவாத பயமுறுத்தலைச் சமாளிக்க நாட்டின் இராணுவத்தினருக்கு நவீன ஆயுதங்கள் தேவைப்பட்டன.

புதிய போர் முறைகளையும் இராணுவத்தில் கொண்டு வர வேண்டும். விடுதலைப்புலிகளும் அரசுக்கும் இடையே உள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.அதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. இவ்வாறு புதிய தளபதி கூறினார்.

### கடும் போர்

இந்த நிலையில் 22-02-2005 அன்று அதிகாலையில் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் கடற்படையினர் 2 படகுகளில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது மீனவர்களின் படகு போல் தோற்றம் அளித்த 10 படகுகளில் விடுதலைப்புலிகள் வந்தனர். அவர்கள் ரோந்து படைகள் மீது சரமாரியாகச் சுட்டனர். கடற்படையினர் திரும்பச்சுடனர்.அங்கு கடும் போர் நடந்தது.


கிளிநொச்சி எல்லை ஆரம்பம்

### 3பேர் கொலை

இதில் கடற்படை வீரர்கள் 3 பேரை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்று கொலை செய்தனர். 7விடுதலைப்புலிகளை கடற்படையினர் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி கடற்படை செய்தித்தொடர்பாளர் ஜெயந்த பெரேரா நிருபர்களிடம் கூறியதாவது,

விடுதலைப்புலிகளின் இந்தத் தாக்குதல் போர் நிறுத்தத்துக்கு . எதிரானது. நாட்டின் முக்கிய நிதி ஆதரவு நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான்,நோர்வே ஆகிய நாடுகளின் விருப்பத்துக்கு எதிராக விடுதலைப்புலிகள் செயற்படுகிறார்கள்.

இந்தத் தாக்குதல் பற்றி நோர்வே சமரசக்குழுவிடம் புகார் செய்வோம். விடுதலைப்புலிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை சர்வதேச அமைப்புக்கள்தான் அறிவிக்க வேண்டும். இவ்வாறு செய்தித் தொடர்பாளர் கூறினார்.

### 39 பேர் கொலை

2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் மட்டும் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 39பேர் பலியானார்கள்.

கடற்படைக்குச் சொந்தமான பேருந்து, 23-12-2005 அன்று மன்னார் மாவட்டத்தில் சென்று கொண்டு இருந்தது. அதில் 30 கடற்படை வீரர்கள் பயணம் செய்தனர்.

பேசாலை என்ற இடத்தில் சென்றபோது நிலத்தில் பதித்து வைக்கப்பட்டு இருந்த கண்ணிவெடி வெடித்தது. இதில் அந்த பேருந்து சிக்கி சின்னாபின்னமாக சிதைந்தது. அதில் பயணம் செய்தவர்களில் 15 வீரர்கள் பலியானார்கள்.18 வீரர்கள் படுகாயத்துடன் உயிர் தப்பினர். அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

### விடுதலைப்புலிகள் மீது புகார்

பலியான 15 பேரின் உடல்களும் மீட்கப்பட்டன. இந்தத்தாக்குதலுக்கு விடுதலைப்புலிகளே காரணம் என்று கடற்படை குற்றம் சாட்டியது.. ஆனால் விடுதலைப்புலிகள் இந்தத்தாக்குதல் குறித்து எந்தக்கருத்தும் தெரிவிக்கவில்லை.

### தமிழ் எம்.பி.

தமிழர் தேசிய கூட்டணியைச் சேர்ந்த எம்.பி.ஜோசப் பரராஜசிங்கம். இவர் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இந்தக் கூட்டணியைத்தான் விடுதலைப் புலிகள் ஆதரித்தனர்.

(தொடரும்)

# வடக்கில் இடம்பெயர்ந்த சிங்கள, முஸ்லிம்களை குடியமர்த்த செயலணி

## 21,663 வீடுகளுடன் அரசியல் உரிமையும் உறுதிப்படுத்தப்படும்

(கொழும்பு)

**வடக்கில் இடம்பெயர்ந்த சிங்கள, முஸ்லிம் மக்களுக்காக 21,663 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதோடு அரசியல் உரிமைகளுடன் அவர்களை மீள் குடியமர்த்துவதற்கு விசேட செயலணியொன்றை அமைப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

அதேவேளை மீள்குடியேற்றம் தொடர்பில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு நடைமுறைப்படுத்திய திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் சுவாமிநாதன் அமைச்சரவைக்கு முன்வைத்த தகவல்கள் குறித்தும் அமைச்சரவை தனது கவனத்தை செலுத்தியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் புதன்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போதே அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான கயந்த கருணாதிலக மேற்கண்ட அமைச்சரவை தீர்மானங்களை அறிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

1980 ஆம் ஆண்டுகளிலிருந்து மோதல்கள் காரணமாக உள்நாட்டில் தமிழ் மக்கள் மட்டுமன்றி முஸ்லிம், சிங்கள மக்களும் இடம்பெயர்ந்தனர். மோதல் முடிவடைந்த நிலையில் அவர்கள் மீண்டும் மீள்குடியேற்றப்பட்டாலும் தேவையான வசதிகள் வழங்கப்படவில்லை.

நீண்ட நாட்களாக இடம்பெயர்ந்து மீள்குடியேற்றுவதற்காக காத்திருக்கும் முஸ்லிம குடும்பங்களுக்கு 16,120 வீடுகள் தேவைப்படுகின்றன. அதேபோன்று சிங்கள குடும்பங்களுக்காக 5543 வீடுகள் தேவைப்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மொத்தமாக 21,663 வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளன.

இம் மக்கள் இடம்பெயர்ந்ததால் அவர்களது வாக்குரிமை, அரசியல் உரிமைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் , பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்த்தல் ஆகியவற்றிலும் சிக்கல்களை சந்திக்க வேண்டியுள்ளதோடு, அரச சேவைகளை பெற்றுக் கொள்வதிலும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளது.

எனவே இந்த மக்களை மீள்குடியேற்றும்போது அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்காக அமைச்சர்களான றிசாத் பதியுதீன், பைஸர் முஸ்தபா ஆகியோரின் இணைத் தலைமையுடன் மாவட்ட உயர் அதிகாரிகள் உள்ளடங்கிய செயலணியொன்றை அமைப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ‘புலியுடன் உறவாடியவரின் நண்பனை நம்புகின்றோம்’

## திஸ்ஸ விதாரண கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பினை பேணிவந்த மற்றும் சர்வதேச நிதி மோசடி குற்றச்சாட்டில் சிறைவாசம் அனுபவித்து வருகின்ற ராஜ் ராஜரட்ணத்தின் நண்பனான மத்திய வங்கியின் புதிய ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியை, நாங்கள் நம்புகின்றோம் என்று, முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ராஜ் ராஜரட்ணத்தின் நிறுவனத்தில் பணியாற்றினார் என்றொரு விடயத்துக்காக மட்டுமே, மத்திய வங்கியின் ஆளுநரை விமர்சிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பொறளையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலஞ்சம் மற்றும் ஊழல்களில் இருந்து மத்திய வங்கியை மீட்டெடுக்கக் கூடிய ஒரு திட்டத்தை புதிய ஆளுநர் கொண்டுவருவார் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். குறித்த நிறுவனத்தில் பணியாற்றியமையை அவர், பகிரங்கமாகவே ஒப்புக்கொள்கின்றார். இவ்வாறான நிலையில், நாடாளுமன்றில் செய்த குற்றங்களை மறைத்துக் கொண்டு செயற்படுகின்றவரை விட, மத்திய வங்கியின் புதிய ஆளுநர் சிறந்தவர் என்றும் அவர் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து கருத்துத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டீ செய்சா, முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநரின் பதவி விலகல் மாத்திரம் அவர் செய்த தவறுகளுக்குத் தண்டனையாகாது. அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு இலங்கைச் சட்டத்தின் படி உரிய தண்டனை வழங்கப்படுதல் வேண்டும். அவரைச் சட்டத்தின் முன்னிறுத்தி உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயலவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# செய்தித்துளிகள்

## மஹா கும்பாபிஷேகம் 14ம் திகதி

குறும்பசிட்டி சித்திவிநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 5.45 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு 13 ஆம் திகதி புதன்கிழமை காலை தொடக்கம் நண்பகல் 12 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறவுள்ளது. (இ-5-136)

## வங்கி ஊழியரென அடையாளப்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்ட நபர் கைது

கல்நெவ - கும்புக்வெவ பகுதியில் அரச வங்கி ஊழியரெனத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவரை நேற்று பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கனேவல்பொல பகுதியைச் சேர்ந்தவரெனத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சந்தேகநபரிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றையும் போலி ஆவணங்கள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றி யுள்ளனர். (இ-10)

## நீரில் மூழ்கிய இரு இளைஞர்கள் பலி

காலி கிங்தொட நதி முகத்துவாரத்தில் நீராடச் சென்ற இளைஞர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரத்கம பகுதியினை சேர்ந்த 18 மற்றும் 28 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவத்தின் போது மூன்று இளைஞர்கள் நீரில் மூழ்கியதாகவும், அவர்களில் ஒருவர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-10)

## புதைக்கப்பட்ட நிலையில் பல இலட்சம் பெறுமதியான கேளர கஞ்சா மீட்கப்பட்டது

கல்பிட்டி - குடாவ கடற்பரப்பில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் 60 இலட்சம் பெறுமதியான கேரள கஞ்சாவினை புத்தளம் பொலிஸ் விசேட பிரிவினர் நேற்று கைப்பற்றியுள்ளனர். கல்பிட்டி விஜய கடற்படை இராணுவ முகாமிற்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பிலே குறித்த 85 கிலோ கேரள கஞ்சா தொகை மீட்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதோடு, இவர்கள் மீனவர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு கஞ்சா கடத்தும் வேலையை முன்னெடுத்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-10)

## மாணிக்கவாசகரின் குருபூசை

யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் இந்துமாமன்றம் நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை இன்று காலை 7.30 மணிக்கு பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் ஆ.சருண்யா தலைமையில் இடம் பெறும். (இ

## அரசாங்க பணியாளர்களுக்கு சொந்த இடம் வழங்கப்படும்


தற்போது வரை சொந்த இடங்கள் இல்லாமல் இருக்கும் அரச பணியாளர்களுக்கு சொந்த இடங்களைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். விரைவில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் வஜிர அபேவர்தன நாடு பூராகவும் உள்ள அபிவிருத்தி பணியாளர்களின் செயற்பாடுகளை அதிகரிக்க எதிர்காலத்தில் எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)







ஓய்வுபெற்ற அதிபர் வி.சிவஞானபோதனின் சமூக சேவையினைப் பாராட்டி அராலி மத்தி பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடத்தப்பட்டது. இதன்போது முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இலவசமாக கற்பித்தல் செயற்பாட்டினை ஆற்றி சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு பங்காற்றும் முகமாக அவருக்கு “கல்விச் சமூகச் செம்மல்” என்னும் கௌரவ நாமம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

(படங்கள் :-அராலி செய்தியாளர்)






அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீராமநாம கானாமிர்தம் இசை வேள்வி 2016 நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் ஆரம்பமான போது.. (படங்கள்:- பொ.சோபிகா)

# மீண்டும் தாக்குதல் நடத்துவோம்; பங்களாதேஷிற்கு ஐ.எஸ். மிரட்டல்

(டாக்கா)

பங்களாதேஷின் தலைநகர டாக்காவில் அண்மையில் நடந்த தாக்குதல், வருங்காலத்தில் நடக்கப் போகும் தாக்குதல்களுக்கான சிறிய முன்னோட்டம் தான் என்று ஐ.எஸ். அமைப்பு மிரட்டல்விடுத்துள்ளது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் உள்ள பிரபல ஹோட்டலுக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தீவிரவாதிகள் புகுந்து கொடூர தாக்குதல் நடத்தினார்கள்.

இதில் பணயக்கைதிகள் 20 பேர், இரண்டு பாதுகாப்புப்படை வீரர்கள் மற்றும் 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். ஒரு தீவிரவாதி உயிருடன் பிடிக்கப்பட்டான். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது.

அந்நாட்டின் வரலாற்றில் இதுதான் மிகவும் கொடூரமான தீவிரவாத தாக்குதல். இந்த தாக்குதலால் அந்த நாடு கடும் அதிர்ச்சியில் உறைந்துள்ளது.

இந்நிலையில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு வெளியிட்டுள்ள காணொலியில், அண்மையில் டாக்காவில் நடந்த தாக்குதல், வருங்காலத்தில் நடக்கப் போகும் தாக்குதல்களுக்கான சிறிய முன்னோட்டம் தான் என்று மிரட்டல் விடுத்துள்ளது.

சிரியாவில் பதிவு செய்யப்பட்டுள்ள அந்த காணொலியில் தோன்றும் நபர் பங்காளம் மற்றும் ஆங்கில மொழியில் பேசியுள்ளார்.

"நாங்கள் வெற்றி பெறும் வரையில் (ஐ.எஸ்.) நீங்கள் தோல்வி அடையும் வரை (பங்களாதேஷம்) திரும்பத் திரும்ப தாக்குதல் நடத்தப்படும். ஷரியா உலகம் முழுவதும் நிலை நிறுத்தப்படும் வரை தாக்குதல்தொடரும்" என்று அநத காணொலியில் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. (இ-10)

# ராஜஸ்தான் வீதி விபத்தில் 13பேர் பலி! 30பேர் காயம்

(ஜெய்ப்பூர்)

இந்திய ராஜஸ்தான் மாநிலம் பில்வாராவில் நடந்த வீதி விபத்தில் நேற்று சிறுமி உட்பட 13 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர்.

பில்வாரா மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் கலந்து கொண்டு உழவியந்திரத்தில் திரும்பிக்கொண்டிருந்த போது மலைப்பாங்கான பகுதியிலிருந்து கற்கள்பைகளை ஏற்றிக்கொண்டு வந்த டிராலி மீது மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு சிறுமி உட்பட 13 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் அஜ்மீர் அரசு வைத்தியசாலை மற்றும் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-10)



# பக்தாத் தாக்குதலில் 250 பேர் உயிரிழப்பு

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நடந்த தற்கொலைப் படை தாக்குதல்களில் பலியானோரின் எண்ணிக்கை, 250 ஆக அதிகரித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடான ஈராக்கின் குறிப்பிட்ட சில பகுதிகளை, ஐ.எஸ்., பயங்கரவாத அமைப்பு, தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இந்த பகுதிகளை மீட்க, ஈராக இராணுவம், அவர்களுடன் சண்டையிட்டு வருகிறது. இந்நிலையில், தலைநகர் பக்தாத்தில், கடந்த வாரம் இரண்டு இடங்களில் தற்கொலை படை பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில், குழந்தைகள், பெண்கள் உட்பட 100 பேர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்களில் பலர், தற்போது உயிரிழந்துள்ளனர். இதையடுத்து, தாக்குதல்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை, 250 ஆக நேற்று முன்தினம் அதிகரித்தது. கடந்த, 2003இல், அமெரிக்க படையினர் ஊடுருவிய பின், ஈராக்கில் நடந்த தாக்குதலில், இவ்வளவு அதிகமானோர்உயிரிழந்துள்ளது இதுவே முதல்முறையாகும். (இ-10)

# மோடி ஆபிரிக்க நாடுகளில் 5 நாட்கள் சுற்றுப்பயணம்

இந்தியப் பிரதமர் மோடி ஆபிரிக்காவின் மொசாம்பிக், தென்னாபிரிக்கா, தன்சானியா, கென்யா ஆகிய நாடுகளில் 5 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். டில்லியில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டுச் சென்ற பிரதமர் மோடி நேற்று மொசாம்பிக் சென்றடைந்தார்.

தலைநகர் மபுடோவில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மொசாம்பிக்கில் அவர் அந்நாட்டு ஜனாதிபதி பிலிப்பே நுசியுடன் பேச்சு நடத்தினார். அத்துடன் அந்நாட்டு நாடாளுமன்றத்துக்குச் சென்று பார்வையிடுகிறார். (இ-10)

# உள்நாட்டில் மனித உரிமை மீறல்; வடகொரிய ஜனாதிபதிக்கு அமெ.தடை



(வோஷிங்டன்)

உள்நாட்டில் மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன்னுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

வடகொரியா மூன்று முறை அணுகுண்டு சோதனையையும், ஒரு முறை ஐதரசன் குண்டுச்சோதனையையும், தொடர்ந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகள் நடத்தி உலக அரங்கில் பரபரப்பையும், கொரிய தீபகற்ப பகுதியில் பதற்றத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

ஒவ்வொரு முறையும் வடகொரியா சோதனை நடத்தும் போது ஐ.நா. மட்டுமல்ல அமெரிக்காவும் தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வந்தது.

இந்நிலையில், உள்நாட்டில் மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. தடை செய்யப்பட்டோருக்கான கறுப்புப் பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளது.

கிம் ஜாங் உன் முதன் முதலாக இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளார். உலகின் அடக்குமுறை நாடுகளில் வடகொரியாவும் சேர்க்கப்பட்டுள்ளது. கிம் ஜாங்-உன்னுடன் உயர் அதிகாரிகள் 10 பேரும் அந்த தடைப்பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

வடகொரியாவின் அரசியல் சிறை முகாமில் உள்ள கைதிகளை சித்திரவதை செய்வது, கொல்வது உள்ளிட்ட குற்றச்செயல்கள் புரிந்ததாக, கிம் ஜாங்-உன் மீது அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. (இ-10)

# 8400 அமெரிக்கப் படையினர் ஆப்கானில் நிலைநிறுத்தப்படுவர்

## ஜனாதிபதி ஒபாமா அறிவிப்பு

(வோஷிங்டன்)

2017 ஆம் ஆண்டு வரையான தனது பதவிக் காலத்தில் 8400 அமெரிக்க படையினரை ஆப்கானில் தொடர்ந்தும் வைத்திருக்க முடிவெடுத்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஆப்கானின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்ந்தும் அச்சுறுத்தல் நிலைமையையே எதிர்நோக்கியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்த வட்டயம் தொடர்பில் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.



தனது பதவிக்காலம் நிறைவடையும் 2017 ஆம் ஆண்டு வரை ஆப்கானில் நிலைகொண்டுள்ள அமெரிக்க படையினரின் எண்ணிக்கையை 8400 ஆக தொடர தீர்மானித்துள்ளதாகவும் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த வருட இறுதியில் அமெரிக்க படையினரின் தொகையை 5500 ஆகக் குறைப்பதற்கு தீர்மானித்திருந்த போதிலும் ஆப்கானில நிலவும் பயங்கரவாத அச்சுறுத்தலை அடிப்படையாகக் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு.
அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.
– சிம்மன்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அடைக்கோழியின் வாலில் காவோலை கட்டும் கலாசாரம்

ஊர்க் கோழிகள் குறித்த அளவு முட்டைகளை இட்டபின்னர் அடைகாக்கும். கோழிகள் அடைகாத்தல் என்பது தன் இனத்தை பெருக்குவதற்கானது.

இருந்தும் கோழிவளர்த்தவர்கள் முட்டைகளை எடுத்துவிடுவத்தால் அடைகாத்தல் என்பது அடைகிடத்தல் என்பதாக மாறி விடுகிறது.

ஆக, முட்டையில்லாமல் அடைகாத்தலை அடைகிடத்தல் என்று நாம் சொல்லிக் கொள்வோம்.

முட்டைகளை இட்டபின் ஓர் ஓய்வாகவும் அடைகிடத்தல் அமைந்து விடுகின்றது.

இருந்தும் கோழிகள் அடைகிடப்பது அதன் உரிமையாளனுக்கு உடன்பாடான விடயமல்ல.

அதனால் கோழியின் அடையை மாற்றுவதற்கு சில நுட்டபங்களை கையாள்வார்கள். அதில் ஒரு முறை கோழிச் செட்டை ஒன்றை எடுத்து அதன் மூக்கில் குத்திவிடுதல்.

இந்த முறையில் அடைமாறுவதற்கு சில நாட்கள் எடுத்துக் கொள்ளும் என்பதால் இதற்கு மாறாக இன்னொரு முறையும் உண்டு.

இதில் அடை கிடக்கும் கோழியின் வாலில் ஒரு காவோலைச் சிறகை கட்டிவிடுதல்.

கோழியின் வாலில் காவோலைத் துண்டை கட்டிவிட்டதும் கோழி மெல்ல நடக்கும். அப்போது காவோலை சத்தம் கேட்கும். சத்தத்தால் பயந்த கோழி ஓடத்தொடங்கும். ஓடத் தொடங்கும் போதே காவோலைத் துண்டின் சத்தம் வேகமெடுக்க கோழியும் தன்னால் முடிந்தளவு ஓடி ஓடி களைப்படைந்து அடைகிடத்தலை கைவிட்டு விடும்.

ஆக, கோழியின் வாலில் காவோலைத் துண்டைக் கட்டி கோழியை பயப்படுத்தி ஓய்வெடுக்க சந்தர்ப்பம் கொடுக்காமல் அடையை மாற்றி முட்டையைப் பெற்றுக் கொள்வதிலேயே கோழியின் உரிமையாளன் கண்ணும் கருத்துமாக இருப்பான்.

அடைக்கோழியின் வாலில் காவோலை கட்டுதல் போன்றவேலைகள் நம் அரசியலிலும் நடக்கிறது.

அதாவது ஆட்சிப்பீடத்தில் இருக்கின்றவர்கள் பல சந்தர்ப்பங்களில் நம் அரசியல்வாதிகளுக்கு காவோலை கட்டுகின்றனர்.

இந்தக் காவோலையைக் கண்டு பயம் கொள்ளும் அரசியல்வாதிகள் உறுதீபட கதைப்பதைத் தவிர்த்து பயத்தால் எதற்கும் சம்மதம் என்று சொல்லும் அளவில் இருக்கின்றனர்.

இந்தப் பயம் எங்களுக்குக் கிடைக்க வேண்டிய பலவற்றை இல்லாமல் செய்துவிட்டது.

இன்றிருக்கக் கூடிய சூழ்நிலையில், தமிழ் மக்களுக்கான ஒரே பலமாக இருக்க வேண்டியது நம் அரசியல் தலைமையின் துணிச்சலே.

இருந்தும் காவோலை கட்டப்பட்ட அடைக் கோழிகள் போல நம் அரசியல் தலைவர்கள் சிலர் இருக்கின்றனர்.

ஒரு சில தலைவர்கள் துணிவோடு சொல்ல வேண்டியதை மிகத் தெளிவாக சொல்லுகின்ற போதிலும் அவர்களை ஓரங்கட்டுவதிலேயே பயந்த –பயந்தது போல நடிக்கும் அரசியல்வாதிகள் முனைப்புக் காட்டுகின்றனர். இந் நிலைமை மிக மோசமானது. இதற்கு முடிவு கட்டாமல் விட்டால் எமக்குக் கிடைத்த துணிச்சல் மிகு அரசியல் தலைவர்களையும் நாம் இழக்க வேண்டிவரும் என்பதால், காவோலை கட்டி எங்களை பயப்படுத்த எவரையும் நாம் அனுமதிக்கக் கூடாது என்பதே நம் தாழ்மையான கருத்து.

இனப் போரில் பலவற்றை இழந்துபோன ஓர் இனத்தின் மீள் எழுச்சிக்கு துணிவும் நிதானமும் ஒற்றுமையும் நேர்மையும் இனப் பற்றுமே முதன்மையானவையாக இருக்கும்.



# சத்திய தரிசனம்

## எதிர்விளைவு பற்றி கவலை வேண்டாம்

❖ நமது தீய எண்ணங்கள், தீய குணங்கள் இவற்றை வெளிவிடுதலே ரேசகம் (வெளிமூச்சு) ஆகும். நல்ல புனிதமான, தெய்வீக உணர்வுகளை உள் நிரப்பிக் கொள்ளுதலே (பூரகம்) ஆகும். அத்தகைய நல்லுணர்வுகளை மனதில் இருத்தி வைத்துக் கொள்ளுதலே கும்பகம் ஆகும். இதுவே ரேசகம், பூரகம், கும்பகம் ஆகியவற்றின் உட்பொருள் ஆகும்.

❖ இந்த உட்பொருள் எனக்குத் தேவையில்லை என்று நினைத்தால் வேறொன்று இருக்கிறது. "ஸோ" என்ற ஒலியுடன் மூச்சை உள்ளிழுக்கிறோம். "ஹம்" என்ற ஒலியுடன் வெளிவிடுகிறோம். எல்லோரும் இதைச் செய்கிறார்கள். விசேடமாக நீங்கள் செய்வதென்ன?

❖ "ஸோஹம்" என்ற ஒலியில் தெய்வீகக் கோட்பாடு இருக்கிறது. "ஸோ" என்றால் அது (தத்) கடவுள். "ஹம்" என்பது நான். அதாவது, "கடவுள் நானே", "கடவுள் நானே" என்று கூறிக்கொள்கிறோம். ஒவ்வொரு நாளும் 21 ஆயிரத்து 600 தடவைகள் "நானே கடவுள்" என்ற மந்திரத்தை சொல்லிக்கொண்டே இருக்கிறோம்.

❖ மனிதப்பிறப்பு கர்மாவினால் இயங்குகிறது. தார்மீகமான செயல்களுக்காகவே இந்த உடல் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நாம் செயறபடுத்துவதற்காகப் பிறந்திருக்கிறோம். நமக்கு இடப்பட்டிருக்கும் கடமையை ஒழுங்காகச் செய்தால் மனித சமுதாயம் நம்மைப் போற்றும். புகழும் வாழ்ந்த வாழ்வின் அடையாளம் காட்டும்.

❖ எந்தக் காரியத்திலும், அதன் பலன்களை எதிர்பார்த்தோ, எடைபோட்டோ, எதிர் விளைவுகள் என்ன என்றோ நினைத்து ஈடுபடாதீர்கள். அன்புடன் அழைத்தால், அன்புடன் மறுமொழி கிடைக்கும். அன்புதான் கடவுள். அன்பிலேயே வாழுங்கள்.



# இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

## நன்றியுணர்வுடன் வாழுங்கள்

❖ இறைவன் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக சிரமப்படுத்துவது இல்லை. சிரமத்திற்குப் பின்னர் இலகுவை இறைவன் உண்டாக்குவான். உண்மையில் சிரமத்துடன் இலகுவும் இருக்கின்றது.

❖ ஒரு பொருள் உங்களுக்கு நன்மையாக இருக்கும் நிலையில் அதனை நீங்கள் வெறுக்கக்கூடும். மேலும், ஒரு பொருள் உங்களுக்குத் தீமையாக இருக்கும் நிலையில் அதனை நீங்கள் விரும்பக் கூடும். (இவற்றை) இறைவன் நன்கு அறிகிறான். ஆனால், நீங்கள் அறிவதில்லை.

❖ இறைவன் உங்களை உங்கள் அன்னையரின் வயிற்றிலிருந்து வெளிக்கொணர்ந்தான் நீங்கள் ஏதும் அறியாத நிலையில்! மேலும், செவிப்புலன்களையும், பார்வைப் புலன்களையும், சிந்திக்கும் இதயங்களையும் உங்களுக்கு வழங்கினான். நீங்கள் நன்றி செலுத்தக் கூடியவர்களாய்த் திகழவேண்டும் என்பதற்காக!

❖ எந்தப் பொருளில் மானக்கேடான தன்மை பொதிந்துள்ளதோ அது அதனைப் பாழ்படுத்தி விடுகின்றது. எந்தப்பொருளில் நாணம் உள்ளதோ அது அதனை ஒளிரச் செய்கிறது.

-வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து

# பௌர்ணமி விழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 6.45 மணியளவில் ஜெயச்சந்திரன் கலையரங்கில் நடைபெறும்.

சி.ஜி.திருமாலழகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது ரூபவாகினி கூட்டுத்தாபன (தமிழ்ப்பிரிவு) ஓய்வு நிலைப் பணிப்பாளர் சிவனடி வன்னியகுலம் வழங்கும் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை சனிக்கிழமை 8 மணியிலிரு ந்து 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் மயிலங்காடு, குப்பிளான் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் ஆனந்தபுரத்திலிருந்த கொக்காவில் வரைக்கும, மத்தியவங்கி, SFHQ இரணைமடு, MAS Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், North Cargill's Agri foods, 7வது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற்லிமிற்ரட், கொக்காவில் இராணுவ படை முகாம் I, கொக்காவில் இரா ணுவ படை முகாம் II, கொக் காவில் இராணுவ படை முகாம் III, றூபவாகினி தொலைத்தொடர்பு கோபுரம், கொக்காவில் இராணுவ முகாம் தொலைத்தொடர்பு கோபுரம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, முருங்கன், முசலிப்பிரதேசம், பரிகாரிக் கண்டல், பூந்தீவுக்கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாச்சிக் குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக்குப்படையான், தம்பட்ட முசலி, மறிசசுக்கட்டி, கூழாங் குளம், புதுவெளி, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத் துறை, CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற் படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப் படும். (இ-9)



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## சரணாகதி, அவமானம், நாணம்

நம் அறிவு இதயத்தைச் சந்திப்பதற்காக தலை வணங்குவதே சரணாகதி.


வணங்காத தலைக்கு மதிப்பில்லை. கர்வம் பிடித்தவர்கள் என்றாவது ஒருநாள் தலையைக் குனிந்தே ஆக வேண்டும். அது வருத்தத்தினால் அல்லது அவமானத்தினால் இருக்கும். வணங்கக் குனிந்த தலை ஒருபோதும் அவமானத்தினால் குனிய நேரிடாது.

அவமானம் "தான்" எனும் கர்வத்தோடு சேர்ந்து வரும். அவமானம் சமூகத்தினால் சுமத்தப்படுவது.

நாணம் அன்பினால் வரும். குழந்தைகள் எப்படி-நாணுகிறார்கள் என்று பாருங்கள்; அது அவர்களுடைய இயற்கை.

அவமானம் குற்ற உணர்ச்சியைத் தருகிறது.

நாணம் உங்களுடைய அழகிற்கு அழகு சேர்க்கிறது. நாணத்தை உங்களிடமே இருத்திக்கொண்டு அவமானத்தை விட்டு விடுங்கள்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## எந்தெந்த தெய்வங்களை வீட்டில் வைத்து வணங்கலாம்?

கலைமகளின் படமும் வீட்டில் வைத்து வணங்கத் தக்கதே. இதனால் குழந்தைகள் மட்டுமல்லாமல் பெரியவர்களுக்கும் பேச்சுத்திறமையும் எழுத்துத்திறமையும் உண்டாகும். நமது வளமான வாழ்விற்கு வாணி வழிகாட்டுவாள். போட்டித் தேர்வுகளில் வெற்றி உண்டாகும்.

லட்சுமியின் எந்த ஒரு படமும் வீட்டில் இருக்கலாம். குபேரனுக்கு அருள்பாலிக்கும் லட்சுமி படமும் லட்சுமி மற்றும் குபேரன் இவர்கட்கு அருள்பாலிக்கும் சிவபெருமானின் படமும் மிகவும் சிறந்தவை. இத்தகைய படங்களை வைத்து வணங்கி வர 16 பேறுகளும் கிட்டும். 8 ஐஸ்வர்யங்களும் உண்டாகும்.

அலமேலுமங்கைத் தாயாருடன் கூடிய வேங்கடேச பெருமாளின் படம் வீட்டில் வைத்து வணங்கி வரலாம். இதனால் செய்தொழிலில் நல்ல வருமானமும் சுகமான வாழ்க்கையும் அமையும்.

மேற்கண்ட படத்துடன் லட்சுமியின் படமும் இருப்பது மிகவும் சிறப்பானது. துர்க்கையின் படம் வீட்டில் வைத்து வழிபாடு செய்வது மிகவும் சிறப்பானது. இதனால் தீமைகள் அழிந்து நன்மைகள் பெருகும். கணவன் மற்றும் மனைவி இடையே ஒற்றுமை உண்டாகும். செய்யும் தொழிலில் மேன்மை உண்டாகும். வியாபாரம் பெருகும்.

அன்னம் பாலிக்கும் அன்னபூரணியின் படம் நாம் அவசியம் வீட்டில் வைத்து வழிபாடு செய்தல் மிகவும் சிறப்பானது. இதன் மூலம் வறுமை அகலும். பசி பட்டினி பஞ்சம் தீரும். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு கண்டிப்பாக வேலை கிடைக்கும். சித்தர்கள், மகான்கள், முனிவர்கள், யோகிகள் ரிஷிகள் இவர்களின் படங்களையும் வழிபடலாம்.

# யாழ்.பிறீமியர் லீக் வெற்றிக்கிண்ணம் - 2016

# கே.சி.சி.சி. இறுதிச் சுற்றில் முதலாவது வெற்றி




யாழ். பிறீமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்காக யு.ஆர்.பவுண்டேசன் நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிச்சுற்றின் 2 ஆவது போட்டியில் கே.சி.சி.சி. அணி ஸ்கந்தாஸ்ரார் அணியை 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று இறுதிச் சுற்றில் தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 19.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களை பெற்றது. கஜீவன்-10, சயந்தன்-27, விஷ்ணு-29 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் ராகுலன், ஜெயரூபன், சாமீபவன், பவித்திரன் தலா ஒரு இலக்கினையும் உத்தமன் 04 இலக்குகளையும் கைப்பறினர். 104 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய கே.சி.சி.சி. அணி 9.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 104 ஓட்டங்களை பெற்றனர்.

கே.சசீகரன்-11, ஜெயரூபன் ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களை பெற்றனர். இப்போட்டியின் சிறந்த வீரராக ஜெயரூபன் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 7 ஆவது வருடமாக தொடர்ந்து நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக தெரிவு நிகழ்விற்கு கே.சி.சி.சி. அணி 4.13 புள்ளிகளையும் ஸ்கந்தாஸ்ரார் அணி 1.76 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

## தீருவில் அணியை வீழ்த்தி

### றெயின்போ அடுத்த சுற்றுக்கு தகுதி



அமரர்களான கந்தசாமி, குகதாஸ் ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் தீருவில் அணியை எதிர்த்து றெயின்போ அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தீருவில் 14 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 40 ஓட்டங்கள் பெற்றது. தீருவில் சார்பில் தாஸ் 6 ஓட்டங்கள், றெயின்போ சார்பில் ஸ்ரீகரன் 5 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றெயின்போ அணி 12 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 41 ஓட்டங்கள் பெற்றது.

றெயின்போ சார்பில் பிரகாஸ் 11 ஓட்டங்கள், தீருவில் சார்பில் திருக்குமரன் 2 விக்கெட்டுகள் கைப்பற்றினர். றெயின்போ அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (க)

## திக்கம் இளைஞர் வி.கழகம் நடத்திய

## யாழ். மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

### சென்.மேரிஸ் சம்பியன்












யாழ். மாவட்ட ரீதியாக 60 அணிகளுக்கிடையே திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய தொடரில், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாக முடிசூடிக் கொண்டது.

சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே இடம்பெற்ற இறுதிப்போட்டியில், 2:0 என்ற கோல்கணக்கில் விண்மீன் விளையாட்டுக்கழகத்தை தோற்கடித்த, நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாக முடிசூடிக் கொண்டது.

இப்போட்டியின் 15ஆவது நிமிடத்தில் நிதர்சன் ஒரு கோலினைப் போட்டு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்கு முன்னிலையை வழங்கியதுடன் போட்டியின் 40 ஆவது நிமிடத்தில் நிரோஜன் (அன்ரனி ஜெனற்) போட்டு கோலின் மூலம், அவ்வணி தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டது. இவ்விறுதிப் போட்டியின் நாயகனாக சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் நிரோஜன் தெரிவாகியிருந்தார்.

இதேவேளை, இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்துக்கும் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையிலான மூன்றாமிடத்துக்கான போட்டியில், 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்ற யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம், மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தது.

இத்தொடரின் நாயகனாக சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தின் நிதர்சன் தெரிவாகியதோடு, தொடரின் சிறந்த கோல் காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த சிந்துஜன் தெரிவானதோடு, தொடரின் வளர்ந்து வரும் வீரராக யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தைத் சேர்ந்த சுபன் தெரிவானதோடு, மக்கள் மனம் கவர்ந்த வீரராக சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தின் மதிவதனன் தெரிவானதோடு, தொடரின் வளர்ந்து வரும் விளையாட்டுக் கழகமாக வரணி யூத் விளையாட்டுக் கழகம் தெரிவானதோடு, தொடரின் சிறந்த நன் நடத்தையை வெளிப்படுத்திய கழகமாக, மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் தெரிவானது. (க)

## வடக்கு மாகாண ரீதியிலான

## வடமராட்சியில் கிரிக்கெட் தொடர்

### விண்ணப்பிக்குக

Boc அனுசரணையுடன் v.k மற்றும் காந்தியூர் நண்பர்கள் இணைந்து நடத்தும் வடமாகாண ரீதியிலான மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டி எதிர்வரும் 16,17 ஆம் திகதிகளில் காந்தியூர் இளம்பிறை மற்றும் பருத்தித்துறை வீனஸ் மைதானங்களில் இடம்பெறவுள்ளது.

இதில் வெற்றி பெறும் அணிக்கு முதலாம் பரிசாக 30 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளன. இரண்டாம் பரிசாக 15 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளன.

மேலும் ஆட்டநாயகன், தொடர் ஆட்டநாயகனுக்கான விருதுகள் வழங்கப்படும். பதிவுகளை உறுதிப் படுத்தும் அணிகள் மாத்திரமே போட்டியில் பங்குபற்ற முடியும். பங்குபற்றும் அணிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள் ளுங்கள். அனுமதிக் கட்டணமாக ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படும். தொடர்புகளுக்கு: 077 526 2615, 077 261 0019, 077 834 4298, 077 253 3440. (க)

## கில்லறி சுப்பர் 8 இற்கு தகுதி

எவறெஸ்ட் வி.க.நடத்தும் வட மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வரிசையில் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை 0-3 என்ற ரீதியில் வீழ்த்தி சுப்பர் 8 இற்கு உள்நுழைந்தது மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகம் . (கு)



## இராணுவ வசமிரு...

வலி வடக்கு பகுதியில் 3 ஆம் கட்டமாக 236 ஏக்கர் காணி கடந்த மாதம் விடுவிக்கப்பட்டது. அந்தவகையில் கட்டுவன், குரும்பசிட்டி பகுதியில் 126 ஏக்கரும், வறுத்தளைவிளான் பகுதியில் 12 ஏக்கரும், காங்கேசன்துறை பகுதியில் 125 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டது.

இதில் வல்லை- அராலி வீதியில் கட்டுவன் சந்திப் பகுதி உள்ளடக்கப்படவில்லை. இதற்கு பதிலாக பொதுமக்களின் தனியார் காணியின் ஊடாக பாதை அமைக்கப்பட்டது. காணிகளின் உரிமையாளர்கள் பாதை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் பொதுமக்களின் பாவனைக்கும் பேருந்து போக்குவரத்துக்கும் கடினமாக இருப்பதனால் குறித்த கட்டுவன் சந்தி வரையான வீதியை விடுவிக்குமாறு அரச அதிகாரிகளால் இராணுவத் தளபதியுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டது.

அந்தவகையில் கட்டுவன் சந்தி வரையிலான வீதியை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்து நேற்றையதினம் குறித்த வீதி உள்ளடங்கிய 25 ஏக்கர் நிலப்பரப்பை விடுவித்துள்ளனர் என அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## தம்பதியினருக்கு...

எஸ்.லெனின்குமாரின் முன்னிலையில் இருவரும் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரையும் தாம் கைதுசெய்யவில்லை என வவுனியா பொலிஸார் முன்னர் தெரிவித்திருந்த போதிலும், குறித்த முன்னாள் போராளிகளை அவர்களே நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

முன்னாள் போராளியென தெரிவித்து அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் குறித்த தம்பதியினர் கடந்த 5-ம் திகதி கைதுசெய்யப்பட்டதாக, அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

இதனடிப்படையில் குறித்த முன்னாள் போராளிகளான தம்பதியினரை பிணையில் விடுதலை செய்ய பொலிஸார் இணக்கம் வெளியிட்டிருந்த நிலையில் அவர்களை நீதிபதி பிணையில் விடுவித்துடன்,

இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். இந்நிலையில் கிராமசேவகர் உறுதிப்படுத்திய சான்றிதழை சமர்ப்பித்து இன்று வெள்ளிக்கிழமை சந்தேககிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் இருவரையும் அழைத்துச் செல்லுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-281)

## பொருளாதார மத்தி...

இது தொடர்பிலான விபரம் வருமாறு,

வட மாகாணத்திற்கான பொருளாதார மத்திய நிலையம் அமைத்தல் தொடர்பில் துறை சார்ந்தவர்களுடனான கலந்துரையாடல் நேற்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம டேவிட் வீதியிலுள்ள மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் மக்கள் பேரவையின் சமூக, பொருளாதார வலுவூட்டலிற்கான உபகுழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கலந்துறையாடலில் துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலின் போது பின்வரும் முன்மொழிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

வட மாகாணத்திற்கான பொருளாதார மத்திய நிலையம் வன்னிப் பெருநிலப்பரப்பின் மத்திய பகுதியான மாங்குளத்தில் அல்லது அதனை அண்டிய பகுதியில் அமைவதே பொருத்துடையது ஆகும்.

வட மாகாணதுக்கான பொருளாதார மத்திய நிலையம் என்பதால் வடக்கு மாகாணத்தின் மத்திய பகுதியில் அமைவது அதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை வட பகுதி மக்கள் அனைவரும் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். அதேநேரம், இப்பிரதேசம் எதிர்காலத்தில் பல்துறைசார் அபிவிருத்தியை எட்டுவதற்கும் வாய்ப்பாக அமையும்.

எனினும், தற்போதைய சூழ்நிலையில், பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக்குளத்திலா அல்லது ஓமந்தையிலா அமைவது பொருத்தப்பாடானது என்ற அடிப்படையில் தமிழ அரசியல் தரப்பில் வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ள நிலையில், தமிழர்நலன்சார்ந்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு நாம் வரவேண்டிய தேவை உள்ளது.

எனவே, அமையப் பெறும் பொருளாதார மத்திய நிலையம் வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கியதாக முல்லைத்தீவு வவுனியா மாவட்ட விளிம்பில் அமைவதே பொருத்தப்பாடுடையது என்பதால், ஓமந்தையில் அமைவதே அடுத்த சிறந்த தெரிவாக இருக்க முடியும். இத்தெரிவு, பொருளாதார மத்திய நிலையத்தின் எதிர்கால விரிவாக்கத்திற்குத் தேவையான நிலப்பிரதேசத்தை கொண்டுள்ளது.

எனவே வட பகுதி மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நன்மை கருதி பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதற்கு அனைத்து தமிழ் அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் கேட்டுநிற்கின்றோம்.

அத்துடன், பொருளாதார மத்திய நிலையத்தின் அமைவிடத்தை வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிப்பது என்பது ஒரு ஆரோக்கியமான விடயம் அல்ல என்பதையும், இது ஒரு அறிவு பூர்வமாக அணுகப்படவேண்டியது என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என துறைசார்ந்தவர்களால் கருத்துக்கள் பகிரப்பட்டிருந்தன. (செ)

## யாழ்.போதனாவில்...

வைத்தியசாலை சத்திரசிகிச்சை கூட பொறுப்புத்தாதி மீது 14.06.2016 அன்று பொய்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

பின்னர் ஆரம்ப விசாரணை நடைபெற்று சிறுகுற்றமாக கருதப்பட்டு அவர் மீண்டும் சத்திரசிகிச்சை கூடத்தை பொறுப்பேற்குமாறு 24.06.2016 அன்று பணிப்பாளரால் கடிதம் வழங்கப்பட்டது.

27.06.2016 அன்று வைத்திய சங்கத்தால் நடத்தப்பட்ட பணிப்புறக்கணிப்பை தொடர்ந்து அதே ஆரம்ப விசாரணையின் அடிப்படையில் சத்திரசிகிச்சை கூடத்திலிருந்து வெளியேறி தாதியர் பரிபாலக அறையில் கடமையாற்றுமாறு 28.06.2016 அன்று பணிப்பாளரால் கடிதம் வழங்கப்பட்டு மீண்டும் அந்த பொறுப்புத்தாதி சத்திரசிகிச்சை கூடத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

அத்துடன் பாரிய தாதிய பற்றாக்குறையுடன் இயங்கிவரும் சத்திரசிகிச்சைக்கூடமும் இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாடுகள் அனைத்தும் ஆரம்ப விசாரணையை கேள்விக்குறியாக்கும் நடவடிக்கையாகவும் தாதியர்கள் மீது அதிகாரங்களை பயன்படுத்தி நோயாளர்களின் சத்திரசிகிச்சைகள், பராமரிப்புக்கள் குழப்பப்படுவதற்கான முயற்சியாகவும், வைத்தியசாலை நிர்வாகத்தின் நியாயமற்ற பக்கச்சார்பான நடவடிக்கையாகவும் எம் தாதியர்கள் அனைவரும் கருதுவதுடன் நீண்ட காலமாக இழுபறி நிலையிலிருக்கும் இப்பிரச்சினையில் எமது தாய்ச்சங்கம் தலையிட்டுள்ளதுடன் இன்று (நேற்று) 07.07.2016 மாலை வரை வைத்தியசாலை நிர்வாகத்திற்கு கால அவகாசம் வழங்கியுள்ளது.

உடனடியாக குறித்த பொறுப்புத்தாதி சத்திரசிகிச்சை கூடத்தை பொறுப்பேற்க அனுமதிப்பதுடன், சத்திரசிகிச்சை கூடத்தை இரண்டாக பிரிப்பதை நிறுத்துமாறும் கோரி நாளை (இன்று) காலை 08.07.2016 ஏழு மணிக்கு தாதியர்கள் அனைவரும் தொடர் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இதன்போது அவசர உயிர் காக்கும் நடவடிக்கைகளில் மட்டும் எமது தாதியர்கள் ஈடுபடுவர். அத்துடன் இதனால் நோயாளர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம். இப் போராட்டத்துக்கு அனைவரது ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

## "மீனவர் பிரச்சி...

னர் பிரதமரிடம் வினா தொடுக்கும் நேரம் ஆரம்பமாகியது.

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிப்பதற்கான அனுமதி அளிக்கப்படும் என பலதரப்பிலிருந்து தகவல்கள் வெளியிடப்படுகின்றதன் உண்மைத்தன்மை தொடர்பில் ஜே.வி.பியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க இதன்போது கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மீனவப் பிரச்சினைக்காக இந்தியாவுடன் போர் தொடுக்க முடியாது என்று கூறினார்.

சபையில் தொடர்ந்தும் பதிலளித்த பிரதமர், இலங்கை - இந்திய மீனவப் பிரச்சினைக்கு இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி இராஜதந்திர ரீதியிலேயே தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதோடு இந்த வருட இறுதிக்குள் சரியான தீர்வொன்று எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

அதேவேளை இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களை அனுமதிக்க முடியாது என்பதோடு இந்திய ரோலர் படகுகளை அனுமதிக்க முடியாத நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருக்கின்றது என்றும் பிரதமர் தெளிவுபடுத்தினார். (செ-11)

## போர்க்குற்றங்...

பில், நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்த இலங்கை இராணுவத்தினரை பழிவாங்குவதற்காகவே இந்த ஆணைக்குழுவை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

சர்வதேச அழுத்தங்களுக்கு அமைய அரசாங்கம் இதனை நியமிக்கவுள்ளதாக தெரிவித்த விமல் வீரவன்ஸ, வெளிநாட்டு நீதிபதிகள் இந்த ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படவுள்ளதாக குற்றம்சாட்டினார்.

இந்த ஆணைக்குழுவின் மூலம் நாட்டின சுதந்திரம் பறிக்கப்பட்டு தேசிய பாதுகாப்பு மிகப் பெரிய அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் அபாயம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த ஆணைக்குழு சம்பந்தமாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, இலங்கை இராணுவத்தின் நன்மதிப்பை காப்பதற்கு, குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்வது அவசியமென்று தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்துக்களை தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் இராணுவத்தினருக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்வதற்கு உள்நாட்டில் தகுந்த நீதிமன்ற கட்டமைப்பொன்று இருப்பதாக தெரிவித்தார். (செ-11)

## வடக்கில் பொலி...

தாக 4 முறைப்பாடுகளும், ஏனைய வகையில் ஒரு முறைப்பாடும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் உள்ள பொலிஸாருக்கு எதிராக 3 முறைப்பாடுகளும், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொலிஸாருக்கு எதிராக 2 முறைப்பாடுகளும், பருத்தித்துறை பொலிஸ்நிலைய பொலிஸாருக்கு எதிராக 2 முறைப்பாடுகளும், வட்டுக்கோட்டை பொலிஸ்நிலைய பொலிஸாருக்கு எதிராக 2 முறைப்பாடுகளும், வவுனியா பொலிஸ்நிலைய பொலிஸார், மானிப்பாய் பொலிஸ்நிலைய பொலிஸார், தெல்லிப்பளை பொலிஸ்நிலைய பொலிஸார், கனகராயன்குள பொலிஸ்நிலைய பொலிஸார், யாழ்ப்பாண பொலிஸ்நிலைய பொலிஸார், அச்சுவேலி பொலிஸ்நிலைய பொலிஸார் ஆகியோருக்கு எதிராக தலா ஒரு முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் 7 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டும் ஏனைய 8 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதே போன்று கடந்த 2015 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் பொலிஸாருக்கு எதிராக 19 முறைப்பாடுகள் பொதுமக்களால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## பிள்ளையானுக்கு பிணை மறுப்பு



(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின தலைவரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், மாகாண சபை உறுப்பினருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பிள்ளையானுக்கு பிணை வழங்க மறுத்த நீதிமன்றம், அவரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட பிள்ளையானை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராசா நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார். இதனையடுத்து அவர் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பிள்ளையான் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொணடிருந்த போது நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இந்.மீனவர்கள் 16 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பினுள் மூன்று விசைப்படகுகளுடன் நுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்ட 16 இந்திய மீனவர்களை காங்கேசன்துறை மற்றும் தலைமன்னார் கடற்படையினர் நேற்று வியாழக்கிழமை கைது செய்துள்ளதாக கடற்படை ஊடகபேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்தார்.

கைதான அனைவரும் தமிழ்நாடு மாநிலம் இராமேஸ்வரம் பகுதியினை சேர்ந்த மீனவர்கள் என அவர் உறுதிப்படுத்தினார். தலைமன்னாருக்கு மேற்கே 2 படகுகளுடன் நுழைந்து மீன்பிடித்த 11 மீனவர்களை தலைமன்னார் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அத்துடன், நெடுந்தீவுக்கு தெற்கே ஒரு விசைப்படகுடன் நுழைந்து மீன்பிடித்த 5 மீனவர்கள் உள்ளிட்ட 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஊடகபேச்சாளர் மேலும் கூறினார். (செ-11)

## மகிந்த தலைமையில்...

சொய்ஸா நியமிக்கப்பட்டுள்ளார்.

நிழல் துறைமுகங்கள் துறை அமைச்சராக குமார வெல்கமவும், தொழில் அமைச்சராக காமினி லொக்குகேயும் நியமனம் பெற்றுள்ளனர்.

நிழல் கிராமிய கைத்தொழில் அமைச்சராக எஸ்.எம்.சந்திரசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவா விமல் வீரவன்ஸவுக்கு வீடமைப்புத்துறைக்கான நிழல் அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

பிவிருது ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில, நீதி மற்றும் சமாதானத துறை நிழல் அமைச்சராக பெயரிடப்பட்டுள்ளார். (செ-11)

## RAVEENS EMC - KARAVEDDY

GRADE 6 - 11 (ENGLISH MEDIUM)
EXAM PAPERS FOR TERM : 2 - 2016

**AVAILABLE NOW**
via www.raveensemc.com

☎ 021 226 3321 admin@raveensemc.com

---

## காணி விற்பனைக்கு

ஓட்டுமடம் சந்தியில் இருந்து அராலி வீதிக்கு செல்லும் றோட்டில் கல்லுண்டாய் வைரவர் கோவிலில் இருந்து 200M தூரத்தில் 46 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-
**077 443 4501**

---

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

---

## Architectural CAD Center

Prsonal and Group Classes
Jaffna - Vavuniya - Colombo

# Auto CAD

2D-drawing & 3D Modeling

Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD [Software (2D &3D)]
University of Peratheniya
Cert. in Auto CAD [Advance 3D - Modeling]
University of Moratuwa
Cert. in Auto CAD [2D-Drawing & 3D-Modeling]
Open University of Sri Lanka
Cert. in Auto CAD(1st Class)[2D&3D]
University of Colombo

Link:0775116320-0718617972

(C-5133)

---

## வேலைவாய்ப்பு

எமது புதிய ANDRA PUBLICATIONS நிறுவனத்திற்கு கீழ்க்காணும் அனுபவமுள்ள பணியாளர்கள் உடன் தேவை!

1. Cashier (கணனி அறிவுள்ளவர்கள் மட்டும்)
2. Senior Graphic Designer
3. Book Layout Designer
4. Marketing Executive

(C-5134)

கட்டாய தகைமைகள்:

- இரண்டு வருட அனுபவமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

சனிக்கிழமை (09.07.2016) காலை 9.00மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

ANDRA PUBLICATIONS 379,Kasthuriyar Road, Jaffna
0776622981 | 0777481696

---

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

## பிரெஞ்சு மொழி





- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின்கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRENCH இல் உள்ளது.
- CERTIFICATES & INTERNATONAL DIPLOMA (DELF) பெறலாம்.

ஆரம்பம் விரைவில், உடன் அழைத்துப் பதியவும் (5126)

**021 222 8093**
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

---

## Dutch, Deutsch, French

தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழி கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

அனைத்து புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன

**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0213216928, 077 4842 464 (Gov. Reg: W/A 76795)

(C-5111)

---

## CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு



10th Batch start on :- 09.07.2016

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி

வேலைவாய்ப்பு உத்தரவாதம் *
(*Conditions apply)

ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000

(C-5138)

---

## முதலும் கடைசியும் இன்று மட்டும் 8ந் திகதி மட்டும் (வெள்ளிக்கிழமை)
## 08.07.2016 பத்துமணி நேரம் மட்டும் காலை - 10.00 முதல் இரவு 8.00 மணிவரை

யாழ்ப்பாணப் பெண்களுக்கு பொற்காலம் பிறந்திருக்கு இரண்டு நாளாளில்தங்கமுலாம் பூசப்பட்ட ஜெய்புரி குந்தன், மும்பாய் கிறிஸ்டல் ஆஸ்திரேலியாமற்றும் அமெரிக்கன் டயமண்ட் ஜுவலரிகளை நம்பமுடியாத விலைகளில்கொள்வனவு செய்ய பொன்னான வாய்ப்பு

# 100/=, 200/=, 300/= வில்

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் உங்களுக்கு பிடித்த டிசைன்களை தெரிவு செய்து 100/=, 200/=, 300/= ஐ செலுத்துங்கள்

இந்த விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.

| | | | |
|---|---|---|---|
| • கொரியன் ஸ்டேன் ஸ்டட்ஸ் | ரூ.100/= Only | • கொரியன் ஸ்டோன் சாரி பின் | ரூ.300/= Only |
| • கோல்ட் கவரிங் செயின் பென்டன்ட் | ரூ.100/= Only | • ஆஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செட் | ரூ.300/= Only |
| • ஆஸ்திரேலிய டயமண்ட் மோதிரம் | ரூ.100/= Only | • கோல்ட் பிளேட் வலையல் செட் | ரூ.300/= Only |
| • வெஸ்டன் ஸ்டைல் இயரிங் | ரூ.100/= Only | • கோல்ட் பிளேட்ட் செயின் | ரூ.300/= Only |
| • அமெரிக்கன் டயமண்ட் காதனி | ரூ.100/= Only | • ஆஸ்திரேலியன் டயமண்ட் ஆண்கள் மோதிரம் | ரூ.300/= Only |
| • கோல்ட் கவரிங் ஆண்கள் மோதிரம் | ரூ.200/= Only | • ஆஸ்திரேலியன் டயமண்ட் பிரேஸ்லட் | ரூ.300/= Only |
| • ஆண்கள் லொக்கட் செயின் | ரூ.200/= Only | • சில்வர் பிளேட் கால் கொலுசு | ரூ.300/= Only |

இடம் : மயிலூரான் திருமண மண்டபம் [நல்லூர் முருகன் கோவில் அருகில்] / இலக்கம் 590/5, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**அனுமதி இலவசம்** தொ: 0776047788 விற்பனை பெண் பிரதிநிதிகள் தேவை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.